கல்கி

KALKI
21.12.86
ரூ. 1.50



கரையில் நின்னு சமுத்திரம் பார்த்த பாக்யராஜ்!



நேரம்: நள்ளிரவிற்கு இந்தப் பக்கம். இடம்: பாக்யராஜ் விட்டு மாடி ஹால்.

''காவடிச் சிந்து படத்துக்கு நீங்களே மியூசிக் போடற அதிகப்படி வேலையையும் ஏன் இழுத்து விட்டுக்கணும்?'' என்று பேட்டி ஆரம்பிக்கிறோம்.

''தேவையில்லாத சமாசாரம்தான். இளைய ராஜா சரியான மரியாதை கொடுக்காததைப் பத்தி ஏற்கெனவே மத்த பத்திரிகைல சொல்லிட்டேன். (சற்றே அடிபட்ட வலியுடன்) ஒவ்வொரு மனுஷனுக்கும் சின்னதா ஒரு பிரஸ்டீஜ் இருக்குங்க. அதை டச் பண்ணிட்டதால அப்படியென்ன இது பெரிய விஷயமா, ட்ரை பண்ணுவோம்னு இறங்கிட்டேன். எனக்கு மியூசிக் வராட்டி இளைய ராஜா'கிட்ட போய் அடி பணியவும் தயாராகத்தான் இருந்தேன். நானே மியூசிக் போட ஆரம்பிச்சதால **money waste, time waste, energy waste** என்று எனக்குத் தெரியும். ஆனா ஒண்ணு, கைவெச்சாச்சுன்னா அதை கரெக்டா செய்யணும். முடிஞ்ச வரைக்கும் என்ன முயற்சி பண்ணணுமோ அதைப் பண்ணிடுவோம்னுதான் இதில் நேரத்தைச் செலவிடறேன். இதை ஒரு தொழிலாகவோ, லட்சியமாகவோ எடுத்துக்கிட்டுச் செய்யணும்னு நெனைக்கலே.''

''நீங்க வெளியிட்டிருக்கிற காவடிச் சிந்து காஸெட் ஆரம்பத்தில எம்.எஸ். விஸ்வநாதனுக்கும், சங்கர்—கணேஷ் அவர்களுக்கும் நன்றின்னு சொல்லியிருக்கீங்க. சில பாடல்களுக்கு அவங்க மெட்டமைச்சே குடுத்தாங்களோ என்கிற மாதிரி ஐடியா வருது. எந்த விதத்திலே அவங்க ஹெல்ப் பண்ணாங்க?''

''அதாவது விஸ்வநாதன் அண்ணன் பெரிய மனசோட ஆசிர்வாதம் பண்ணாரு.. முத நாள் எங்க வீட்டு பெட் ரூம்ல வச்சி அவருக்கு 'ஹம்' பண்ணிக் காட்டினேன். அப்ப எனக்கு ஆர்மோனியம்கூட வாசிக்கத் தெரியாது. விஸ்வநாதன் அண்ணன் ஹம்மிங்கை கேட்டு, 'நல்லாருக்கு. நாளைக்கு பூஜைக்கு வரேன்'னாரு. அதோட சரி, இன்னொரு சந்தர்ப்பத்திலே, நாலு பாட்டு ரெகார்டிங் ஆயிடுச்சு. அப்ப வந்து நான் போட்டுக்கிட்டிருந்த பின்னணி இசையைக் கேட்டாரு. கரெக்ட்டாத்தான் இருக்குன்னாரு. வேறே பார்ட்டிசிபேஷன் கிடையாது. எம்.எஸ்.வி.யோட அஸிஸ்டெண்ட் கிருஷ்ணமூர்த்தி இருக்காரில்ல, அவரை மொத ரெண்டு பாட்டுக்குக் கூப்பிட்டுக்கிட்டேன். அவ்வளவுதான். சங்கர்—கணேஷ் பொறுத்தவரைக்கும் ரொம்பப் பெரிய மனசோட ஒத்துழைச்சாங்க. தொழில் ரீதியான பொறாமை கொஞ்சமும் இல்லாம, வேறே ரிகார்டிங் இருந்தாக்கூட அவங்க ஆளுங்களை அனுப்பி வெச்சாங்க. அவங்க ட்ரூப் அஸிஸ்டெண்ட் தாஸ்னு ஒருத்தர் இருக்கார் பாருங்க, அவரை வெச்சுக்கிட்டு வொர்க் பண்ணினேன். அதுவுமில்லாம மொத மொதல்ல நான் சங்கர்—கணேஷ் கிட்ட 'ஹம்' பண்ணிக் காட்டின போது, 'சரியா இருக்கு நீங்க தாராளமா மியூசிக் போடலாம்'னு நம்பிக்கையூட்டினதே அவங்கதான். நீங்க நினைக்கிற மாதிரி ட்யூனுக்கோ பின்னணி இசைக்கோ விஸ்வநாதன் அண்ணனும், சங்கர்—கணேஷும் ஹெல்ப் பண்ணலே. அடுத்தவங்களை வெச்சுக்கிட்டு நான் பேர் வாங்கணும்னு எறங்கியே இருக்க மாட்டேன். என்னிக்கு இருந்தாலும் ஒரு நாளைக்கு அது வெளியிலே தெரிஞ்சிடத்தானே போவுது?''

''இப்ப எவ்வளவு தூரம் மியூசிக் பத்தித் தெரிஞ்சிருக்கிறதா நெனைக்கறீங்க?''

''சொல்லப் போனா, சமுத்திரத்தில வந்து கரை ஓரமா நின்னு கால் பாதி நனைஞ்சி பாதி நனையாம இருக்குது பாருங்க. அவ்வளவு தான் எனக்குத் தெரிஞ்சிருக்கு. அப்படின்னா சமுத்திரத்தில இன்னும் எவ்வளவு தூரம் போகணும்னு நீங்களே பார்த்துக்குங்க.''

— ஜெயமன்மதன்



* மாணவிகளுடன் சாரதா ஹாஃப்மன்.

பஞ்சாபி முருகனும்;

டிசம்பர் மாதம் வந்தாலே கலாக்ஷேத்ராவில் தனியான களை கட்டிவிடும். மழையில் குளித்த மரங்கள் மகிழ்ச்சியோடு பசுமையைப் பறைசாற்றும்; சின்னக் குளங்களில் மலர்ந்துள்ள செவ்வல்லி மலர்களோடு நீர் வாழ்ப் பறவைகளின் பனிர் வெண்மை போட்டி போடும்; வண்ண வண்ணப் பட்டுப் பூச்சிகள் சிறகடிக்கும். மாணவியரும் ஆசிரியர்களும் குதூகலமான சுறுசுறுப்போடு வளைய வருவார்கள். அவர்கள் முகத்தில் ஆவலும் ஆழ்ந்த ஈடுபாடும் தெரியும். வீணை, புல்லாங்குழல், மிருதங்கம் போன்ற இசைக் கருவிகளின் இழைந்த இசைக்கும், தட்டுக் கழியின் தாள கதிக்கும் ஏற்ப சலங்கை அணிந்த பாதங்கள் ஆடும் இனிய ஓசை பின்னணியில் கேட்கும்.

இந்த வருடம் இந்த இனிய சூழ்நிலையில் ஒரு கூடுதலான பரபரப்பு கலந்திருப்பதை உணர முடிந்தது. கலாக்ஷேத்ராவின் பொன் விழா ஆண்டை விசேஷமான கலைவிழாக் கொண்டாட்டத்தோடு நிறைவு செய்ய வேண்டிய நேரம் நெருங்கி விட்டது.

இந்தத் தருணத்தில் ருக்மிணி தேவியின் அரவணைப்பும் வழிகாட்டலும் இல்லாமல் இருப்பது ஒரு பெரிய குறையாகவே தோன்றினாலும் அவர் திட்டமிட்டிருந்தபடியே ஒரு புதிய நாட்டிய நாடகத்தை உருவாக்கி இவ்வருடம் அரங்கேற்றி விட வேண்டும் என்று கலாக்ஷேத்ராவைச் சேர்ந்தவர்கள் உறுதி பூண்டுள்ளனர். தம் வாழ்க்கையை கலாக்ஷேத்ராவுக்காக, கலைக்காக, அர்ப்பணித்து அவற்றின் வளர்ச்சியில் எல்லையற்ற மகிழ்ச்சி கொண்ட ருக்மிணி தேவிக்கு இந்தப் புதிய நாட்டிய நாடகமே தக்க நினைவாஞ்சலியாக அமைய முடியும் என்று தீர்மானித்தனர். அதனை உருவாக்கும் பொறுப்பு சாரதா ஹாஃப்மனிடம் ஒப்படைக்கப்பட்டது. இவர் கலாக்ஷேத்ராவின் முதல் மாணவிகளுள் ஒருவர். அனுபவ முதிர்ச்சியோடு பல ஆண்டுகளாக அங்கு ஆசிரியையாகப் பணியாற்றி வருகிறார்.

கந்த புராணம் என்ற மாபெரும் தமிழ்க் காப்பியத்திலிருந்து தேர்ந்தெடுத்த பாடல்களைத் தொகுத்து இரண்டரை மணி நேரம் "முருகன் திருவருள்" என்ற தலைப்பில் நாட்டிய நாடகமாக்கியுள்ளார் சாரதா.

பஞ்சாபி வள்ளியும்!

"பனிபடர்ந்த இமயமலைத்தொடரில், கங்கை, சரவணப் பொய்கையில் சேரும் நிலைக் களனை முதல் காட்சிக்காகத் தேர்ந்தெடுத்தேன்" என்றார் சாரதா. வாத்ஸல்ய (கனிவு) ரசத்தோடு கதை ஆரம்பமாகிறது. ஆறு கார்த்திகைப் பெண்டிர், கங்கை, பார்வதி என்று முருகனுக்கு எட்டுத் தாய்மார்கள். இவர்கள் எல்லோரும் குழந்தை மீது அன்பைச் சொரிகிறார்கள்.

முருகன் சற்று வளர்ந்ததும் கதையில் வீர, அத்புத ரஸங்களைக் காட்ட வாய்ப்புக்கிடைக்கிறது. பிரும்மாவை முருகன் சிறைப்படுத்துவது, பிரணவ மந்திரத்தை சிவனுக்கு உபதேசிப்பது, சூர சம்ஹாரம் செய்வது என்று தொடர்கிறது கதை.

இரண்டாம் பாகத்தில் சிருங்கார ரஸம் நிறைந்திருக்கிறது. மனித குலத்திடம் இறைவன் கொண்டுள்ள எல்லையில்லா அன்பும் கருணையும் குறப் பெண் வள்ளியைத் தேடி அவர் பல வேடங்கள் பூண்டு வரும் காட்சிகள் மூலம் வெளிப்படுகின்றன.

"அத்தை! (ருக்மிணி தேவி) இல்லாமல் எதையும் செய்து பழக்கப்படாத எனக்கு, இந்த அனுபவம் புதியது. அவர் நினைவும் ஆசிகளும்தான் இந்தப் பொறுப்பை நான் நிறைவேற்றுவதற்கு உதவுகின்றன" என்றார் சாரதா.

'முருகன் திருவருள்' தயாரிப்பில் மிகச் சுவாரஸ்யமான அம்சம் என்னவென்றால் அதன் பிரதான பாத்திரங்களான தமிழ்க் கடவுள் முருகன், தமிழ் குறப் பெண் வள்ளி ஆகிய வேடங்களை ஏற்றுள்ளவர்கள் இருவரும்வட இந்தியர்கள். முருகன் பாத்திரத்தை ஏற்றுள்ள இருபது வயது விவேக், கலாக்ஷேத்ராவில் நாட்டியத்தில் பட்ட மேல்படிப்புப் பயின்று வருகிறார். இவர் உத்திரப் பிரதேசத்திற்குக்குடிபெயர்ந்துள்ள பஞ்சாபி குடும்பத்தவர். வள்ளியாக நடிக்கும் ஸ்டெல்லா உப்பல் பாட்னாவைச் சேர்ந்தவர்!

"ஒரு பஞ்சாபியால் முருக பக்தியை உணர்ந்து, பிரதான பாத்திரத்துடன் பூரணமாக ஒன்ற முடியுமா?" என்று கேட்டபோது, விவேக் தன் நோட்டுப் புத்தகத்தை எடுத்துக் காண்பித்தார்: "எனக்குத்தமிழ், பேச, படிக்க எழுதத் தெரியும். வேறு சில குறவஞ்சி நாட்டிய நாடகங்களில் முருகன் பாத்திரப் படைப்பைக் கூர்ந்து கவனித்திருக்கிறேன். சாரதா டீச்சர் கதையையும் உணர்ச்சிகளையும் தெளிவாக எனக்கு விளக்கியிருக்கிறார். மனத்துக்குள் முருகனை எண்ணித் தியானம் செய்து கொண்டேயிருக்கிறேன். இதனால் பாத்திரத்தோடு ஒன்ற முடிகிறது" என்றார் விவேக்.

கலைகளுக்கு எல்லை கிடையாது. அவை மாநில, மொழி எல்லைகளைக்கடந்து ஊடுருவுகின்றன என்று சொல்லும்போது, பெரும்பாலும் ரசிகர்களையே மனத்தில் கொள்கிறோம். கலாக்ஷேத்திரத்திலோ கலைஞர்களே அப்படி எல்லை உணர்வுகளைக் கடந்து ஒளிர்கிறார்கள்.

பதின்மூன்று வருடங்களாகக் கலாக்ஷேத்ராவில் பயின்று வரும் ஸ்டெல்லா, சீதை, தமயந்தி, ருக்மிணி போன்ற பிரதான பாத்திரங்களை ஏற்றுச் செய்த அனுபவம் உள்ளவர். "என் குடும்பத்துக் கலாசாரப் பின்னணியும் கலாக்ஷேத்ராவில் நான் பெற்ற பயிற்சியும், வள்ளி பாத்திரத்தைச் சிறப்பாக உணர்ந்து செய்ய எனக்கு உதவுகின்றன" என்கிறார் ஸ்டெல்லா.

நவரஸங்கள் ததும்பும் இந்த நாட்டிய நாடகத்தில், முப்பதுக்கும் மேற்பட்ட கலைஞர்கள் பங்கேற்கின்றனர். பாலமுருகனும் அவன் சிநேகிதர்களும் சேர்ந்து விளையாடிக் களிக்கும் காட்சிகளில் சிறுவர்கள் ஆடும் காட்சி களிப்பூட்டுகிறது. இக்காட்சிகளினால் கலாக்ஷேத்ராவின் மற்ற தயாரிப்புகளினின்றும் "முருகன் திருவருள்" வேறுபட்டு நிற்கிறது.

குரு செம்மங்குடி ஸ்ரீநிவாஸ அய்யரின் மேற்பார்வையில், முருகன் திருவருளுக்கு இசை அமைத்துள்ளவர் டி.எம். தியாகராஜன். "ருக்மிணி தேவி இல்லாததால், நம்ம பொறுப்பு ரொம்ப அதிகமாயிருக்கு. நீ பாட்டுக்கு ஜப்பான் ராகத்தையெல்லாம் புகுத்திடாதே" என்று தமது குரு வேடிக்கையாக எச்சரித்ததை நினைவு கூர்ந்தார் டி.எம்.டி. முழுக்க முழுக்க ரக்தி ராகங்களையே பயன்படுத்தியிருக்கிறார். காட்சிக்கு ஏற்ப ராகங்களைத் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்தியுள்ளதையும் குறிப்பிட வேண்டும். கங்கை நதியின் ஓட்டத்தைச் சித்திரிக்கும் காட்சிக்கு மலய மாருத ராகத்தில் இசை அமைத்திருப்பது ஓர் உதாரணம்.

அகங்காரம் சுயநலம் போன்ற தீமைகளின் சின்னமான சூரபத்மனை அழிக்கவும் எல்லையற்ற கருணையின் வடிவமாக வள்ளியின் கரம்பற்றவும் அவதரித்த முருகனின் திருவருளைக் கூறும் இந்த நாட்டிய நாடகம், காண்போரைப் புடம்போட்டுப் பண்படுத்தும் என்றே எண்ணத் தோன்றுகிறது.

— கௌரி ராம்நாராயண்

(தமிழ் வடிவம்: சீதா ரவி)

மேலட்டையில் முருகன் வள்ளியாக:

விவேக், ஸ்டெல்லா

வண்ணப்படம், புகைப்படம்:

சி. டி. நாச்சியப்பன்





கல்கி

1986 டிசம்பர் 21
மலர் 45 இதழ் 21
அக்ஷய மார்கழி 6



எம்.எஸ்ஸுக்கு எழுபது!

"சப்த ஸ்வரங்களே வியந்து போற்றுகின்றன; ராக தேவதைகளே மகிழ்ந்து பூரிக்கின்றன; வாக்கேயக்காரர்களே ரசித்து வாழ்த்துகின்றனர்' என்று கூறும்படியாக ஓர் இசைக் கலைஞர் இருக்க முடியுமா?" என்று கேட்டால் "முடியும்" என்று அழுத்தம் திருத்தமாகப் பதில் கூறக் கூடிய தெம்பு தமிழனுக்கு இருக்கிறது; தமிழனுக்கு மட்டுமே இருக்கிறது! அந்தக் கலைஞர் '... வேறு யார்? எம். எஸ். அவர்கள்தான்!

'எம்.எஸ். சுப்புலக்ஷ்மி' என்பது 'எம்.எஸ். எஸ்.' ஆயிற்று, அவர் இசை மக்கள் இதயங்களை நிறைத்தபோது; அதுவே 'எம்.எஸ்.' என்று சுருங்கியது அந்த இசை இதயங்களை உருக்க ஆரம்பித்தபோது! இன்று எம்.எஸ். என்றதுமே மெய்சிலிர்க்கும் ரசிகர்கள் கோடிக்கணக்கில்; இரு எழுத்துக்களை இரு கண்களாகப் போற்றும் அன்பர்கள் லட்சக்கணக்கில்; அவரை சரஸ்வதியின் அவதாரமாகவே கருதி வணங்கிடத் துடிக்கும் பக்தர்கள் பல்லாயிரக்கணக்கில்!

எம்.எஸ்.ஸின் இந்த இமாலய வெற்றிக்குக் காரணம், "தெய்வானுக்கிரகம்" என்று கூறி முடித்துவிடுவது, விஷயத்தை மிகவும் சுலபமாக்கிவிட்டதாகும். தெய்வம் சிலருக்குக் கூடுதலான ஆற்றலை அளிக்கிறது என்பது உண்மைதான். ஆனால் அந்தத் திறமைகளைப் பயன்படுத்தி எல்லாரும் உயர்ந்துவிடுவதில்லை; அப்படியே உயர்ந்து விடும் திறமைசாலிகள் எல்லாம் இப்படிப் போற்றப்படுவதும் இல்லை. எம்.எஸ்., தெய்வம் தந்த ஆற்றலை மூலதனமாகக் கொண்டார். உழைத்து உழைத்து, அந்த மூலதனத்தை அளவிட முடியாத சங்கீத சாகரமாக வளர்த்துக் கொண்டார். ஏழு வயதில் தொடங்கிய இசை வாழ்க்கை மட்டுமல்ல, இசைப், பயிற்சியும் கூட எழுபதிலும் தொடர்கிறது! இன்றும் உழைக்கிறார்; சாதகம் பண்ணுகிறார்; அது சாதனையாக மலர்கிறது.

இந்த வளர்ச்சிக்கு எம். எஸ்ஸின் குணநலன்களும் உதவின. தமக்குத் தெரியாத ஆனால் தெரிய வேண்டிய எதையும் யாரிடமும் கற்றுக் கொள்ள இன்றைக்கும் தயாராக இருக்கிற அடக்கம்; யாருக்கும் சிறு தீங்குகூட எண்ணாத நல்லிதயம்; இசையை மட்டுமின்றி இசையால் ஈட்டிய திரவியத்தையும் அள்ளி வழங்கத் தயங்காத கொடை உள்ளம். அவர் இதயமெல்லாம் அன்பு மயமாக இருக்கிறது. அந்த அன்பு, அவருடைய சங்கீதத்தோடு சேர்ந்து பொங்கிப் பிரவகிக்கிறது. இசையோடு அந்த அன்பையும் மக்கள் உணர்ந்து கொள்கிறார்கள்.

மகான்களான ராஜாஜி, டி.கே.சி., கல்கி, நேருஜி போன்றவர்களை எத்தனையோ பேர் சந்தித்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் எல்லாருக்குமே இம்மேதைகளின் வழிகாட்டலும் ஊக்குவித்தலும் நட்பும் கிடைத்துவிடவில்லை. ஆனால் எம்.எஸ்ஸுக்குக் கிடைத்தது என்றால் காரணம், எம்.எஸ்ஸிடம் அவர்கள் ஆற்றலைக் கண்டதனால் மட்டும் அல்ல, அதோடு உயர்ந்த குண இயல்புகளையும் பார்த்ததனால்தான்.

எம்.எஸ்.ஸின் இசையிலே உள்ள தனித்தன்மைகள் அவரது ரசிகர்கள் நன்கு அறிந்தவையே. ராகத்தின் வடிவத்தைச் சித்திரித்துக் காட்டும் திறமை, பாடல்களை அர்த்தம் உணர்ந்து உணர்ச்சியோடு பாடுகின்ற ஆற்றல்; ஸ்பஷ்டமான உச்சரிப்பு, குரல் வளம், சுருதி சுத்தம், மல்லுக்கு நிற்காமல் அளவான ஆனால் சாரமான சுவரப் பிரஸ்தாரங்களுடன் திருப்தி அடைகிற தன்மை, லயத்தில் ஈடுபாடு — இவை எல்லாவற்றுக்கும் மேலாக பக்தி பாவம். அதுதான் எம். எஸ். என்ற கலைஞரை பூஜைக்குரியவராகவே உயர்த்தி விடுகிறது நமது உள்ளங்களில். இதே தூய பக்தி பாவம்தான் காஞ்சி முனிவரின் கருணை கடாட்சத்தையும் பகவான் சத்ய சாயியின் அருளாசிகளையும் அவருக்குப் பெற்றுத் தந்துள்ளது.

இவையெல்லாம் இந்த ஜன்மத்தில் எம்.எஸ். பெற்ற பாக்கியங்கள். ஆனால் அவர் பூர்வ ஜன்ம புண்ணியத்தால் அடைந்த பெரும்பேறு ஒன்று உண்டு. அது சதாசிவம் அவர்களைக் கணவராகப் பெற்றதுதான். அந்தப் பாக்கியத்தை வர்ணிக்க வேறு சொற்கள் இல்லை. எம்.எஸ்.ஸின் முன்னேற்றத்தையே தமது வாழ்க்கையின் முதல் குறிக்கோளாகக் கொண்டார் சதாசிவம். அதன் விளைவாக எம்.எஸ். இன்று நமது நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு மட்டுமல்ல; உலக ஒற்றுமைக்கே உதவும் ஒரு மாபெரும் சக்தியாக உயர்ந்திருக்கிறார். அந்தச் சக்தி மேன்மேலும் வளர்ச்சியுற்று நற்பலன்கள் தர, எம்.எஸ். நாள்தோறும் வணங்கித் துதிக்கும் மதுரை மீனாட்சியின் அருளை வேண்டுவோம்.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்.


வளரும் வயதில்
குழந்தைகளுக்குத் தேவை காம்ப்ளான்
காம்ப்ளான் ஒன்றில்தான் அவர்களுக்கு அன்றுடம் தேவைப்படும் 23 ஊட்டச் சத்துக்கள் அடங்கியுள்ளன.
சாதாரணமாக 15 அல்லது 16 வயதிற்குள் குழந்தைகளின் வளர்ச்சி பெரும்பாலும் முழுமையடைந்து விடுகிறது. அவர்களுடைய வளர்ச்சிக்கு நேரடியாக உதவுவது புரதம் என்ற சத்துதான். ஆகவே உங்கள் குழந்தைகளுக்கு தேவை காம்ப்ளான்— இப்போது. காம்ப்ளான் சிறந்த புரதம் கொண்டுள்ளது—பால் புரதம் (20%) அது 22 மூலதார சத்துணவுகளும் கொண்டதாகும்.
காம்ப்ளான் கிடைக்கிறது இனிய சுவைகளில்.
Glaxo
Complan
COMPLETE PLANNED FOOD
STRAWBERRY FLAVOUR
23
மூலதார சத்துணவுகள் திட்டமிட்ட விகிதங்களில்
பால் சேர்த்திடத் தேவையில்லை.
காம்ப்ளான்® — திட்டமிட்ட பரிபூர்ண உணவு
B84. GLC. 120 Tm



பாட்டுன்
ஒரு சிஷ்யன் எங்கிட்ட சங்கீதம் கத்துக்கறான்.
சரிதான், துப்பாக்கி தோட்டா இல்லாமெ உம்ம சங்கீதத்தை வெச்சுக்கிட்டே ஆளைக் கொல்லலாம்னு தெரிஞ்சு வெச்சிருக்கான்!
இந்த தவில்காரங்க கோலைத் தட்டி.. கட்டையைத் தட்டி... இப்ப கோலாட்டம் ஆடுறாங்க!.. இப்படியே போனா சிலம்பாட்டமே ஆடுவாங்க!
பாட சான்ஸ் கொடுங்க. இல்லேன்னு...
வித்வான் பாட்டு எப்படியாவது போகட்டும். வித்வானுக்கு சங்கதி ரொம்ப சுகமா அமைஞ்சிருக்கு!
பொண்ணுக்குக் கராத்தேயும் தெரியும்!

ஃபாரெக்ஸ்®
முதலான விருப்பம்!



பாப்பா வளர்ச்சிக்கான திட உணவுகளில் பாசத்தாய் அளிக்கும் முதலிடம் ஃபாரெக்ஸ்®

தாய், தன் குழந்தைக்கு தேர்ந்தெடுக்கும் முதலான திட உணவு புதிய செழுமையான ஃபாரெக்ஸ். காரணம்:

பாப்பாவின் உடல் நலத்திற்கான புரதமும், ஜீரணத்திற்கு உகந்த கொழுப்புச் சத்தும் சரியான அளவில் கொண்டது.

பாப்பாவுக்கு ஆரோக்கியமான ரத்தத்தை தரவல்ல இரும்புச் சத்துள்ளது.

எலும்பும் பற்களும் வலுவோடு வளர்ந்திட கால்சியமும் ஃபாஸ்ஃபரஸூம் 2:1 என்ற அளவில் சேர்க்கப்பட்டது.

தின்னத் தெவிட்டாதது; கலப்பதும் கொடுப்பதும் எளிது.



பால் சேர்க்கத் தேவையில்லை! நீருடன் கலந்து கொடுத்தாலே போதும்.

தாயன்பைக் கூறிடும் தரமிக்க திட உணவு ஃபாரெக்ஸ்®



இந்த வருஷம் என்ன ஸ்பெஷல்?



கையை இப்படிக் கொடுங்கள் லால்குடிசார்! கிருஷ்ண கான சபாவில் உங்களுக்கு இரண்டு கிலோ எடை வெள்ளியில் வயலின் பரிசளித்துக் கௌரவிக்கிறார்களாமே...? பாராட்டுக்கள்.

இந்த சபாவில் 1961 முதல் 1986 வரை லால்குடி தொடர்ந்து வாசித்திருப்பதால், இது சில்வர் ஜுபிலி நிகழ்ச்சி என்பது மட்டுமல்ல, ஐம்பதாவது 'ஸோலோ' நிகழ்ச்சியாதலால் ஒரு வகையில் கோல்டன் ஜுபிலி நிகழ்ச்சி கூட. அதனால் வெள்ளியுடன் கொஞ்சம் தங்கமும் உண்டாம். வயலின் மதிப்பு சுமார் பதின்மூன்றாயிரம் ரூபாய்! இந்த வயலின் 'ஸோலோ'வுக்கு தபலா வாசிக்கிறார் ஜாகிர் ஹுஸேன்; மிருதங்கம்—வழக்கம்போல் வேலூர் ராமபத்ரன். நாலா திசைகளிலிருந்தும் பேச்சாளர்கள் வந்து லால்குடியைக் கௌரவிக்கப் போகிறார்களாம். பேச்சுக் கச்சேரியாகவே முடிந்து விடாமல் வயலின் நிகழ்ச்சி தாமதமாகாமல் துவங்க, இப்போதே நமது பிரார்த்தனைகளைச் சொல்லி விடுவோம்!

இந்த வருஷம் முதல் பாகவத சூடாமணி பட்டமும் உண்டாம். பன்னிரண்டு நாளும் ஹரிநாம சங்கீர்த்தனம் முடிந்த பிறகு, கடைசி



ராஜ்குமார் பாரதி



ரவி சங்கர்

யில் சீட்டுக் குலுக்கல் முறையில் இந்தப் புதிய சூடாமணி தேர்ந்தெடுக்கப்படுவாராம்!

இந்த ஆண்டு நிருத்ய சூடாமணி பிர்ஜு மகராஜின் கதக் நடனத்துக்கு, ஸ்பெஷலாகத் 'தபல்ா' வாசிக்கப் போகிறவர்: மறுபடி ஜாகிர் ஹுசேன்.

செம்மங்குடி பாடுகிறார். (சுப்புடு கவனிக்கவும்.) வழக்கத்துக்கு மாறாக, (ஆமாம், லால்குடி இல்லை இந்தத் தடவை) எம்.எஸ். கோபாலகிருஷ்ணன் வயலின் வாசிக்கிறார் இவருக்கு. ஜேசுதாஸ் கிருஷ்ணகான சபையில் பாடி வெகு நாளாயிற்றே. இந்த வருடம் 'தீர்ச்சயாய்' குருவாயூரப்பன் பாடல்கள் கேட்கலாம்!

. விலாயத்கானின் மருமான், 24 வயது இளைஞர் நிஷாத்கான், சிதார் வாசிக்கிறார். 'சைல்டு பிராடிஜி' யாம். இவர் வாசிக்காத அகில உலக இசை விழாக்களே கிடையாது. ஹார்வார்டு யூனிவர்சிடியில் விசிடிங் புரொபசர் வேறு! (இவரை இங்கே சிபாரிசு செய்தவர் யார். தெரியுமோ? வெள்ளி வயலின் பரிசு பெறப் போகிறவர்தான்!)

இந்த வருடம் முதல் 'சங்கீத சூடாமணி' க்கு 5000 ரூபாய் சன்மானமும், 'நிருத்ய சூடாமணி' க்கு 5000 ரூபாய் சன்மானமும் கொடுக்கிறார்களாம், தங்கப் பதக்கத்துடன். (ரெட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட் கிடையாதா என்று பழைய சூடாமணிகள் யாரும் கேட்காமல் இருக்க வேண்டும்!)

பதினைந்து வருடங்களாக அலர்மேல் வள்ளியின் நடனம் இருந்ததே, இந்த வருடம் கிடையாது (நிருத்ய சூடாமணி கொடுத்து நிறுத்தி விட்டார்களோ?) அந்த இடம் சுவர்ணமுகிக்குக் கிடைத்திருக்கிறது இந்த வருடம்!

ஷஷ்டி அப்த பூர்த்தி கொண்டாடும் மியூசிக் அகாடமி, சில நாள் முன்பு தனக்கு ஒன்றும் ரொம்ப வயசாகிவிடவில்லை என்று காண்பிக்க சங்கீத நாடக அகாடமியுடன் சேர்ந்து கொண்டு ஒரு 'யுவ உத்சவ்' கொண்டாடியது. யுவ — யுவதிகளுக்குத்தான் அப்போது முழுக்க முழுக்க சான்ஸ் கொடுத்து விட்டோமே, இப்போது எதற்கு அவதி என்று, பழைய நம்பகமான, உத்தரவாதமுள்ள 'சரக்கு' களையே மாலையிலும், இரவிலும் மெயின் கச்சேரிகளில் வழங்குகிறார்கள்.

சிதார் மேதை ரவிசங்கர், பல வருடங்களுக்குப் பிறகு, டிசம்பர் 31 ஆம் தேதி இரவு வாசிக்கிறார். (நள்ளிரவு பன்னிரண்டு மணிக்கு, சிதார் வாசிப்பதை நிறுத்திவிட்டு ஹாப்பி நியூ இயர் சொல்வாரே, நினைவிருக்கிறதோ?) மறுநாள் சதஸுக்குத் தலைமை வகிக்கப் போகிறவரும் ரவிசங்கர் தான்.

ரவிசங்கரின் மைத்துனர் அலி அக்பர் கான் சரோட் — எல். சுப்ரமணியம் வயலின் என்று ஒரு ஜுகல் பந்தி. வடக்கையும் தெற்கையும் திருப்திப்படுத்தும்.

திருப்பாவை 30 பாடல்களையும், மூன்று நாட்களுக்குக் காலையில் பத்துப் பத்துப் பாசுரங்களாகப் பாடுகிறார் சங்கீத கலாநிதி யாகும் கே. வி. நாராயணசுவாமி. உத்சவப் பிரபந்தம் என்று மலையாளத்தில் சுவாதித் திருநாள் மகாராஜா பாடியிருக்கிறார். பத்மநாபசுவாமி கோயிலில் ஒவ்வொரு நாள் வாகனத்துக்கும் ஓர் உற்சவம். ஒவ்வோர் உற்சவத்துக்கும் ஒரு கீர்த்தனம். இதையும் கே. வி. என். னே பாடுகிறார். மிஸ் பண்ண முடியாத நிகழ்ச்சி என்கிறார்கள்.

டி. கே. பட்டம்மாள் என்றைக்காவது காலைக் கச்சேரி செய்து கேட்டிருக்கிறீர்களா? இந்த கிறிஸ்துமஸ் அன்று காலையில் வந்து கேளுங்கள்!

பருப்பில்லாமல் கல்யாணமா, பத்மா சுப்ரமணியம் இல்லாமல் இசை விழாவா? டாக்டர் வே. ராகவன் சஷ்டி அப்த பூர்த்தி லெக்சர் பண்ணிவிட்டு, பரத நாட்டியம் — சாரி, பரத நிருத்யம் ஆடுகிறார் பத்மா.

சுதாராணி ரகுபதி சும்மா இருப்பாரா? பல மொழிகளிலிருந்து தொகுத்த 'கிளிவிடு தூது' களை அபிநயம் செய்து காண்பிக்கிறாராம்.

தியாகராஜரின் 'கீதார்த்தமு' கீர்த்தனையை மையமாக வைத்துக் கொண்டு பாலகிருஷ்ண சாஸ்திரிகள் ஒரு ஹரிகதை டெமான்ஸ்ட்ரேஷன் செய்கிறார்.

ராமேசுவரத்தைச் சேர்ந்த பாம்பன் சுவாமிகள் 'பஞ்சாமிர்த வர்ணம்' என்று, சந்தத்தில் திருப்புகழைப் போலவே பாடல்கள் இயற்றியிருக்கிறார். அட்வகேட் கே. ராஜா, தமது வழக்கமான கச்சேரிக்குப் போகாமல், மியூசிக் அகாடமியில் இவற்றைப் பாடப் போகிறாராம்.

60. வயதாகிறது மியூசிக் அகாடமிக்கு — என்பதனால், 60 கச்சேரிகள் வைத்திருக்கிறார்கள். (''இதென்ன பிரமாதம்! அதற்கு மேலேயே, வருஷா வருஷம் மாசக் கணக்கில் நடத்தி வருகிறேனே'' என்று தி. நகரிலிருந்து ஒரு குரல் கேட்கிறது!)

சங்கீத கலாநிதியை விருது கொடுத்த கையோடு கைகழுவிவிட்டு, அவருக்குப் போக்குவரத்துக்குக் கூட ஒரு வாகன வசதி செய்து கொடுக்காத அவப்பெயர் அகாடமிக்கு எப்படியோ ஒட்டிக் கொண்டு விட்டது.



• அலி அக்பர்கான்



• மகாராஜபுரம்
ஸ்ரீனிவாசன்

(சங்கீத கலாநிதி வாங்கிவிட்டுப் பாபநாசம் சிவன் வீடு திரும்பச் சைக்கிள் ரிக்‌ஷா கூடப் பிடிக்க முடியாமல் கீழே நின்று தவித்த காட்சி நினைவுக்கு வந்தால் நாம் என்ன செய்ய!) இந்த அறுபதாம் ஆண்டு விழாவில், இன்றைக்கும் நம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கும் 'சங்கீத கலாநிதி' களை விசேஷ விருந்தினராக அழைத்து மேடையேற்றிக் கௌரவிக்கப் போகிறார்களாம். நல்ல காரியம். தாராளமாகச் செய்யட்டும். (இல்லையானால் பிற்காலத்தில் என்றைக்காவது 'சங்கீத கலாநிதிகள் சங்கம்' என்று ஒன்று உருவானால் குறை சொல்லித் தீர்மானம் போட்டு விடுவார்கள்!)

ஒரு முக்கியமான விஷயம்: முதல் முறையாக, சம்ஸ்கிருதத்தில் ஹரிகதை சொல்லப் போகிறார் உமா மகேசுவரி. சப்ஜெக்ட்: குமார சம்பவம். ஏற்கெனவே உஜ்ஜயினில் காளிதாசர் விழாவில் ஆடியன்சை அசர வைத்திருக்கிறாராம்.

அண்ணாமலை மன்றத்தில், தமிழிசைச் சங்கம், முதல் ஐந்து நாட்கள் துவக்கத்தில் தேவார இசை வழங்குகிறது. தேவார இசைக் கலைஞருக்கு விருது கொடுக்கும் இந்த வருடமாவது, பன்னிரண்டு நாளும் தேவார இசை வைத்திருக்க வேண்டாமோ?

வீணை வாசிக்கும் கீதா பென்னட், இங்கே பாடப் போகிறார். ராஜ்குமார் பாரதி, சீர்காழி சிவசிதம்பரம், மகாராஜபுரம் சீனிவாசன் என்று, மற்ற இடங்களில் பாடாத இந்த இளைய தலைமுறைக்கு இங்கே இடம் கொடுத்திருக்கிறார்கள். சபாஷ்!

ஆமாம், இரவு ஒன்பதரைக் கச்சேரிகளை மாற்றவே முடியாதா? மற்ற சபாக்கள் மாதிரி கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணி முன்னுக்குத் தள்ளினால் என்ன? கூட்டமே இல்லாமல், குளிரில் ஒன்பதரைக்கு மேல் கச்சேரி நடத்துவதில் யாருக்குப் பயன்?

இந்தியன் ஃபைன் ஆர்ட்ஸில் போன வருஷம் லெக்சர் டெமான்ஸ்ட்ரேஷனுக்கு சிம்மநந்தன பல்லவி எடுத்துக் கொண்ட மாதிரி, இந்த வருஷம் சரபநந்தன பல்லவியாம். பெங்களூர் சந்திராசிங் வழங்குகிறார். கண்டாபுரொபசர் சுப்ரமணியம் எழுதியுள்ள கலிங்கத்துப் பரணி நாட்டிய நாடகத்தை வசந்தலட்சுமி — நரசிம்மாச்சாரி வழங்குகிறார்கள்.

முன்னணி நடனமணிகளின் நிகழ்ச்சிகளோடு மட்டும் நிறுத்திக் கொள்ளாமல், அடுத்த வரிசையில் யார் யார் இருக்கிறார்கள் என்று கண்டுபிடித்து ஊக்குவிக்க, சென்ற வருடம் துவங்கிய டேலண்ட் ப்ரமோஷன் ப்ரோக்ராம் இந்த வருடமும் உண்டு. பத்து இளம் நடனமணிகள் ஒரு நாளைக்கு ஐந்து பேராக, இரண்டு நாட்கள் போட்டிகளில் பங்கு பெறுகிறார்கள். முதலாவதாகத் தேர்ந்தெடுக்கப்படுபவருக்கு, பத்மா சுப்ரமணியம் என்டோன்மென்ட் பரிசு; தவிர, அடுத்த வருடம் துவக்க நாள் நிகழ்ச்சியன்று நடனமாட சான்ஸ்! இதை எல்லா சபாக்களும் பின்பற்றினால் என்ன? (துவக்க நாள் நிகழ்ச்சிக்குப் போட்டா போட்டி குறையும்தான்; ஆனால், 'தன்கொடை' போய் விடுமே என்று நிர்வாகிகள் பயப்படுகிறார்களோ?)

பிரதான நான்கு தவிர கலாரஸனா, மைலாப்பூர் ஃபைன் ஆர்ட்ஸ், கார்த்திக் ஃபைன் ஆர்ட்ஸ், தியாகப்பிரம்ம கான சபா, அடையாறு கல்சுரல் அகாடமி என்று திரும்பின பக்கமெல்லாம் கலைவிழா.

மேலோட்டமாகப் பார்க்கும் போது, சென்ற வருட 'சங்கீத 'கலாநிதி' இந்த வருடம் ஏன் அதிக இடங்களில் இடம் பெறவில்லை என்று தெரியவில்லை. டி. வி. சங்கரநாராயணன் கிட்டத்தட்ட எல்லா சபாக்களிலும் இடம் பெற்றிருக்கிறார். மகாராஜபுரம் சந்தானம் 'மூன்றுக்கு மேல் எப்போதும் வேண்டாம்!' என்று கொடுத்த அறிவிப்பிலிருந்து மீறிவிடவில்லை...

பதினொரு மாதங்கள் 'கர்நாடக சங்கீதத்துக்கு மவுசு குறைந்து விட்டது' என்று சொல்லிக் கொண்டே, பன்னிரண்டாவது மாதத்தில் பதினேழு நாட்களுக்குத் திகட்டத் திகட்டப் புகட்டிவிட, 'டிசம்பர் சீஸன்' வந்தேவிட்டது!

— நமது நிருபர்

அடுத்த இதழ்

கம்ப்யூட்டர் சிறப்பிதழ்

கம்ப்யூட்டர்கள் — தோட்டம் முதல் தொழிற்சாலை வரை



தமிழக அரசியல்



* 'ஜிங் சக்'



* வசை....

வாழ்த்தாகுமா?





* காதல் காட்சியில்...



வீர சபதம்!



சோபிப்பவர் யார்?

* அருண், ஈரோடு

? சட்டசபையில் உறுப்பினர்கள் கூச்சலிட்டு, அமளி செய்து சபை அமைதியைக் குலைக்கும்போது, சபை நிகழ்ச்சிகளைப் படம் எடுத்து டி.வி.யில் ஒளிபரப்ப ஏற்பாடு செய்வேன் என்று கூறுகிறாரே, சபாநாயகர்?

! தயவு செய்து செய்யட்டும். அப்போதாவது டி.வி. நிகழ்ச்சிகள் சுவாரஸ்யமானவைகளாக அமைகின்றனவா என்று பார்ப்போம்!

* ஆர்.கே. அருள்செல்வன், விக்கிரபாண்டியம்

? தமிழக அரசியல் டிராஜடி படமா? காமெடி படமா?

! சரியான அறுவைப் படம் என்பதுதான் உண்மை.

* ஜி. ராஜசேகர், வளையமாபுரம்

? 'தமிழ் நாட்டுக்கு 'எம்.ஜி. ஆர். தமிழகம்' என்று பெயர் சூட்ட வேண்டும்' என கலோசனு சம்பத் யோசனை கூறியிருப்பது பற்றி?

! கலோசனு சம்பத்துக்குச் சரியாக ஜால்ரா போடத் தெரியவில்லை. சிலர் ஆசையோடு எதிர்பார்த்துக் கொண்டிருப்பது போல் தப்பித் தவறி எம்.ஜி. ஆர். அடுத்த ஜனாதிபதியாக வந்துவிட்டால் என்ன செய்வது? எனவே 'எம்.ஜி. ஆர். இந்தியா' என்றோ அல்லது 'புரட்சித் தலைவர் பாரதம்' என்றோ பெயர் மாற்றம் கோருவதுதான் புத்திசாலித்தனமான ஜால்ராவாக இருக்க முடியும்!

* நாதன்பாபு, திருவிடைமருதூர்

? தமிழக அரசின் 'வீட்டுக்கு ஒரு விளக்கு' த் திட்டம் பற்றி என்ன சொல்கிறீர்கள்?

! இதன் மூலமாவது தமிழக மக்கள் இருட்டில் தவிக்கிறார்கள் என்பதை ஒப்புக் கொண்டார்களே, அதற்காகப் பாராட்டத்தான் வேண்டும்.

* எம். இராஜேந்திரன், வால்குடி

? அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தமக்கு டாக்டர் பட்டம் அளித்த வேளையில் சிவாஜி கணேசன், 'தமிழ் நாட்டில் இ. காங்கிரஸ் ஆட்சியை அமைத்தே தீருவேன்' என்று சபதம் செய்திருக்கிறாரே?.

! 'கருவாடு மீனாகாது; சுட்ட தோசை மறுபடியும் மாவாகாது' என்று பலமுறை பதில் சொன்ன காளிமுத்து மாஜியாகிவிட்டார் என்ற தைரியமாக இருக்கும்.

* ஆர். கே. லிங்கேசன், மேலகிருஷ்ணன்புதூர்

? அ.இ.அ.தி.மு.க.வில் களை எடுப்பு இன்னமும் அதிகரிக்குமா?

! களையெடுப்பது சரி; ஆனால் பயிர்களைக் காணோமே!

ட்ராஜடி படமா? காமெடி படமா?

* இந்திரா கோபாலன், திருச்சி—14 *

? 'சைனு இந்தியாவுடன் மோதினுல், சகோதர முறையில் சைனுவுக்கு உதவுவீர்களா? அல்லது நண்பர் என்ற முறையில் இந்தியாவுக்கு உதவுவீர்களா?' என்ற கேள்விக்கு ரஷ்ய அதிபர் 'நீங்கள் சொல்வதுபோல் நடக்காது என்றே நினைக்கிறேன்' என்று கூறியது பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

! நழுவல் என்றுதான் நான் சொல்வேன். ஆனுல், நல்லெண்ணம் என்று கம்யூனிஸ்டுகள் சொல்லலாம்.

* வி. முரளி, சென்னை—15

? பரிசுச் சீட்டுகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போகிறதே?

! முன்னேற்றமடைந்த நாடுகளில் சூதாட்டம் என்பது ஒரு பொழுது போக்காகக் கருதப்படலாம். ஆனுல் இங்கோ உழைப்பின் மேல் நம்பிக்கை இழந்த அவலத்தின் வெளிப்பாடு! இந்த அவலத்தை அரசாங்கமே நடத்தும்போது, 'கோயில்பூசை செய்வோர்— சிலையைக் கொண்டு விற்றல் போலும்; வாயில் காத்து நிற்போன்—வீட்டை வைத்திழுத்தல் போலும்....' என்று பாஞ்சாலி சபதத்தில் வரும் பாரதியின் அக்னி வரிகள் தான் நினைவுக்கு வருகின்றன.

* திருமதி சீதா பிரபாகர், ஸ்ரீரங்கம்

? பாரதி கண்ட புதுமைப் பெண்களை இக்காலத்தில் காண முடியவில்லையே!

! நீங்கள் ஒரு பெண்தானு அல்லது மனைவி பெயரில் எழுதியிருக்கிறீர்களா? நீங்கள் பெண்ணுகவே இருக்கும்பட்சத்தில் பாரதியின் புதுமைப் பெண்ணை வெளியில் தேடாதீர்கள்; அது அவமானம். உங்களுக்குள்ளேயே தேடிப் பாருங்கள். நிச்சயம் அகப்படுவாள்.

* கலைஞர் ப்ரியா, வேலூர்

? அரசியல் சட்டத்தில் இருக்கிற குறையை அகற்ற இரண்டு வரிகளைக் கொளுத்துவதில் என்ன தவறு இருக்கிறது?

! கருணுநிதியின் வாதமும் அதுவேதான்! 'ஒரு பெரிய முருங்கை மரத்தின் ஒரு சிறு கிளையில் பரவும் கம்பளிப் பூச்சியை அழிப்பதற்காக, அந்தப் பகுதியில் தீமூட்டுகிற போது, நம்முடைய நோக்கம் மரத்தை நாசப்படுத்துவது அல்ல; மரத்தை வாழ வைக்க வேண்டும் என்கிற நல்லெண்ணத்தில்தான்' என்றுதான் அவரும் சொல்கிருர்.

* சுவாதி, தாராபுரம்

? ரேகா, அமலா, இருவரில் காதல் காட்சிகளில் அதிகம் சோபிப்பவர் யார்?

! அமலாவும் கமலஹாசனுடன் சேர்ந்து நடித்த பிறகுதான் இதற்குப் பதில் சொல்ல முடியும், ஸாரி!

* கா. அப்துல் மஜீத், திருமயம்

? காலையில், பழைய சோற்றில், எருமை மாட்டுப் பாலின் கட்டித் தயிரைப் போட்டு, அதோடு வெங்காயத்தையும் உரித்துக் கலந்து, பிசைந்து மாங்காய் ஊறுகாயைத் தொட்டுக் கொண்டே சாப்பிட்ட அனுபவம் பற்றி....?

! கள் வெறி கொள்ள வைக்கும் அனுபவம் கோடையில். இதுவே தொண்டை கட்டிக் கொண்டு அவஸ்தைப்பட வைக்கும் விஷயம் குளிர் காலத்தில். அந்த அவஸ்தையின் அனுபவத்தில்தான் என்னையும் மாட்ட வைக்கப் பார்க்கிறீர்களோ?

* க. தியாகராசன், நெய்வேலி

? தி.மு.க.வைத் தடை செய்ய எம்.ஜி. ஆர். முயற்சி செய்வதாகக் கூறப்படுவது பற்றி?

நீங்கள் கேட்டவை — தராசு

! 'நான் ஒன்றும் தடை செய்ய வேண்டாம்; தி.மு.க. தானே தனது செயல்களால் அழிந்து போகும்' என்ருர் எம்.ஜி. ஆர். இதனை, 'தி.மு.க. வின் வளர்ச்சிக்கு எம்.ஜி. ஆர். அளித்த வாழ்த்தாக ஏற்கிறேன்' என்ருர் கருணுநிதி. கலைஞரின் பாபுலாரிட்டியை அதிகரிக்க ஒன்றன்பின் ஒன்ருக எம்.ஜி. ஆர். அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளைப் பார்க்கும்போது வசை, வாழ்த்தாகிவிடும் போலத்தான் தோன்றுகிறது.

* தாண்டவ மூர்த்தி, பள்ளவள்ளி

? 'ஏன்
இந்தச் சூரியன்கள்
மட்டும்
கிழக்கிலேயே மறைகின்றன?' — இந்தக் கருச் சிதைவுக் கவிதையின் மதிப்பீடு என்ன?

! இது மாதிரியான 'கரு'ச் சிதைவுகளுக்குக் காரணமே, புற்றீசல்களாய்ப் புறப்பட்டு வரும் புதுக் கவிதை டாக்டர்கள்தான்!

* ரூ 10 பரிசு பெறுபவர்:
இந்திரா கோபாலன்,
D 14/65, BHEL Township,
கைலாசபுரம், திருச்சி—14.



• மணிவிழா சமயத்தில் அஞ்சலிக்குரிய மும்மணிகள்



அகாடமிக்கு 60

இன்றைக்கு முன்னணியில் இருக்கின்ற ஒரு புகழ் பெற்ற சங்கீத வித்வான் பல் விருதுகள் பெற்றவர் — எல்லா விதங்களிலும் அங்கீகாரம் பெற்றவர் — இத்தகையவர் பெருமையோடும் பூரிப்போடும் இன்றைக்கும் சொல்லிக் கொள்வது தமது பதின்மூன்றுவது வயதிலே சென்னை மியூசிக் அகாடமியில் பாடியதைத்தான். அந்தக் காலந்தொட்டே மியூசிக் அகாடமிக்கு அப்படி ஒரு மதிப்பு. அது நாளாக ஆக, வளர்ந்தும் வருகிறது. இன்றைக்கு அகாடமியில் கச்சேரி செய்வதும் விருது பெறுவதும் பெருமைகளெனக் கருதப்படுவதோடு அகாடமியில் கச்சேரி கேட்பதுகூட பெருமைக்குரிய விஷயமாகப் பேசப்படுகிறது! ஒரு சங்கீத சீசனில் ஒரிரு அகாடமி கச்சேரிகளாவது கேட்காவிட்டால் ரசிகனுக்குத் திருப்தி கிடையாது.

இதற்கெல்லாம் முக்கியமான காரணம் அகாடமி ஒரு சாதாரண சபா அல்ல என்பதுதான். மியூசிக் அகாடமிக்கு முன்பே சென்னையில் ஒரிரு சபாக்கள் இயங்கி வந்தன. ஆனால், இவை கச்சேரிகள் மட்டுமே வழங்கின. அகாடமியில்தான் இசையைப் பற்றிய சொற்பொழிவுகளும் ஆய்வுக் கருத்தரங்கங்களும் முதலில் நடத்தப்பட்டன. இவை மிகப் பிரபலமாகி உலகப் பிரசித்தி பெற்றன. இதுவரை பல நாடுகளைச் சேர்ந்த இசை வல்லுனர்கள் வழங்கிய ஆய்வுச் சொற்பொழிவுகள் உள்பட இசை தொடர்பான சுமார் 1500 விஷயங்களைப் பற்றி அகாடமியில் பேசப்பட்டிருக்கிறது. இப்படி ஓர் அனைத்துலக அந்தஸ்து இருப்பதால் தான் அகாடமிக்கு இவ்வளவு மகத்துவம்.

* தெலுங்கு, தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் இசை பற்றிய நூல்களை வெளியிட்டுள்ளது.

* வாய்ப்பாட்டு, வாத்திய இசை, நடனம் ஆகியவற்றுக்கு வகுப்புகள் நடத்துவதோடு, இசையைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்குப் பிரத்யேக மூன்றாண்டு காலப் பயிற்சி அளிக்கிறது.

* கச்சேரி செய்யும் அளவுக்குத் தேர்ச்சி பெற்ற இளம் வித்வான்களுக்கு விசேஷப் பயிற்சி வகுப்புகள் நடத்தி வருகிறது.

* இரண்டாவது உலக யுத்தத்தின்போது கூட அகாடமி இசை விழாக்கள் நிற்கவில்லை. தொடர்ந்து இத்தகைய விழாக்கள் நடத்தி வருவதில் அகாடமி 'ரிகார்ட்' ஏற்படுத்தியிருக்கிறது எனலாம்.

* ஆண்டு தோறும் வளரும் கலைஞர்களுக்குப் போட்டிகள் நடத்திப் பரிசளிப்பதோடு இசைவிழாக் கச்சேரிகளில் சிறந்த முன்னணிக் கலைஞர்களுக்கும் பரிசுகள் வழங்குகிறது.

* நவீன உபகரணங்களுடன் கூடிய அரங்கம் அகாடமியுடையது. ஒவ்வொரு வருடமும் அதை மேம்படுத்தி வருகிறார்கள்.

இவ்வாறு பிற சபாக்களினின்று வேறுபடும் அகாடமியின் ஆரம்பத்திற்கும் விடுதலைப் போராட்ட காலக் காங்கிரசுக்கும் தொடர்பு உண்டு என்றால் ஆச்சரியமாக இருக்கும். 1927 இல் சென்னையில் அனைத்திந்திய காங்கிரஸ் கமிட்டி கூடியபோது இந்தியக் கலைகளை, கலாசாரத்தை அன்னிய ஆட்சி வளரவிடாமல் கட்டுப்படுத்தி வருகிறது என்ற உண்மை உணரப்பட்டு, விழிப்புணர்ச்சியைப் பரவலாக உண்டாக்க வேண்டும் என்று தீர்மானம் கொண்டு வரப்பட்டது. தொடர்ந்து அனைத்திந்திய இசை மாநாடு ஒன்று கூட்டப்பட்டது. அகாடமியின் ஆரம்பம் இதுதான்.

டாக்டர் யூ. ராமாராவ் அகாடமியின் முதல் தலைவராக விளங்கினார். இவரும் இவருக்குப் பிறகு தலைமை ஏற்ற கே.வி. கிருஷ்ணசாமி அய்யர் போன்றோரும் சமூகத்தில் மதிப்பிற்குரிய பெரியோர்களாக விளங்கியவர்கள். இவர்கள் சுய கௌரவம் பாராமல் அகாடமிக்காக நிறைய யாசகம் கேட்டுப் பெற்றார்கள். தொடர்ந்து வந்த தலைவர்கள் எல்லோருமே பெரும் புள்ளிகள் என்பதால் அகாடமிக்கு அந்தஸ்து கூடியது. இத்தகைய மணியான ஓர் அமைப்பு இன்று மணி விழாக் காண்கிறது. வாழ்த்துவோம்.

தகவல் தொகுப்பு: **எஸ்ஸார்**



அமரர் **கல்கி**

எழுதிய

பொன்னியின் செல்வன்

இராஜராஜ சோழனின் இளம்பிராயத்தில்
நிகழ்ந்த மகத்தான சரித்திரத் தொடர் கதை

கல்கி

1987 ஜனவரி 11

பொங்கல் சிறப்பிதழில் ஆரம்பம்

உம்ம தீர்ப்பை யாரய்யா மதிப்பார்கள்?

வட்டமேஜை

மதுரை, தஞ்சை மாவட்டங்களில் ரீ—விஸிட்டின் போது செய்தது போலவே, பெரியார் மாவட்டத்திலும் கலெக்டரிடம் சில கேள்விகளை எழுப்பி யிருந்தோம். அதற்கு அருண் ராமநாதனின் பதில்:

* **உங்கள் கடிதம் தொடர்பாக. கடிதத்தில் குறிப்பிட்டுள்ள விஷயங்களைக் கவனித்துக் கொண்டேன். அதே நேரத்தில் நீங்கள் எழுப்பியுள்ளது போன்ற கேள்விகளுக்கு வெகுஜனப் பத்திரிகைகளில் பிரசுரிக்க நான் பதில்களை வழங்க வேண்டியது தேவையற்றது என்று தோன்றுகிறது.**

அருண் ராமநாதன்,
1.12.86 கலெக்டர்,
பெரியார் மாவட்டம்.

* காலங்காலமாய்க் கருத்துத் தெளிவுக்குப் பெயர் போன கல்கியில் அரசியல் தெளிவுள்ளவர்கள் அளித்திட்ட அதிகப்படியான தீர்ப்பின்படி 58 விழுக்காடு நபர்கள் எம். ஜி. ஆர். பதவி விலக வேண்டும் என்கிறார்கள். சட்டசபையில் கண்மூடித்தனமான ஆதரவும், சற்று அச்சவு ஏற்பட்டாலும் அண்டைக் கொடுக்கத் தமிழக இ. காங். எம்.எல். ஏக்கள் தயாராக இருக்கும் போதும் உம்ம தீர்ப்பை யாரய்யா மதிக்கப் போகிறார்கள்?

தஞ்சை — 7. அ. சம்பத்.

* பதவி பறித்த பாண்டியன் தலையங்கத்தின் கடைசி பாரா மட்டும் வழவழா கொழகொழா!

நாச்சியார்கோயில், எம். கல்யாணசுந்தரம்.

* தி. மு. க. (மாஜி) எம். எல். ஏக்களின் நடத்தையையும் சரி, சபாநாயகரின் தீர்ப்பையும் சரி — பதவி பறித்த பாண்டியன் என்ற இவ்வாரத் தலையங்கம் மிக அருமையாக அலசியிருந்தது.

தோட்டக்குறிச்சி, இரா. வளையாபதி.

* இந்த வாரம் என்ன தெருகனத் சிறப்பு மலரா? தங்கம், பவளம், முத்து என்று ஒவ்வொன்றும் என்ன ஜொலிப்பு!

திருத்தங்கல் எம். பழனிச்செல்வம்.

* ஒரு பெரிய பளு எங்கள் தலையிலிருந்து இறக்கி வைக்கப்பட்டுள்ளது. நான் குறிப்பிடுவது, பாட்டியம்மா சொல்லும் படக்கதைகள் நின்று விட்டதைத்தான்! பழைய பாணியில் இருந்த ஓடங்கள் படவிமர்சனம் துலாக்கோல் போல, நடுநிலையோடு அமைந்திருந்தது.

கொரட்டூர், கே. என். சீனிவாஸ்.

* மாவட்டந்தோறும் மக்களின் துயரத்தை நீக்க 'கல்கி' மேற்கொண்டுள்ள சிறப்பான சமுதாயப் பணியில் பல வெற்றிகள் கிடைக்கும் என்பதற்கு மதுரை மாவட்டம் ஒரு எடுத்துக் காட்டு. நல்லெண்ணம் கொண்ட மாவட்ட கலெக்டருக்குப் பாராட்டுக்கள்.

திருச்சி — 20. ஆற்காடு எழிலன்.

* திருப்பரங்குன்றம் ராஜகோபாலன் குடும்பத்தினருக்கு உதவி செய்த கல்கி வாசகர்கள் உண்மையிலேயே ஒரு கோவிலைக் கட்டிய நிலையை அடைகிறார்கள்!

புதூர், எஸ். வள்ளுவன், வி. குமார், வி. குகன்.

* என்னது, இந்த வாரம் பன்னிரண்டு அருமையான ஜோக்குகள் போட்டு அசத்தி விட்டீர்களே! நம்பவே முடியல்லே சார்!

சென்னை — 28. எம். தியாகராஜன்.

* சபிக்கப்பட்ட சென்னைச் சாலைகள் கட்டுரையில் பிரச்னை நன்கு அலசப்பட்டிருக்கிறது. வித்தியாச கோணத்தில் எடுக்கப்பட்ட அட்டைப்படமும் 'டாப்.' ஆனால்... சாலையின் ஒரு பகுதியில் தண்ணீர் தேங்காத போது அந்தப் பெண்மணி ஏன் நீரில் நடந்து ஸ்கூட்டரின் தண்ணீர் விளாசலைச் சந்திக்க வேண்டும்?

வேலூர் (வ. ஆ.) டி. கே. பாஸ்கரன்.

* சபிக்கப்பட்ட சென்னைச் சாலைகள் கவர் ஸ்டோரி, ஒரு கார்ப்பரேஷன் அதிகாரியின் முயற்சியையும், இயலாமையையும், அதே சமயம் பொதுமக்கள் இவர்களுடன் ஒத்துழைத்தால் சாலைகளின் இடையூறுகள் பெருமளவு நிவர்த்தி பெறும் என்பதையும் வித்தியாசமாகக் கட்டிக் காட்டியது. சென்னை மட்டுமல்ல மற்ற பெருநகரங்களிலெல்லாம் இதே பிரச்னைதான் தலைவிரித்தாடுகிறது.

கோவை — 16. கா. க. வே. ரோகிணி.

* **கல்கி 14.12.86 இதழில் 'லாக்கரில் தெய்வங்கள்! வெளியில் முணுமுணுப்புகள்!' என்ற தலைப்பின் கீழ் வெளியான கட்டுரையில், 'ஸ்ரீதரன்' 'தென்கோவன்' என்ற பெயர்க் குறிப்புக்களுடன் சுந்தரமூர்த்தி ஐ. ஏ. எஸ். மற்றும் சுகவனேஸ்வர் ஐ. ஏ. எஸ். ஆகியோரது படங்கள் தவறாகத் தரப்பட்டுள்ளன. இந்தத் தவறுக்கு உண்மையில் மிகவும் வருந்துகிறேன்.**

எஸ். சந்திரமௌலி
(நிருபர்)

சின்னச் சின்ன

8

"விட்டுடுங்க மொதலாளி" என்று பதறித் திமிறினாள் இந்திரா.

மாயகிருஷ்ணன் விடுவதாயில்லை. அவர் போதை அவரை என்னென்னவோ பேசச் சொல்லியது. கைகளை இறுக்கினார். "சொல்லாதே இந்திரா..... அப்படிச் சொல்லாதே. இந்தநேரத்திலஎன் ஆசையைக்கெடுக்காதே. என்ன வேணுமோ கேளு, ஏய் திமிராதேடி, பட்டா, பணமா, தங்கமா?.... ஆ...."

மாயகிருஷ்ணன் அவளை உதறிவிட்டு இடது கையை வலது கையால் பற்றிக்கொண்டார். இடது கையில், ஓவல் ஷேப்பில் ரத்த முத்துக்கள் திடீரென்று பீறிட்டிருக்க, பருத்திச் சட்டை தாகத்துடன் உறிஞ்சத் தொடங்கியது.

அவர் பலம், அபார பலம். ஓடிய இந்திராவைக் காலால் தடுக்க, இந்திரா தரையில் விழுந்தாள். உடம்பில் சில பாகங்களில் அடிபட்டுத் திக்திக் இதயத்துடன் உடன் எழுந்தாள். கையில் இருந்த தூக்கு கார்ப்பெட்டில் சத்தமின்றி விழுந்து புரண்டது. கண்ணில், அருகில் இருந்த பித்தளை வாஸ் தென்பட்டது. சட்டென்று அதைப் பற்றி வீசினாள்.

மாயகிருஷ்ணன் அதை எதிர்பார்க்கவில்லை. ஃப்ளவர்வாஸ், காற்றில், அதுசெலுத்தப்பட்ட முழு வேகத்துடன் பிரயாணம் செய்து மாயகிருஷ்ணனின் மூக்கை 'சத்' என்று தாக்கியது. உடன் மூக்கிலிருந்து ரத்தம் வெளிப்பட்டு, மீசையில் வடிகட்டப்பட்டுச் சொட்டுச்சொட்டாகக்கீழேவிழத்தொடங்க, மாயகிருஷ்ணனை உயிர் பயம் பீடித்தது. அவர் மூக்கை அழுத்திக் கொண்டு தரையில் சரிய, இந்திரா சாரை போல் நழுவினாள். கீழே படபடத்த இரண்டு நூறு ரூபாய் நோட்டுக்களில் ஒன்றை மட்டும் எடுத்து உள்ளங்கையில்மடித்துக்கொண்டாள். தூக்கைப் பொறுக்கிக் கொண்டாள்.

அந்தக் கறுப்புப் படிகளில் கால் வழுக்கப் பார்த்துச் சரி செய்து கொண்டு, புடைவை எங்கேயாவது விலகி இருக்கிறதா? தலை கலைந்திருக்கிறதா — நடையுமில்லாத ஓட்டமுமில்லாத வேகத்தில் நதி போல் நழுவினாள்

படபடப்பு லேசாகக் குறைந்து போக, கையில் நடைக்கு ஏற்பத் தூக்கு ஆடியது. வெகு திடீரென்று மின்னல் போல் சாலையின் இடது பக்க ஓரத்திலிருந்து 'ஹோ' என்று ஒரு குரல் பாய்ந்து வந்தது. இந்திரா பயமலையின் உச்சிக்குப் போய், 'ஹம்மா' என்று அலறினாள்.

"என்னம்மா பயந்திட்டியா?" என்று மிருதுவான குரல் கேட்க, நந்துவின் குரல் என்று உணர்ந்து திரும்பிப் பார்த்தாள்.

நந்துதான். அவளுடைய நந்தகுமார்தான்.

இந்திரா பாய்ந்து அவனை இறுகக் கட்டிப் பிடித்தாள்.

"நந்து! நந்து!" என்று அதற்கு மேல் குரல் எழாமல் தவித்தாள்.

"என்னம்மா ஆச்சு?"

"ஒண்ணுமில்லேடா.... நாய்.... நாய் ஒண்ணு தொரத்திக்கிட்டு வந்தது."

"அதான் நீ ஓடி வந்திட்டிருந்தியா?"

"ஆமாம். என்னை எப்பப் பார்த்தே?"

"நீ பின்னாடி திரும்பித் திரும்பிப் பார்த்து ஓடி வந்தியே. அப்பப் பார்த்தேன். வீட்டுக்கு நேரமாச்சுன்னு ஓடி வரேன்னு நெனைச்சு, விளையாட்டுக்காக அப்படிக் கத்திட்டேம்மா. ரொம்பப் பயந்திட்டியா?"

"இல்லேடா. நீதான் வந்துட்டியே.... எனக்கு யானை பலம் வந்துடிச்சு.... வா..."

"என்னை ஏன் லேட்டுன்னு கேக்கலியே?"

"கேக்கற மாதிரி இல்லடா, சொல்லு"

இந்திராவிற்கு அந்தப் பழைய பயம் லேசாக விலகி இப்போது ஓர் ஓரத்தில் சின்னதாய்ச் சிரிக்கக் கூடச் சிரித்தாள்.

"எங்க ஸ்கூலுக்குக் கலெக்டர் வரப் போறாரும்மா."

"சரி" இந்திரா இன்னும் முதலாளியைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தாள். இந்நேரம் மயக்கம் தெளிந்திருக்கும். டாக்டரைக் கூப்பிட்டுக்காண்பிக்கப்போகிறாரா, இல்லை, அடியாட்களை அழைத்து அவளைத் துரத்தச் சொல்லப் போகிறாரா? இரண்டாவதுதான் நடக்கும் போலத் தோன்றியது.

"வா, இந்தத் தெரு வழியாகப் போகலாம்" என்று பக்கத்தில் திரும்பிய ஒரு குறுக்குத் தெருவில் நுழைந்தாள்.

"இப்படிப் போனா சுத்திக்கிட்டுப் போகணும்மா" என்றான் நந்தகுமார் நழுவிய டிராயரைத் தூக்கி விட்டுக் கொண்டே.

"பரவாயில்லை, ராத்திரி பூரா சுத்தலாம் வா."

"நீ இன்னும் அந்த நாய்க்குப் பயந்துக்கிட்டிருக்கே ஏஏஏ...."

"ஆமாண்டா, நீ சொல்லு கலெக்டர் வராரு. எதுக்கு வராரு?"

"ஆண்டு விழாவுக்கும்மா."

"ம்."

"அதுக்காகப் பாட்டுப் போட்டி, பேச்சுப் போட்டி எல்லாம் நடத்தறாங்களா? இன்னிக்கு ஸ்கூல் முடிஞ்சப்புறம் அந்தப் போட்டியெல்லாம் வச்சாங்க. அதில் எல்லாம் கலந்துக்கிட்டேனா.... அதனால் லேட்டாயிடிச்சு."

"நீ எதிலியாவது ஃபர்ஸ்ட் வந்தியா?"

"ஓட்டப் பந்தயத்தில மட்டும்தான் தெரியும். மத்ததில எல்லாம் இன்னிக்கே எப்படித்

கனவுகள்

சுபா

தெரியும்? எங்க சார் அப்புறம் சொல்றேன்னு சொல்லிட்டாரு.''

''சரி, ஓட்டப் பந்தயத்தில் யாரு ஃபர்ஸ்ட்?''

''சொல்லேன், பார்ப்போம். ஒனக்கு எப்படித் தெரியும்? ஜயாதான் பர்ஸ்ட்.''

''ஓட்றதிலயா? பெரிய விஷயந்தான் போ.''

''என்னம்மா இப்படிச் சொல்றே?''

''அட, அதுக்குள்ளே மூஞ்சி வாடிப் போச்சே. நான் சும்மா ஒரு பேச்சுக்குச் சொன்னேன்டா. என் நந்துன்னு, நந்து தான்.''

''ஆண்டு விழா அன்னிக்கு நீ எங்க ஸ்கூலுக்கு வரியாம்மா?''

''நான் எதுக்குடா அங்க எல்லாம்?''

''எல்லாப் பசங்களோட அம்மா அப்பாவும் வராங்கம்மா. எனக்குத்தான் அப்பா இல்லே. நீயாவது வரக் கூடாதாம்மா?''

''சரி, வ்ரேன், வரேன்.''

மறுநாள் காலையில் எழுந்தபோது சூரியன் வஞ்சனையின்றி சிரித்துக் கொண்டிருந்தான். இரவு முழுக்க இந்திரா கண்ட கெட்டகனவுகள் சூரியஒளியில் தலைதெறிக்க, ஓடியிருந்தன. முதலாளி, விஷயத்தைப் பெரிது படுத்த வேண்டாம் என்று முடிவெடுத்துவிட்டாற் போலிருக்கிறது. இன்றைக்கு லீவு நாள். நிச்சயம். ஃபாக்டரிக்குப் போக வேண்டாம். அந்த விஷயமே இனிப்பாய் இருந்தது. பக்கத்தில் புரண்டு அவன் மீது காலைப் போட்ட நந்தகுமாரை எழுப்பினாள். தானும் எழுந்து சோம்பல் முறித்தாள். சிட்டுக் குருவி சோம்பல்.

சமையல் அறையில் புகுந்து காப்பிக்காகப் பாலை எடுத்து ஸ்டவ் மீது வைத்தாள். நாளையிலிருந்து வேலைக்குப் போக வேண்டாம் என்று தீர்மானித்தாள். தீர்மானத்தை அண்ணனிடம் எப்படிச் சொல்வது என்பதில்தான் தயக்கம் வந்தது. காப்பியைக் கலந்து, சூடு ஆற்றிப் பதமான சூட்டில் எடுத்துக் கொண்டு, ஹாலில் அமர்ந்திருந்த ஜெயபாலை நெருங்கினாள்.

ஜெயபால் இவள் கை காப்பி டம்ளரைப் பார்த்ததும், ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்தான். காப்பி டம்ளரை நீட்டிவிட்டுக் கொஞ்சம் ஒதுங்கி நின்றாள். குடித்து முடிக்கட்டும் என்று காத்திருந்தாள். ஜெயபால் குடித்துவிட்டு, டம்ளரை நீட்டிவிட்டு, பேப்பரைக்



கையில் எடுக்க, இந்திரா ''அண்ணு!'' என்ருள்.

ஜெயபால் சலிப்புடன் பேப்பரில் இருந்து தலையை எடுத்து அவளைப் பார்த்தான். சொல்லி விடு, சொல்லி விடு. இந்திரா தன்னைத்தயார்செய்துகொண்டு,தொண்டையைச் செருமுவதற்குள், ''சொல்லித் தொலையேன்'' என்ருன் ஜெயபால்.

''நாளையிலேருந்து நான் வேலைக்குப் போக வேணும்னு பார்க்கறேன்.''

''அட'' என்ருன் ஜெயபால் எகத்தாளமாக.

''வேலை செய்யறப்போ தலையைச் சுத்திச் சுத்தி வருதுண்ணு. குனிஞ்சே வேலை செய்யறதால முதுகு வேறே பிடிச்சிக்குது. அதுவுமில்லாம அண்ணி வேறே இங்கே தனியாக் கஷ்டப்படறுங்க. அதனுல் வீட்லேயே இருந்து அண்ணிக்குக் கூட மாட ஒத்தாசையா இருக்கலாம்னு பார்க்கறேன்.''

''என்னவோ, நாந்தான் வேலைக்குப் போ, வேலைக்குப் போன்னு கழுத்தைப் பிடிச்சு, தள்ளின மாதிரியும், நீ எனக்காக வேலைக்குப் போய் முதுகு வலியைத் துணைக்குக் கூட்டிக்கிட்ட மாதிரியும் சொல்றியே. வேலைக்குப் போணப் போ. போவலேன்னு இரு'' என்று சொல்லிவிட்டு மறுபடியும் பேப்பரில் ஆழ்ந்தான் ஜெயபால்.

'அப்பா' என்று ஒரு நிம்மதிப் பெருமூச்சை விட்டு மறுபடியும் சமையலறைக்குள் நுழைந்தாள் இந்திரா. பல்லைத்தேய்த்துவிட்டு, சசிகலா போர்ன்விட்டாவுக்காகக் காத்திருந்தாள். நந்தகுமார் ஓர் ஓரத்தில் உட்கார்ந்து கொண்டு பிய்ந்து போன பட்டனைத் தைத்துக் கொண்டிருந்தான்.

சுகந்தி குளித்துவிட்டு உடனே எங்கேயோ போகப் போகிறவளைப் போல் சமையலறையில் நுழைந்தாள். இந்திராவைப் பார்த்து லேசாகச் சிரித்தாள்.

''நேத்து ஒனக்குச் சம்பளம் இல்லே?'' என்ருள்.

''மறந்தே போய்ட்டேன் அண்ணி'' என்று கூறிவிட்டு இந்திரா பரபரப்பாக அவளுடைய ஸ்டோர் ரூம் படுக்கை அறையில் நுழைந்து பெட்டியில் பத்திரப்படுத்தியிருந்த நூறு ரூபாய் நோட்டை எடுத்து வந்து சுகந்தியிடம் நீட்டினள்.

''எங்கிட்ட, எதுக்குக் குடுக்கறே? உங் கண்ணன்கிட்டே குடு'' என்ருள் சுகந்தி, நோட்டின் மீது வைத்த பார்வையை மாற்ருமல்.

''அண்ணன்கிட்ட குடுத்தா என்ன, உங்ககிட்ட குடுத்தா என்ன, நீங்களே வாங்கிக்குங்க அண்ணி'' என்று ஏறக்குறைய அந்த நோட்டைத் திணித்தாள் இந்திரா.

''இப்ப தோசையை ஊத்திட்டு, மத்தியானத்துக்குப் பூண்டு கொழம்பு வெச்சிடு. கொஞ்சம் காரமா வை. அப்பத்தான் உங் கண்ணனுக்குப் பிடிக்கும். அந்த மூலைக் கடைக்காரன் அரிசி மூட்டையைக் கொண்டு வந்து தள்ளிட்டுப் போயிட்டான். நான் வேறே பங்கஜத்தோட கடைக்கு வரேன்னு சொல்லிட்டேன். அவ தங்கச்சி கல்யாணத்துக்குப் புடைவை எடுக்கறதுக்கு என்னைக் கூப்ட்டுட்டா.''

''நான் அரிசியைச் சலிச்சு எடுத்து வச்சிடறேன் அண்ணி.''

''நான் கொஞ்சம் அரிசியை எடுத்து வாயில்போட்டுப்பார்த்தேன். பல்லை ஒடைச்சிடும் போல் கல்லு.''

''அதுக்கென்ன அண்ணி, கல்லையும் பொறுக்கிட்டாப் போவுது.''

இந்திரா கிணற்றடியில் அமர்ந்து துணிகளுக்குச் சோப்புப் போட்டாள். அழுக்குத் தண்ணீரைக் கிணற்றடியில் 'பளிச்' என்று கொட்டும்போது மனத்தில் நிறைந்த எண்ணங்களையும் கழுவுவதாகத் தோன்றியது. நேற்றைய விஷயத்தை யாரிடமாவது சொல்லிவிட வேண்டும். நந்தகுமார் அண்ணி சொன்ன வேலைகளுக்காக என்று வெளியே போயிருந்தான். அண்ணன் கடை விஷயமாக என்னவோ வாங்க வேண்டும் என்று டவுனுக்குப் புறப்பட்டுப் போயிருந்தான். அவர்களிடம் சொல்லக் கூச்சமாய் இருந்தது. பயமாய் இருந்தது. ஹாலில் விளையாடிக் கொண்டிருக்கும் சசியிடம் சொல்வதைவிட பைத்தியக்காரத்தனம் எதுவும் இருக்க முடியும் என்று தோன்றவில்லை.

''துணியைத் தோய்க்கறதைவிட, கனவு காண்றதில இஷ்டம் அதிகம் போலிருக்கே!''

வெகு அண்மையில் அந்தக் குரலைக் கேட்டு இந்திரா தடுமாறி எழுந்து கொண்டாள்.

பாண்டியன் சிரித்துக் கொண்டே நின்றிருந்தான்.

''அண்ணன்.... அண்ணன்.... விட்ல இல்லே.''

''சசி சொல்லிச்சு.''

''சசி, சசி, ஹால்லே இருந்ததே.''

''என்னை ஏன் உள்ளே வந்தேன்னு கேட்கறீங்க!''

''இல்ல.... இல்ல.....''

''அதான், அதான், எனக்குக் கதவைத் தெறந்திட்டு விளையாடப் போயிடறேன்னு அது பாட்டுக்குப் போயிட்டது. நீங்க உள்ளே இருக்கீங்கன்னு சொல்லிடிச்சு. சரி, கதவை மூடிக்கிங்கன்னு சொல்லிட்டுப் போகலாம்னு வந்தேன்.'' சொல்லிக் கொண்டே, வேஷ்டியை மடிச்சுக் கட்டிக் கொண்டு பாண்டியன் கிணற்றிலிருந்து நீர் இறைக்கத் தொடங்கினன்.

''உங்களுக்கு எதுக்கு வீண் சிரமம்?'' என்ருள் இந்திரா.

''நான் இல்லேன்னு நீங்கதானே இழுத்திருப்பீங்க. உங்க கை மட்டும் இரும்பால பண்ணியிருக்குது, என் கை பூவால பண்ணியிருக்குதா.... ஒருநாள் தண்ணி எறைச்சா ஒண்ணும் ஆயிடாது. எக்ஸைஸ்ங்க. எக்ஸைஸ்.'' என்ருன். குறுக்கில் விழுந்து தடுக்க இந்திராவுக்குக் கஷ்டமாய் இருந்தது. விட்டுவிட்டு அவன் தண்ணீர்க் கயிற்றை மேலே இழுத்தபோது அவனது புஜம்

புதுக் கவிதைப் போட்டி-8



28.12.86 கல்கி 'கம்ப்யூட்டர் சிறப்பிதழாக' வெளிவருகிறது. இதில் இடம் பெறும் பல கதை கட்டுரைகளைப் படித்துவிட்டு அவை அளிக்கும் ஊக்கத்தில் 'கம்ப்யூட்டர் யுகம்' என்ற தலைப்பில் ஒரு புதுக் கவிதை எழுதுங்கள் பார்க்கலாம்.

* போட்டி பிளஸ் டு மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு மட்டுமே.
* கவிதை எட்டு—பத்து வரிகளுக்கு மிகாமல் இருக்க வேண்டும்.
* ஒருபோஸ்ட் கார்டின் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுதலாம்.
* கார்டின் மறுபக்கத்தில் பள்ளி/கல்லூரி முத்திரையைப் பெற வேண்டும்.
* உங்கள் பெயரையும் முகவரியையும் தெளிவாகக் குறிப்பிடுவது அவசியம்.
* விலாசப் பகுதியில் 'புதுக் கவிதைப் போட்டி — 8' என்று குறிப்பிடுங்கள்.
* கவிதைகள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி 5.1.87.

முதல் பரிசு: ரூ 100/—

இரண்டாம் பரிசு ரூ 25/— தவிர ஆறு மாதங்களுக்குக் கல்கி இலவசம்

தவிர, பிரசுரமாகும் அனைத்துக் கவிதைகளுக்கும் சன்மானம் உண்டு.

பொங்கிப் பொங்கி அடங்கியதைப் பார்க்க வேடிக்கையாய் இருந்தது. அவன் முகத்தில் தெரிந்த உண்மையான பரிவைப் பார்த்தால் அவனிடம் சொல்லலாம் என்று தோன்றியது. உட்கார்ந்தாள். சோப்பைப் போடத் தொடங்கி, ''நேத்து என்ன ஆச்சின்னா...'' என்று தொடங்கினாள்.

''அம்மா'' என்ற குரல் அவள் குரலை மீறி ஒலிக்கத் திரும்பினாள்.

நந்தகுமார் நின்றிருந்தான்.

''என்னம்மா, கதவைத் தொறந்து போட்டு இங்கே வந்து உக்காந்திருக்க'' என்றான். அவன் பார்வையில் லேசான சங்கடம் புரண்டதை இந்திரா கவனித்தாள்.

''நான்தான் வந்தேம்பா. எனக்குக் கதவைத் திறந்துவிட்டுட்டு சசி வெளியே போய்ட்டுது. நான் இன்னும் ரெண்டு வாளித் தண்ணியை எறைச்சி ஊத்திட்டுப் போயிடறேன். அப்புறம் நீ கதவைச் சாத்திக்கிட்டு அம்மா கூட இரு'' என்றான் பாண்டியன்.

பாண்டியனிடம் சொல்லத் தொடங்கியதை இந்திரா நிறுத்திவிட்டு, ''பரிமளா வீட்டுக்கு எப்படிப் போகணும்?'' என்று கேட்டாள்.

''பரிமளா வீட்டுக்கா.....'' என்று தொடங்கினான் பாண்டியன்.

இந்திரா அந்தநடுத்தெருவாய்க்காலைக் கடந்தாள். இரண்டு பன்றிகள் கிர்ரக், கிர்ரக் என்று உறுமி ஒன்றை ஒன்று துரத்தின. அரை டிராயர் சிறுவர்கள் 'நான்தான் ராஜாவாம், நீதான் மந்திரியாம்' என்று ராஜ்ய பரிபாலனம் செய்தார்கள்.

இந்திரா அந்தத் தெருவில் ஸப்ப் வைத்த வீட்டைத் தேடி நடந்தாள். ஏறக்குறைய முக்கால் தெருவைக் கடந்தபின் அந்த வீடு கண்ணில் பட்டது. அந்த வீட்டுக்குப் பக்கத்தில் ஒரு குறுகிய சந்து. அதில் நுழைந்து வீடுகளைப் போல் தோற்றமளிக்க முயற்சி செய்த குடிசைகளைப் பார்த்துக் கொண்டே நடந்தாள். ஒரே ஒரு வீட்டிற்கு மட்டும் ஓடு வேயப்பட்டு அந்த ஓட்டு வரிசைக்கு மேல் கம்பு நடப்பட்டு, கம்பின் உச்சியில் ஒரு கொடி காற்றில் நடுங்கியது.

இந்திரா கொடி வீட்டிற்குப் பக்கத்து வீட்டை நெருங்கினாள். சாணியால் மெழுகப் பட்ட சின்ன திண்ணையில் பாவாடையை விரித்து உட்கார்ந்து இரண்டு சின்னப் பெண்கள், 'ஏழாங்கல்' ஆடிக் கொண்டிருக்க, இந்திரா, ''பரிமளா வீடு இதானே?'' என்றாள்.

''ஆமாங்க்கா'' என்றாள் ஒருபெண் மேலே போடப்பட்ட கல்மேல் குறியாய்.

''இருக்குதா?''

''ம்.''

இந்திரா உள்ளே நுழையப் போன நேரம் பரிமளாவின் சிரிப்பு அவளை நிறுத்தியது. அதே வெள்ளி மணிச் சிரிப்பு. இந்திராவிற்கு அந்தச் சிரிப்பின்மேல் லேசாகப் பொறாமையாகக் கூட இருந்தது. வாசலில் தயங்கினாள்.

''என்னவோ தொடுவேன், தொட்டுடுவேன்னு பயங்காட்னீங்க. இப்பத் தொடுங்களேன்'' என்று சிரிப்பைத் தொடர்ந்து அவள் குரல் கேட்க இந்திரா திடுக்கிட்டு ஆணியடித்தாற்போல் நின்றாள். என்ன இது? உள்ளே யார்?

''எம்மேலே கோவமா? அன்னிக்கு நாலு பேர் போற வர எடம். அதான் வேண்டாம்னு சொன்னேன். இப்ப நானேதான் தரேங்கறேன்ல. இந்த ஆம்பிளைங்களே இப்படித்தான். தடியால அடிச்சுப் பறிச்சித் திங்கப் பாப்பாங்க. அதே மடியிலே விழட்டும். வீசியெறிஞ்சிடுவாங்க. ம்... வாங்க.... கிட்ட வாங்க.... இன்னுங்கிட்ட....'' பரிமளாவின் குரல் கொஞ்சலாய்த் தொடர்ந்தது.

இந்திராவிற்கு அருவருப்பாக இருந்தது. பரிமளாவா இப்படி?

'ஒவராப் போயிடலையே' என்று கேட்டதற்கு முகத்தில் என்ன வெட்கம்? என்ன பதற்றம்?' இப்போது என்னடாவென்றால்....

இந்திரா சட்டென்று தீர்மானித்துத் திடீரென்று உள்ளே நுழைந்தாள்.

அதிர்ந்து போனாள்.


(தொடரும்)

புதுப் பயணம்

கௌரி வாசலில் எட்டிப் பார்த்தாள். அப்பா அவரால் சாத்தியமான அனைத்து கவனத்தையும் ஒரு சேரத் திரட்டி முகச் சவரம் செய்து கொண்டிருந்தார். மாதத்துக் கொரு முறை சவரம் செய்து கொள்கிறவர், கடந்த பத்து நாட்களில் மூன்று முறை மழித்துக் கொண்டிருக்கிறார். ஒவ்வொரு முறையும் அவர் எப்படிச் சித்திரவதைப் படுவார் என்று கௌரிக்குத் தெரியும்.

அறை மூலையில் இருட்டில் அம்மா படுத்திருந்தாள். அம்மாவால் எழுந்து யார் முன்பும் நிற்க முடியாது. அவளால் ஒரு சொல்லைக் கூடச் சரியாக உச்சரிக்க முடியாது. ஆனால் இந்தக் கணம் அவளிடமிருந்து என்ன — என்ன — என்ன என்று கேள்விகள்





மின்னிக் கொண்டிருப்பது கௌரியை இனியும் தாமதிக்கக் கூடாது என்று பிடித்துத் தள்ளியது.

"அப்பா!" என்று கௌரி மெதுவாக அழைத்தாள்.

முகத்தில் இரத்தம் கசிந்த இடம் ஒன்றை

"இல்லே."

"இல்லே! சட்டுனு தயாராயிடு. பத்து மணிக்கெல்லாம் அங்கே போய்ச் சேர்ந்துடலாம்."

"அதைத்தான் சொல்ல வந்தேம்ப்பா. நான் வரலே."

"நீ வரலேயா? நான் மட்டும் போய் என்ன பண்ணறது?"

"நம்ப இரண்டு பேருமே போக வேண்டாம்பா."

"ஏன் என்ன திடீர்னு?"

"திடீர்னு இல்லே. நாம முதல் நாள் போனப்பவே எனக்கு அப்படித்தான் தோணிப் போச்சு."

"என்ன தோணிப் போச்சு?"

"இனிமே அந்த இடத்துக்குப் போகக் கூடாதுன்னு."

அப்பா கிண்ணத்திலிருந்த சோப்புத் தண்ணீரைத் தெருவில் வீசிக் கொட்டினார். ஒரு கணம் தாங்க முடியாத கோபம் அவருள் சீறிப் பாய்ந்து கொண்டிருப்பதை அவருடைய கால் கட்டைவிரல் தரையை அழுத்துவதிலிருந்து தெரிந்தது. ஆனால் அவர் உடனே அதை அடக்கிக் கொள்ளவும் முடிந்தது. மிகவும் நிதானமான குரலில், "ஏன், என்னாச்சு?" என்று கேட்டார்.

கௌரி, "ஒண்ணுமில்லே," என்றாள்.

"ஒண்ணுமில்லேன்னா இப்ப ஏன் போக வேண்டாம்னு சொல்லறே? இரண்டாந் தடவை போனப்போ ஆடிஷன் முடிஞ்சுடும்னுதான் சொன்னான். ஆனா அவனேதான் தபலாக்காரன் வரலே, இன்னொரு நாள் வாங்கோன்னு சொல்லிட்டானே. அவன் வரச் சொல்லிப் போகாம இருக்கலாமா?"

"எனக்குப் பிடிக்கலேப்பா."

"எல்லாமே நமக்குப் பிடிக்கறதாவே நடந்துடறதாம்மா? எந்தக் காரியம்னாலும் அதுலே கஷ்டம், சிக்கல் இருக்கத்தான் இருக்கும். பாட்டு கத்துண்டயே, அதுலே மட்டும் எல்லாமே பிடிக்கறதாயிருந்ததா? அந்த மணி பாகவதர் கிட்டே மாட்டிண்டு எப்படி எல்லாம் திண்டாடினோம்?"

"மணி பாகவதர் மனசு ரொம்ப நல்லதுப்பா."

"என்ன நல்லதாயிருந்தா என்ன? குடிச் சுட்டுக் குடிச்சுட்டுக்கன் வீட்டுக்குப் போகாம





இங்கே வந்துன்னு விழுந்து கிடக்க ஆரம்பிச்சான்? அவனைப் போகச் சொல்றது பெரும்பாடாப் போயிடுத்தே. நாலு பாட்டு கத்துக்கறதுக்காக ஒவ்வொரு நாளும் விட்டை பெருயில் விட்டுக் கழுவும்படி ஆயி



டல்லையா?''

கௌரி பதில் சொல்லாமல் நின்றாள்.

''இனம்பு. இன்னிக்கு ஒரு நாளைக்குப் போயிட்டு வந்துடுவோம். நல்லபடிக்கு எவனுக்காவது உன் குரல் பிடிச்சுடுத்துன்னு எல்லாக் கஷ்டமும் தீர்ந்துடும்.''

கௌரிக்குக் கஷ்டங்கள் தீர்ந்துவிடும் என்று நினைக்கத் தோன்றவில்லை. அவளுக்கு நினைவு தெரிந்து இந்த இருபது இருபத்திரண்டு ஆண்டுகளில், என்று கஷ்டமே

அசோகமித்திரன்



அப்பா ஒரு விரலால் அழுத்திப்பிடித் திருந்தார். இன்னொரு கையால் சவ ரத்தைத் தொடர்ந்து கொண்டிருந் தார். கௌரி அழைத்தது அவர் காதில் விழவில்லை.

கௌரி மீண்டும், ''அப்பா,'' என்று அழைத்தாள். இம்முறை அப்பாவின் காதில் அது விழுந்து விட்டது. ''நீ ரெடியா?'' என்று கேட்டார்.

இல்லை என்று இருந்திருக்கிறது? முதல் அக்காவுக்குஒருவழியாகக்கல்யாணம்நிச்சய மான சமயத்திலேயே அப்பாவுக்கு வேலை கிடையாது. இரண்டாவது அக்கா கல்யாணம் முழுக்க முழுக்க யார் யாரோ கைகொடுத்து நடந்த கல்யாணம். அதனால் எல்லோருக்குமே இந்தக் குடும்பத்தைப் பற்றியே இளப்பம். மூத்த அக்காவுடைய மைத்துனன் ஒருவன் மதுவிலக்கு இருந்த காலத்தில் நாலைந்து முறை போலீஸ் காவலில் இருந்து விட்டான். இரண்டாவது அக்காவுடைய சின்ன மாமனார் ஒரு ஹோட்டலில் வேலை என்றுதான் சொன்னார்கள். ஆனால் அந்த மனிதன் பகலெல்லாம் வீட்டில் தூங்கி விட்டுப் பொழுது சரியப் போகும் நேரத்தில் மட்டும் வெளியே போவார். அவரை யாரும் கௌரவமாக அழைத்துப் பேசியது கிடையாது. ஆனால் இவர்களுக்கெல்லாம் கௌரியின் குடும்பத்தைப் பற்றி அலட்சியம். ஒவ்வொரு அக்காவும் மூன்று பிரசவங்களுக்கு அம்மா வீடு வந்து வீட்டிலிருந்த சுமாரான வேஷ்டி புடைவையெல்லாம் குழந்தைக்குத் துணி வேண்டும் என்று எடுத்துக் கொண்டு போயாயிற்று. இப்போது அம்மா கைகால் இழுத்துப் போய்ப் படுத்த படுக்கையாக இருக்கிறாள். கௌரி கற்றுக் கொண்ட துளி சங்கீதத்தைக் கொண்டு அப்பா இப்போது அவர்கள் கஷ்டங்கள் எல்லாவற்றுக்கும் முடிவு கட்டிவிட முடியும் என்று நினைக்கிறார்.

அப்பா தயாராகிவிட்டார். கௌரியின் பழைய செருப்பை அவரே ஓர் அழுக்குத் துணி கொண்டு நன்கு துடைத்து வைத்திருந்தார். அதனுள் காலை நுழைக்கும் போது கௌரிக்கு உடல் கூசிற்று.

வழக்கம் போல ஸ்டுடியோ வெளிவாசல் கூர்க்கா அவர்களை நிறுத்திவிட்டான். ஹனுமந்தராவ் யார் என்று கேட்டான். அந்தப் பக்கம் வந்த ஸ்டுடியோ பணியாளன் ஒருவன் நல்லவேளையாக ஹனுமந்தராவ் அந்த ஸ்டுடியோக்காரர்தான் என்று கூறினான். கூர்க்காவுக்கு இன்னும் நம்பிக்கை வரவில்லை. ஆனால் அரை மனதாக உள்ளே அனுமதித்து விட்டான். அந்த ஸ்டுடியோவிலேயே பாதையோரமாக நடந்து சென்று கௌரியும் அவளுடைய அப்பாவும் ஒரு பழைய மஞ்சள் நிற மாடிக் கட்டிடத்தைப் போயடைந்தனர். முதல் மாடியில் அந்த ஸ்டுடியோவின் மியூசிக் டிபார்ட்மெண்ட் இருந்தது.

மாடிப் படியில் ஏறிப் போகக் கௌரிக்குக் கால் எழவில்லை. பாதி மாடிப்படி ஏறியிருந்த அப்பா திரும்பி, "வா, சீக்கிரம். எல்லாரும் வந்தாச்சு போலேயிருக்கு" என்றார். மாடியில் யாரும் இல்லை என்று அப்பாவுக்குத் தெரிந்திருக்கும் என்று கௌரிக்குத் தெரியும். அப்பாவுடைய நம்பிக்கைக்கு ஏதேதோ கண்ணில் காதில் படாமல் போயின. இல்லாததெல்லாம் தெரிந்தன, கேட்டன.

மாடியில் யாரும் இல்லை. யாரோ காலையில் மட்டும் அறையைத் திறந்து பெருக்கிவிட்டுச் சென்றிருந்தார்கள். இதற்கு முந்தி இரு முறை வந்தபோதும் அறையில் யாரும் இல்லை. இன்று மறுபடியும் அதே போல. ஊருக்கு முன்னால் இவர்கள்தான் போய் நிற்கிறார்கள்.

கௌரி அப்பாவின் கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள். "திரும்பிப் போயிடலாம்ப்பா" என்றாள்.

"இவ்வளவு தூரம் வந்துட்டுத் திரும்பிப் போறதாவது? நீ இங்கேயே இரு. நான் கீழே



'திருநெல்வேலி — கட்டபொம்மன்' மாவட்ட மக்களே, உங்களுக்கு நினைவிருக்கிறதா?

கல்கி ஏற்றிருக்கும் சமுதாயப் பணியில் பதினோராவது மாவட்டமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது உங்கள் மாவட்டம் தான் என்பது! உங்கள் மாவட்டத்திலுள்ள குறைகளும் முறையீடுகளும் அநீதிகளும் தவிர, பெரிய சாதனைகள் பற்றிய கடிதங்களும் கல்கி அலுவலகத்திற்கு வந்து சேர வேண்டிய கடைசி தேதி: 20.12.86

உடனடியாக எழுதி அனுப்புங்கள்.

— ஆசிரியர்

பி.கு.: இப்போது நமது பிரதிநிதிகள் புதுக்கோட்டை மாவட்டத்தில் சுற்றுப் பயணம் செய்து கொண்டிருக்கிறார்கள். அம்மாவட்டம் பற்றிய பரபரப்பூட்டும் செய்திகளும், கட்டுரைகளும் பேட்டிகளும் புகைப்படங்களும் ஜனவரி 18, 25 தேதியிட்ட கல்கி இதழ்களில் பிரசுரமாகும்.

உங்கள் கைகளிலேயே குணப்படுத்தும் சக்தி...



சுளுக்கு, தசைபிடிப்பு, மூட்டுநோவு, உடல்வலி இவைகளுக்கு.

பாசமிக்க மென்மையான உங்கள் கைகளின் ஸ்பரிசம், கூடவே குணப்படுத்தும் சக்திமிக்க அயொடெக்ஸ்— உங்கள் குடும்பத்திற்குத் தேவை. எனவே கைவசம் இருக்கட்டும் அயொடெக்ஸ். ஏனெனில், பாதிக்கப்பட்ட திசுக்களைக் குணப்படுத்தும் அயொடின் மற்றும் வலிதணிக்கும் மீத்தைல் ஸலிஸிலேட் கொண்டது அயொடெக்ஸ்.

அயொடெக்ஸ் இரு முறை தினம் தடவ இரு மடங்கு குணம்

வலி தணியும் வரை, தினம் இருமுறை அயொடெக்ஸ் தடவ டாக்டர்கள் பரிந்துரைக்கின்றனர்... பின்னரும் இரு தினங்கள்... ஏனெனில் வலி ஒரு அடையாளம் மட்டுமே. நிஜமான பிரச்சினை, திசுக்களின் உள்ளார்ந்த பாதிப்பு.

எனவே, உமது அன்பிற்குரியோர், சுளுக்கு, தசைப்பிடிப்பு, மூட்டுநோவு, உடல்வலி இவற்றால் துன்புறுகையில் அயொடெக்ஸ் தடவித் தேயுங்கள் தினம் இருமுறை. இருமடங்கு வேகமாக அவர்கள் தத்தம் வேலைகளை கவனிக்கத் தொடங்குவர். உங்களை அன்புடன் நினைப்பார்கள்.

அயொடெக்ஸ்®- குணப்படுத்தும் சக்திகொண்ட பாம்

SKF -ஓர் எஸ்கேஃப் தயாரிப்பு

ELL-1508

அருள்வாக்கு



லோகத்தில் மனசுக்கு ரொம்பவும் ஆனந்தமாகவும் சாந்தமாகவும் இருக்கப்பட்ட பல விஷயங்களுக்கு அப்பர் ஸ்வாமிகள் ஒரு 'லிஸ்ட்' கொடுக்கிறார். இந்திரியங்களுக்கு அகப்படுகிற சுகங்கள் போல இருந்தாலும், நிரந்தரமான, தெய்விகமான ஆனந்தத்தைத் தருகிற வஸ்துக்களைச் சொல்கிறார். அந்த வஸ்துக்கள் என்ன? முதலில் துளிக்கூட தோஷமே இல்லாத வீணாகானம், அப்புறம் பூரண சந்திரனின் பால் போன்ற நிலா; தென்றல் காற்று; வஸந்த காலத்தின் மலர்ச்சி; வண்டுகள் ரீங்காரம் செய்து கொண்டிருக்கிற தாமரைத் தடாகம்.

மாசில் வீணையும் மாலைமதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே.

இந்திரியங்களால் பெறுகிற இன்பங்களை ஈசுவர சரணாரவிந்த இன்பத்துக்கு உபமானமாக அடுக்கும்போது 'மாசில் வீணை' என்று சங்கீதத்துக்கே முதலிடம் தருகிறார்.

நல்ல சங்கீதம் — அதுவும் குறிப்பாக நம்முடைய சங்கீதத்துக்கே எடுத்த வீணையோடு கானம் — என்றால் அது ஈசுவரனின் பாதத்துக்குக் கொண்டு சேர்ப்பதாகவே இருக்கும். நம் பூர்வீகர்கள் இசையை ஈசுவரனின் சரணங்களிலேயே சமர்ப்பணம் பண்ணினார்கள். அந்த இசை அவர்களையும் அதைக் கேட்கிறவர்களையும் சேர்த்து, ஈசுவர சரணாரவிந்தங்களில் லயிக்கச் செய்தது. தர்ம சாஸ்திரம் தந்த மகரிஷி யாக்ஞவல்கியரும் "சுஸ்வரமாக வீணையை மீட்டிக் கொண்டு, சுருதி சுத்தத்தோடு லயம் தவறாமல் நாதோபாஸனை செய்துவிட்டால் போதும், தியானம் வேண்டாம்; யோகம் வேண்டாம்; தபஸ் வேண்டாம்; பூஜை வேண்டாம்; கஷ்டமான சாதனைகளே வேண்டாம் — இதுவே மோக்ஷத்துக்கு வழிகாட்டிவிடும்" என்கிறார்.

வீணாவாதன தத்வக்ஞ: ச்ருதி ஜாதி விசாரத:
தாளக்ஞச்ச அப்ரயத்னேன மோக்ஷ மார்க்கம் ஸ கச்சதி

இதிலே இன்னொரு விசேஷம், சங்கீத வித்வான் மட்டுமில்லாமல், அவன் கானம் செய்வதை வெறுமே கேட்டுக் கொண்டிருக்கிற அத்தனை பேருக்கும் அவன் ஒருத்தன் செய்கிற சாதனையின், பூரண பலனை நிறைந்த திவ்விய சுகம் கிட்டிவிடுகிறது.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி சங்கராச்சாரிய ஸ்வாமிகள்

போய் யாராவது வந்திருக்காளான்னு பாத்துட்டு வரேன்."

"வேண்டாம்ப்பா! வேண்டாம்ப்பா! என்னைத் தனியா விட்டுட்டுப் போயிடாதீங்கப்பா!" என்று கௌரி சொன்னாள். அப்பா பயந்து விட்டார்.

"என்னம்மா, என்ன கௌரி? என்னாச்சு?"

"என்னைத் தனியா மட்டும் விட்டுட்டுப் போயிடாதீங்கப்பா."

முதல் முறையாக அப்பாவுக்குக் கௌரியுடைய தயக்கத்துக்கு மிக ஆழமான காரணம் இருக்க வேண்டும் என்று தோன்றியிருக்க வேண்டும்.

"இந்த இடத்தை விட்டுப் போயிடலாம்ப்பா."

அப்பா இம்முறை அவளை வற்புறுத்தவில்லை. இருவரும் கீழே இறங்கி வந்தனர். அவர்கள் எதிரே ஒல்லியாக மீசைக்காரன் ஒருவன் புகைபிடித்த வண்ணம் வந்தான். "என்ன ஐயரே, எங்கே போயிடறே?" என்று கேட்டான்.

"ஹனுமந்த்ராவ் இல்லே."

"ஹனுமந்த்ராவ் இல்லாத போனா நாங்க இல்லேயா? வா, பாப்பா. இன்னிக்கும் ஒரு டேப் முழுக்க உன்னை ரிகார்டு பண்ணிடலாம்."

அப்பா கௌரியைப் பார்த்தார். கௌரி ஒரு மிகச் சிறிய தலையசைப்பில் முடியாது என்று தெரிவித்தாள்.

"நாங்க போயிட்டு அப்புறம் வர்றோம். ஹனுமந்த்ராவே வந்துடட்டும்."

"உங்க இஷ்டம். இப்படியே இரண்டுலே மூணுலே வந்து எல்லாரையும் பாத்துட்டுப் போனாத்தான் ஏதாவது சான்ஸ் வர்றப்போ பாப்பா நினைவு இருக்கும். சான்ஸ் தருவாங்க. பாப்பா இவ்வளவு பயப்படக் கூடாது. இங்கே எல்லாரும் மனுஷாளுங்க தானே, பாம்பு புலி இல்லேயே."

"அப்போ இருந்து பாத்துட்டுப் போன்னு சொல்றீங்களா?" என்று அப்பா கேட்டார்.

"பின்னே என்ன சொல்லறேன்? உங்களுக்கு டயம் இல்லேன்னா பாப்பா இருந்து பாத்துட்டுப் போகட்டும். எப்பவுமே நீங்க கூடக் கூட வர முடியுமா? பாப்பா, நீ இவ்வளவு பயந்துக்கக் கூடாது. நல்ல போல்டா, குஷியா இருக்கணும்" சற்றும் எதிர்பாராத வண்ணம் அவன் கௌரியின் தோளைத் தடவிக் கொடுத்தான். கௌரி, "ஓ!" என்றாள். கண் இமைப்பதற்குள் அவனுடைய கையைப் பிடித்து உதறினாள். விடுவிடென்று வாசல் நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

வழி நெடுக அப்பா பேசவில்லை. ஏன் மாடி அறையில் அவள் தனியாகக் காத்திருக்க மறுத்தாள் என்று இப்போது அவர் ஊகித்திருக்க முடியும். ஹனுமந்த்ராவுக்கு இன்னும் உதவியாளர்கள் உண்டு. ஒருவனுக்கும் எந்தப் பெண்ணையும் தொட்டுத் தடவிக் கொடுக்காமல் பேச முடியாது.

வீடு போய்ச் சேர்ந்தவுடன் கௌரி, அம்மா

வைக் கஞ்சி குடிக்க வைத்தாள். அப்பா குனிந்த தலை நிமிராமல் சாப்பிட்டேன் என்று பெயர் பண்ணினார். அவர் சாப்பிடும் போதுதான் அன்று சவர- பிளேட் அவர் கன்னத்தில் வெட்டிய இடங்களில் இரத்தம் உலர்ந்து கோடிட்டிருந்தது பளிச்சென்று தெரிந்தது.

அம்மாவுக்கு மீண்டும் ஒருமுறை புடைவை மாற்றிப் படுக்க வைத்தபின் கௌரி சாப்பிட உட்கார்ந்தாள். அன்று வயிறாரச் சாப்பிட முடிந்தது. தரையைச் சுத்தம் செய்துவிட்டு முகத்தைக் கண்ணாடியில் பார்த்துக் கொண்டாள்.

அப்பா இடிந்து போன மாதிரித் திண்ணையில் கிடந்தார். கௌரி அவர் பக்கத்தில் போய் உட்கார்ந்தாள்.

''அப்பா.''

''என்ன?''

''நாளைக்கு ஹனுமந்தராவைக் கட்டாயம் பார்த்துட்டு வருவோம்.''

அப்பா தூக்கி வாரிப் போட்ட மாதிரி திரும்பினார்.

''ஆமாம்ப்பா. நாளைக்கு நாம போய்ப் பார்ப்போம். இனிமே எல்லாம் சரியாயிருக்கும்.''

''இன்னிக்கு நடந்ததுக்கப்புறமா?''

''இதுக்கு மேலே என்னவெல்லாம் நடந்ததுன்னு உங்களுக்குத் தெரியுமா?''

அப்பர பேசாமலிருந்தார்.

''மாடியிலே தனியாத் தனியா விட்டுட்டுப் போனேள். முதல் நாளே ஓர் ஆள் என்னை இடிச்சுட்டுப் போனான். இரண்டாம் நாள் அவன், இந்த மீசைக்காரன் இரண்டு பேரும் வந்தாங்க. இதெல்லாம் எப்படி வெளியிலே சொல்லறது, சொல்லலாமா கூடாதான்னே தெரியலே. ஆனா இன்னிக்கப்புறம் ஒண்ணு தெரிஞ்சுடுத்து. ஜாக்கிரதையாயிருக்கணும். ஆனாப் பயப்படக் கூடாது.''

உள்ளே அம்மாவும் எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்திருக்கிறாள். அவள் முனகுவது கேட்டது. கௌரி அவளுக்குச் சொன்னாள். ''ஒண்ணும் ஆயிடலே அம்மா. நீ எதையோ நினைச்சுண்டு பயப்படாதே. ஒண்ணும் ஆயிடாது. இனிமே ஒண்ணும் ஆயிடாது.''

அன்றுபிற்பகல்கௌரிபரண்மீதுபோடப் பட்டிருந்த அவளுடைய பழைய பாட்டு நோட்டுப் புத்தகங்களைக் கீழே எடுத்துப் போட்டு தூசி தட்டி வைத்தாள். அப்புத்தகங்கள் பெரியரகசியங்கள், சூத்திரங்கள் கொண்டவையல்ல. சாதாரணமாக யார் தமிழ் நாட்டில் பாட்டு கற்றுக் கொள்ள வேண்டும் என்று போனாலும் எழுதிக் கொள்ள வேண்டிய பாடங்கள். ஒரு பாட்டு வாத்தியாருக்கு இன்னொருவர் வர்ணம் கற்றுக் கொடுப்பதிலும் கீர்த்தனைகள் கற்றுக் கொடுப்பதிலும் தேர்வு சற்று மாறலாம். மற்றபடி எவ்வளவோ ஆண்டுகளாகத் திரும்பத் திரும்பப் பாடப்பட்டு, கற்றுக் கொடுக்கப்பட்டு, கற்றுக் கொள்ளப்படும் பாடங்கள். இருபது பேர் முப்பது பேர் உள்ள வகுப்பில் கௌரியாக எழுதிக் கொண்ட பாடங்கள். நிறைய இடங்களில் அவள் தப்புத் தப்பாகக் கூட எழுதிக் கொண்டிருக்கலாம். ஆனால் பாடும்போது எல்லாம் சரியாகப் போய்விடுகிறது. ஒரு பாட்டு வாத்தியார் குடித்துவிட்டுக் கற்றுக் கொடுக்க வரும்போதுகூட, ஹனுமந்தராவும் அவனுடைய உதவியாளர்களும் கூடப் பாடும் போது எல்லாரும் முறையாகத்தான் பாடுவார்கள். யாரோ சங்கீதத்துக்கு இலக்கணம் தந்தபோது அது மனிதன் தெய்வத்தோடு உறவு கொள்ளும் மொழி என்றார். இந்த மொழியை இப்போது ஹனுமந்தராவின் மீசைக்கார உதவியாளன் பேசுகிறான், யார் யாரோ பேசுகிறார்கள். இனி கௌரியும் பேசப் போகிறாள். பெரிய சாதனைக்காக இல்லாது போனாலும் ஒரு கோரஸில் இடம் பிடிப்பதற்கு அவளுடைய சங்கீதம் போதும்.

தெய்வத்தோடு பேசும் மொழிக்கும் எப்படியெல்லாம் பயன்கள் இருக்கின்றன என்று நினைத்தபோது கௌரிக்குச் சிரிக்கத் தோன்றியது.

''நேற்று உங்க கச்சேரியைக் கேட்கணும்னு ஆசையா சபாவுக்கு வந்தேன். ஆனால்....''

''என்ன ஆச்சு?''

''ஹியரிங் எய்டை கொண்டு வர மறந்துட்டேன்.''





''நேற்றுதான் குடந்தை சகோதரர்களுக்குள் பாகப் பிரிவினை நடந்ததாம்...''

மோகம் என்பது இதுதானே?

8

உஷா சுப்பிரமணியன்

எட்டாவது வகுப்புவரை தமிழ்ச்செல்வன் சாதாரண முதல் தலைமுறைப் படிப்பாளியிடமிருந்து எந்தவிதத்திலும் மாறுபடவில்லை. ஒருவிதத் தாழ்வு மனப்பான்மையுடன் வகுப்பின் கடைசிப் பெஞ்சுகளை ஆக்ரமித்து, படிக்க வேண்டுமென்ற பெற்றோரின் கட்டாயத்திற்காக ஒவ்வொரு வகுப்பையும் மெதுவாகக் கடந்து எதிலும் ஆர்வமற்றவனாகவே இருந்தான்.

"தேசிகரய்யா, எம் பிள்ளை நல்லாப் படிக்கிறானா, தாலூகா ஆபீஸிலே குமாஸ்தா வேலை கெடைக்குமா?" என ஆவலுடன் கேட்கும் துரை வேலுவிடம் புன்சிரிப்புடன் சுந்தரம் பதில் கூறுவார். "முயற்சி என்னவோ செய்யறான். ஆனாலும் படிப்பு போதவில்லை. வம்பு, தும்பில்லாத நல்ல பிள்ளை.... எப்படியும் முன்னுக்கு வந்திடுவான். சாயங்கால நேரம் வீட்டுக்கு வரச் சொல்லேன். பாடம் சொல்லித் தரேன்."

தமிழ்ச் செல்வனுக்கு அவர் வீடு தேடி வரும் தைரியம் என்னவோ வந்ததில்லை. யுக, யுகமாக இந்தியக் கிராமங்களில் புரையோடியிருந்த முதலாளித்துவக் கட்டுப்பாடுகள், ஒரு வர்க்கத்தின் தன்னம்பிக்கையையும், ஆளுமையையும் அடித்து வீழ்த்தியிருந்தன. அவன் எப்படியோ முக்கி முனகிப் பதினோராவது வகுப்புக்கும் வந்து சேர்ந்தான். ஏறக்குறைய பத்தொன்பது வயதில், முகத்தில் கரு கருவென்ற வளர்ச்சியுடன் வகுப்பில் நுழையும்போதுதான் அவனுக்குத் தன் பலம் புரிந்தது: வயதில் முதுமை, உடலில் அதிக பலம், வெகு சீக்கிரமே மூலையில் அமைதியாக உட்கார்ந்திருந்தவன் அடி, உதை மன்னனாகப் பள்ளிக்கூடத்தையே ஆட்டி வைக்கும் தலைவனாக உருவாகத் துவங்கினான்.

சுந்தரம் முதலில் இந்த ஒழுக்கக் குறைவான நடத்தையைப் பருவக் கோளாறு என்றுதான் எண்ணினார். ஆனால் வெகு சீக்கிரமே அவன் மனோபாவம் அவருக்குப் புரிந்தது. எங்கோ ஏற்பட்டுள்ள குறையைச் சம்பந்தமில்லாத எதிலோ நிரப்பப் பார்க்கிறான். துரை வேலுவை அழைத்துத் தமிழ்ச் செல்வனைப் பற்றிப் பேசினார். "துரை, நீயோ உம்மகன் படிச்சு முன்னுக்கு வரணும்னு பார்க்கிறே. ஆனா அவனோ, பெரிய ரவுடியாக மாறிட்டு வர்றான். அவனால் ஸ்கூல்ல மத்த பசங்களும் கெட்டுப் போறாங்க."

துரைவேலு குலுங்கிக் குலுங்கி அழத் துவங்கினான். "ஐயா, நான் என்ன செய்வேன்? எம் பொஞ்சாதி கழுத்திலே இருந்த தாலித் தங்கத்தைக்கூட இல்லே கழற்றிட்டுப் போயிருக்கான். அவனை ஸ்கூல்லேயிருந்து வெலக்கிடுங்கய்யா. சோத்துக்கு வழியில்லேன்னா தன்னால் உழைச்சாவது சாப்பிடுவான்."

"காரணமில்லாம ஸ்கூல்லேயிருந்து விலக்க முடியாது. நீயும் புத்தி சொல்லு. வயசுக் கோளாறு எப்படியும் திருந்திடுவான்." என்றார்.

ஆனால் காரணத்தைத் தமிழ்ச் செல்வனே உண்டாக்கிக் கொண்டான்.

அப்போது ரங்காச்சாரி என்பவர் பள்ளியில் தலைமையாசிரியராக இருந்தார். சினிமாவில் வரும் ஸ்கூல் மச்சர்கள் போல் பஞ்சகச்ச வேஷ்டியும், கோட்டும், தலைப்பாகையும், ஸ்ரீசூர்ணமுமாக இருப்பார். மிகவும் கண்டிப்பானவர். ஒருநாள் பள்ளித் தலைமையாசிரியர் பள்ளி முடிந்து வீடு திரும்பும்போது, தமிழ்ச் செல்வன் பள்ளிச் சுவரில் அமர்ந்து சிகரெட் குடித்தவாறே அவ்வழியே செல்லும் பள்ளிப் பெண்களை வம்புக்கிழுப்பதைக் கண்டிருக்கிறார். தனியே சென்று கொண்டிருந்த பெண்ணொருத்தியின் நீண்ட இரட்டைச் சடையில் ஒன்றை அவன் பற்றி இழுத்ததை வேறு ரங்காச்சாரி பார்த்துவிட்டார். பண்புக்கும், உயர்வான குணங்களுக்கும்



பழகியிருந்தவர் ஆத்திரம் தாங்காமல் அவன் கன்னத்தில் பளார் என ஓர் அறை விட்டார். "என்ன தைரியம் இருந்தால் பள்ளிக்கு வெளியிலேயே இந்த மாதிரிக் காரியம் செய்வே. நீயெல்லாம் அக்கா, தங்கையுடன் பிறக்கவில்லே?" என்று கத்தினார்.

தமிழ்ச் செல்வனுடன் இருந்த மாணவர்கள் அவனுக்குத் துணை வராமல் நழுவிவிட, இவன் மட்டும் தைரியமாக இடுப்பில் கை வைத்து அவர் முன் நின்றான். "இல்லேயே ஸார், நான் அக்கா, தங்கைகூடப் பொறக்கல்ல. ஒங்களுக்கு வேணு பொஞ்சாதிகூட அக்காவாத் தென்படுவா" என்று கேலியாகச் சிரித்தான்.

பிள்ளைச்செல்வமற்ற தலைமையாசிரியரை அவன் பேச்சு தாக்க, அவர் அவன் காலரைப் பிடித்து மற்றும் ஓர் அறைவிட்டார். "என்னடா நினைச்சிருக்கே நீ. ஸ்கூல் படிப்பை முடிக்கறதுக்குள்ளே சிகரெட்டும், பொண்களும்.... உருப்படுவியா நீ... உனக்கெல்லாம் ஸ்கூல் எதுக்கு? போடா நாயே.... தெருவில் போய்ப் பொறுக்கு...." என்று தம் பலத்தை ஒன்று சேர்த்து மொத்தலானார்.

தமிழ்ச் செல்வன் திரும்பத் தாக்க முயல்வதற்குள் அக்கம்பக்கத்தினர் இருவரையும் பிரித்தனர். தலைமை ஆசிரியர் ஆத்திரம் அடங்குமுன் அவனைப் பள்ளியி





டாக்டர்: "சபாக்காரர்களிடமிருந்து எனக்கு நிறையக் கடிதம் வந்திருக்கு!"

பாடகர்: "என்னவென்று?"

டாக்டர்: "சங்கீத சீசன் முடியும் வரை தயவு செய்து உங்களை டிஸ்சார்ஜ் செய்ய வேண்டாமென்று!"

— வி. வைத்தியநாதன்.

விருந்து விலக்கிவிட்டார். அன்றிலிருந்து தான் அவரது தலைவலி துவங்கியது.

பள்ளிக்குவெளியேதமிழ்ச்செல்வன் தன் சகாக்களுடன் ஸ்ட்ரைக் துவங்கினான். மிகவும் அமைதியாகவும், கண்ணியமாகவும் நடந்து கொண்டிருந்த பள்ளியில், அவர்களின் தலைமை ஆசிரியரையும், பள்ளியின் பெண் ஆசிரியைகளையும் பற்றி மிக அசிங்கமான படங்கள் வரையப்பட்டு, கேவலமான வாசகங்கள் எழுதப்பட்டன. பயந்து போன ஆசிரியைகள் பள்ளிக்கே வரவில்லை. தலைமை ஆசிரியர் போலீஸுக்குத் தகவல் தெரிவிப்பதற்குள், அவர் தன்னை அடித்தே கொல்ல முயன்றதாகப் புகார் கொடுத்திருந்தான். காவல் நிலையத்தில் அவன் தலை நிமிர்ந்து பேச, ஒரு மாணவனைத் திருத்த வேண்டுமென்ற ஆத்திரத்தில் கைஉயர்த்திய ஆசிரியர் தலைகுனிந்து பதில் கூற வேண்டியதாயிற்று.

நல்லவேளை தமிழ்ச் செல்வன், பள்ளியில் சேர்த்துக்கொள் என்று துவங்காமல், ஒதுங்கினானே அதுவரை நிம்மதி என்று நினைத்தார். அவர் அதிக நாட்கள் நிம்மதியாக இருக்க முடியவில்லை. வெளியூரிலிருந்து இரவு பஸ்ஸுக்குத் திரும்பிக்கொண்டிருந்தவர், தெருத் தெருவாகத் துரத்தப்பட்டு, அவர் குடுமி அறுக்கப்பட்டது. பெருமாள் கோவிலில் சேவித்துவிட்டு வீடு வந்து கொண்டிருந்த அவர் மனைவியை 'தத்தியோன்னம் தாமாமி....' என்று நாலு ரவுடிகள் வழிமறித்து அவள் புடைவைத் தலைப்பைப் பற்றி இழுத்தனர். தமிழ்ச் செல்வன் இந்த விவகாரம் எதிலும் நேர்முகமாகச் சம்பந்தப்படவில்லை. அவனைச் சட்டத்தின் பிடியில் சிக்க வைக்கவும் வழியில்லை. மானியான தலைமையாசிரியர், 'போதும், இந்தத் தொல்லை!' என்று பள்ளியை விட்டுவிட்டு ஸ்ரீரங்கத்தில் விவசாயம் செய்யப் போய்விட்டார்.

இந்தக்காலக்கட்டத்தில்தமிழ்ச் செல்வன் தலைமையில் கிராமத்தில் ஒரு புது மாதிரியான இளைஞர் கூட்டம் சேரத் துவங்கியிருந்தது. அதிகப் படிப்பில்லை, உழைப்பதற்குச் சோம்பல், முடிந்தவரை ஒட்டுண்ணியாக வாழ்வது இல்லை அடித்துப் பறித்துக் காரியம் சாதிப்பது என்பது இவர்கள் வழக்கமாயிற்று.

இந்தச் சமயத்தில் தஞ்சாவூரில் இடைத் தேர்தல் வந்தது. தலைவர்களுக்குத் தொண்டர்கள் தேவைப்பட்டார்கள். கோஷம் போடவும் பேனர் கட்டவும், ஆள் சேர்க்கவும் ஆர்வமுள்ள இளைஞர்களின் அவசியம் வந்தது. தமிழ்ச் செல்வனின் இளைஞர் படை தஞ்சை நோக்கி முன்னேறியது. ஒரு மாதம் கழித்து ஜரிகை வேஷ்டி, தரையைப் பெருக்கும் துண்டுடன், கையில் பீடிக்குப் பதிலாக சிகரெட்டும், சாராய நெடியும் மடி நிறையச் சில்லரையுமாக ஊர் திரும்பினார்கள். தமிழ்ச் செல்வன் சென்னையில் பதவியிலிருந்த அண்ணன்மார்களுக்கு மிகவும் நெருங்கிய தம்பியானான். தஞ்சை மாவட்டத்திலேயே அவன் செல்வாக்கு உயர்ந்தது. அரசியலில் சம்பந்தப்பட்டவர்களுடன் எந்தக் காரியமும் இடைத் தரகர்கள் இல்லாமல் நடக்கவே முடியாதென்றாகிவிட்ட நிலையில், நிலத் தகராறிலிருந்து, பம்ப் கடன் விவகாரம் வரை பேச, அடிக்கடி முதல் வகுப்பில் சென்னை சென்றான் அவன். சம்பந்தப்பட்டவர்களை வெளியே நிற்க வைத்துவிட்டுத் தான் நேரே அமைச்சர்களின் அறைக்குள் சென்று பேசினான். நிறையப் பணம் கைமாறியது. அது மேல் வரை சென்று அடைந்ததா அல்லது வழியில் அவனால் முடக்கப்பட்டு விட்டதா என்று அறிந்து கொள்வதைவிடத் தங்கள் காரியம் ஆவதிலேயே அனைவரும் கண்ணாயிருந்தனர். இந்த மனோபாவத்தால் அவன் நன்றாக வேரூன்றி வளர்ந்து செழித்தான்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன், சேரியில் செருப்புத்தொழிலாளியாய் இருந்த ஆவுடையப்பன் மகன் ராஜவேலு, ஊர் ஜனங்கள் எதிர்பாராத வகையில் மருத்துவனாகத் திரும்பி வந்தான். ஊர் நடுவில் மருத்துவமனையும் போட்டான்.

தலைமை ஆசிரியரின் குடுமியை அறுத்து ஜாதி, சமத்துவத்தை ஊரில்நிலைநாட்டிவிட்டதாகத் தமிழ்ச் செல்வன் எண்ணினாலும் ஒரு சேரிப் பையன் ஊர்நடுவில் ஜம்மென உட்காருவதை அவனாலும், அவன் சகாக்களாலும் தாங்கமுடியவில்லை. அதோடு, சேரி ஜனங்கள் எதிர்க்கட்சி அனுதாபிகளாக இருந்ததால் ராஜவேலுவைக் கிராமத்து ஜனங்கள் ஏற்றுக்கொள்வது, எதிர்க் கட்சியின் வெற்றியுமாகும் என அவன் நினைத்தான்.

தமிழ்ச் செல்வன் ராஜவேலுவுடன் நேர்முகமாக மோதிப் பார்த்தான். ராஜவேலு அசையவில்லை. ஊர் ஜனங்களிடம் போதனை செய்தான். அதுவும் அவ்வளவு வெற்றிகரமான முயற்சியாக அமையவில்லை. சரியான மருத்துவ வசதியில்லாமலிருந்த ஊரில் ராஜவேலுவின் வருகை மிகவும் வரவேற்கப்பட்டது. அதோடு கைராசி டாக்டர் என்ற பட்டமும் கிடைத்தது. ஆசாரசீலர்கள்

கூட டாக்டரைச் சந்தித்த பிறகு, ஜுரத்துடன் வீடு சென்று தலை முழுகினாலும், அவரிடம் மருந்து வாங்கிக் கொள்வதை நிறுத்தவில்லை. ராஜவேலுவின் புகழ் பெருகப் பெருகத் தமிழ்ச்செல்வனின் காழ்ப்புணர்ச்சி அதிகமாயிற்று. ராஜவேலு வெள்ளாளர் தெருவில் வீடு வாங்கியதை ஊர் ஜனங்கள் இயல்பாக ஏற்றுக் கொண்டனர்.

ராஜவேலுவுக்குத் திருமணம் நடந்தது. படித்திருந்தும், தந்தை பார்த்துச் சொன்ன பள்ளிப் படிப்பை முடித்திருந்த முறைப் பெண்ணையே மணமுடித்தான். செல்வியிடம் சேரிப் பெண்களிடம் காணவே முடியாத நிறமும், அழகும், மதர்ப்பும் இருந்தன. ஆனால் ராஜவேலுவோ தோற்றத்திலும், சுபாவத்திலும் அவளுக்குச் சற்றும் பொருத்தம் இல்லாதவன்.

ஒவ்வொரு மாலையும் தலை நிறைய வண்ணக் க்ளிப்புகள் குத்திக் கதம்பம் சூடி, புருவத்தில் மை தீட்டி, நைலக்ஸ் புடைவை கட்டி, வாயிற்படியைப் பிடித்தவாறு கணவனுடன் சினிமாவுக்குச் செல்லக் காத்திருந்தாள் செல்வி. ''எனக்கு பேஷண்ட்ஸ் வர்ற நேரம், நீ யாராவது தோழிப் பெண்களைக் கூட்டிக்கிட்டுப் போய் வா'' என்பான் ராஜவேலு. தோழிப் பெண்கள் துணைக்குக் கிடைத்தாலும், டிக்கெட் கிடைக்காத நேரத்தில், எல்லா நடிகர்களுக்கும் ரசிகர் மன்றங்கள் துவக்கி, அவர்களின் உள் பூசல், பகை உணர்வுகளைச் சதுரங்கக் காய்களாக நகர்த்தி, பணமும் செல்வாக்கும்பெற்றுக்கொண்டிருந்ததமிழ்ச் செல்வன் உதவிக்கு வருவான்

தமிழ்ச் செல்வனின் தோற்றமும், லாவகமான பேச்சும் செல்வியை ஈர்த்தன. அத்தனை புதுப் படங்களுக்கும் ரிலீஸாகும் அன்றே ரசிகர் மன்ற டிக்கெட்டுகளை இலவசமாகத் தந்து அவளை முழுவதுமாக ஆக்ரமித்தான் அவன்.

ஒருநாள் செல்வி வீட்டை விட்டு ஓடி மறைந்து போனாள். மனைவியை முழுவதுமாக நம்பிக் கொண்டிருந்த டாக்டர் ராஜவேலு அவளுக்கு ஏதோ தீங்கு நடந்துவிட்டதென்று நம்பித்தான் போலீஸில் புகார் கொடுத்தான். அவளுக்கும் தமிழ்ச் செல்வனுக்கும் இடையிலான உறவு வெளியே வர, ராஜவேலு அவமானத்தில்சிறுத்துவிட்டான்.

பட்டணத்தில் ஒரு மாதம் செல்வியும், தமிழ்ச் செல்வனும் அரசியல்வாதிகள் தயவிலும் நடிகர்கள் தங்கள் மன்றங்களுக்குத் தந்த பொருள் வசதியாலும் ஜாலியாகப் பொழுது கழித்தார்கள். ராஜவேலு கட்டிய தாலியைக் கழற்றிவிட்டுத் தமிழ்ச் செல்வனுடனும் அவன் புதிதாகக் கட்டிய மஞ்சள் கயிற்றுடனும் ஊர் திரும்பினாள் செல்வி.

ராஜவேலு எதுவுமே நடக்காததுபோல் மனக் குமுறலை அடக்கிக் கொண்டு கண்ணியமாக விலகிவிடவே, ஊரும் அடங்கியது.

பெரிய தலைவர்கள் ஊருக்கு வந்து மேடை போட்டுப் பேசித் தமிழ்ச் செல்வனுக்கும் செல்விக்கும் பகுத்தறிவுத் திருமணம் செய்துவிட்டார்கள்.

செல்வியும் இப்போது மேலிடத்து அண்ணாச்சிகளை ஆராதிக்கக்கற்றிருக்கிறாள். அவளை வைத்துத் தங்கள் கட்சிக்கு ஊரில் 'பெண்கள் கிளை' தயார் செய்துவிட்டான் தமிழ்ச் செல்வன்.

ஜனங்களை அறிவு பூர்வமாகச் சிந்தித்து, நிதானமாகச் செயல்படவே விடாமல், சதா உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டு, அந்த ஆவேசத்தின் உச்சத்தில் அவர்களை வெறியர்களாக மாற்றி, கோஷம் போடும் பதுமைகளாக நிறுத்திவிட்டிருந்த ஓர் அரசியலுக்கு நிறையத் தமிழ்ச் செல்வன்களும் செல்விகளும் தேவைப்பட்டார்கள்.

இந்த மாய விளக்கில், ஞானசுந்தரி போன்ற விட்டில்களும், பாதை தெரியாமல் விழுந்தார்கள்.

(தொடரும்)

இளைய தலைமுறைக்கு

வழி விடுங்கள்!

இசைக் கலையிலும் சரி, அதன் இலக்கணத்திலும் சரி; இளைய தலைமுறை தன்னம்பிக்கையோடு முன்னேறுகிறது. பின்னுக்குத் தள்ளிவிட முடியாத இளைய தலைமுறைக் கலைஞர்களில் எடுத்துக் காட்டாகச் சிலர்:

திருவையாறில் தியாகராஜ ஆராதனை விழா. ஒன்பது வயது ஸ்ரீராம் பிடிவாதம் பிடித்துக் கொண்டிருந்தான்: "இன்றைக்கு உங்க கச்சேரிக்கு நான்தான் மிருதங்கம் வாசிப்பேன் அப்பா!" அது சாத்தியமில்லை என்று அன்பாக எடுத்துச் சொல்ல முயன்று தோற்றுக் கொண்டிருந்தார் அப்பா மணக்கால் ரங்கராஜன். சுற்றி இருந்த இசையுலக அன்பர்கள் கொடுத்த ஊக்கத்திலும் தைரியத்திலும் அன்று மணக்கால் ஸ்ரீராம் மேடையேறினான். பத்தே நிமிடங்களில் பாட்டை (சுவர ராக சுதா) முடித்துக் கொண்டார் ரங்கராஜன். ஸ்ரீராம் அரை மணி நேரம் 'தனி' வாசித்தான்! கச்சேரி முடிந்ததும் சிறுவனைக் காணவில்லை. ரசிகர் கூட்டம் அவனைத் தோள் மேல் தூக்கிக் கொண்டு கொண்டாடப் போய்விட்டது! அன்றிரவு சென்னை திரும்புவதற்கு வாங்கியிருந்த டிக்கெட்டை 'கான்ஸல்' செய்ய வேண்டியதாயிற்று.

இந்தச் சம்பவத்துக்குப் பிறகு செம்மை தம் வீடு தேடி வந்ததை ஸ்ரீராம் நெகிழ்ச்சியுடன் நினைவு கூர்ந்தார். 'கபாலி கோயிலில் நடக்கவிருந்த அவர் கச்சேரிக்கு நான் மிருதங்கம் வாசிக்கணும் என்றார். 'அவன் குழந்தை, அவனால் முடியாது' என்று அப்பா சொல்லிப் பார்த்தார். ஆனால் பெரியவர் அன்புக் கட்டளையே போட்டு விட்டார். எனக்கோ ஒரே உற்சாகம். நான்கு மணி நேரக் கச்சேரியின் இடையிடையே எனக்குச் சோர்வாக இருக்கிறதா என்று பரிவோடு விசாரித்தபடி இருந்தார். அவருடைய கடைசிக் கச்சேரிக்கு வாசிக்கிற வாய்ப்பை எனக்குக் கொடுத்தார். ஆனால் அப்போது எனக்குப் பரீட்சை இருந்ததால் போக முடியவில்லை. மறுநாள் அவர் மேடையிலேயே காலமான செய்தி கிடைத்ததும் ஆடிப் போனேன்."

எல்.. சுப்ரமணியம், பாலமுரளி, பாலசந்தர் உள்படப் பல முன்னணி வித்வான்களுக்கு வாசித்து வருகிறார் ஸ்ரீராம். என்



பிடிவாதம் வென்றது

இசையையே முழு நேரப் பணியாக ஏற்றுக் கொள்ளவில்லை என்று கேட்டபோது, "அப்படிச் செய்ய ஆசைதான். ஆனால் இந்தக் காலத்தில் யதார்த்தமாக, நடைமுறைக்கு ஏற்ற மாதிரி யோசிக்க வேண்டியிருக்கிறதே!" என்று சிறிது வருத்தம் தோய்ந்த





* லால்குடி முத்திரை

* தாமதமான ஞானோதயம்





ஜீவனுள்ள நிழல்.



* முழு நேரமும் இசைக்குத்தான்

குரலில் சொன்னார். பி.எச்.இ.எல்.லில் பணிபுரிகிறார் ஸ்ரீராம். இவர் மனைவி பி.ஏ. மியூசிக் படித்து வருகிறார்.

“எங்கப்பாவுக்கு நான் டாக்டராகணும்னு ஆசை; அம்மாவுக்கோ நான் மேடைப் பாடகராகணும்னு விருப்பம்...” என்றார் டாக்டர் சிவசிதம்பரம்.

“அப்ப உங்களுக்குன்னு எந்த ஆசையுமில்லையா?” என்று கேட்டபோது, “இந்த ஆசைகள், அதிர்ஷ்டவசமாக என்னுடைய ஆசைகளாகவும் இருந்தன” என்றார் சிரித்தபடி.

“அப்பாவின் நிழலாக இருக்க வேண்டியதைப் பற்றி...”

“பெருமைக்குரிய விஷயம்தான். சில எதிர்பார்ப்புகளுடன்தான் ரசிகர்கள் என் கச்சேரிக்கு வருவார்கள். அவர்களுக்குச் சிவசிதம்பரம் பாட்டில் சீர்காழியும் தெரிய வேண்டும், அவர் மகனும் தென்பட வேண்டும். அப்பாவின் பாணியையும் என் தனித்தன்மையையும் சரியான விகிதத்தில் கலந்து நான் தர வேண்டும். அப்பாவும் நான் தனித்தன்மை குன்றாமல் பாடணும்னுதான் சொல்லுவார். நான் முறையாகப் பாட்டுக் கற்றுக் கொள்வது அப்பாவுடன் இசை பயின்ற பி. கிருஷ்ணமூர்த்தியிடம். (பி.ராஜம் அய்யரின் சகோதரர்) எனவே இவர் பாணியின் பாதிப்பும் என்னிடம்

இருக்கும்.

"நான் உன்னை இந்தத் துறையில் ஈடுபடுத்தலை; நீயேதான் அதில் ஆர்வம் காட்டினாய். ஒரே ஒரு விஷயம் தவறாமல் செய்யணும். தினமும் நீயே தம்பூராவுக்குச் சுருதி சேர்த்து அரை மணி நேரமாவது பாட வேண்டும்" என்று சீர்காழி சீனியர் தம் மகனுக்குச் சொல்லியிருக்கிறாராம். "கூடிய வரைக்கும் இதைத் தவறாமல் செய்து வருகிறேன்" என்று சொல்லும் டாக்டர் சிவசிதம்பரம் 'மியூசிக் தெரபி'யில் ஆய்வு செய்யும் திட்டங்கள் வைத்துள்ளார்.

பிரத்தியேகமாக ஒரு குட்டிப் புல்லாங்குழலை மாலாவுக்காக வாங்கினார்கள். "வாசி குழந்தை, வாசி குழந்தை" என்ற பல்லவிதான் தினமும். மாலாவுக்கோ நாட்டம் குறைவாகவே இருந்தது. வேண்டா வெறுப்பாகத்தான் வாசிக்க ஆரம்பித்தாள். ஆனால் சங்கீத தேவதைக்கு அவள் மேல் பாசம். அநாயாசமாகப் பாட்டு வந்து தொற்றிக் கொண்டது! பள்ளி, கல்லூரி போட்டிகளில் பரிசுகள் குவிந்தன. கல்லூரி நாட்களில் ம. வி. யில் ஆடிஷனுக்குப் போய், தேர்வும் ஆகி, வாசித்தபோது, ஏகோபித்த பாராட்டுக் கிடைத்தது. மேடைக் கச்சேரிகள் வாசிக்கச் சொல்லிக் கேட்க ஆரம்பித்தார்கள்.

"அப்போதுதான் நான் விழித்துக்கொண்டேன்" என்றார் மாலா சந்திரசேகர். "சரி! நம்மிடமும் ஏதோ கொஞ்சம் சரக்கு இருப்பதால்தான் கேட்கிறார்கள் என்று புரிந்தது. இன்னும் நன்றாக வாசிக்கணும், முன்னேறணும்னு ஆசை வந்தது. ஆரம்ப நாட்களில் 'ஊது ஊது' என்று வற்புறுத்திய பெற்றோருடைய அறிவுரைகளின் அருமை புரிந்தது. இப்போதும் என் அதிர்ஷ்டம் பாருங்கள். புகுந்த வீட்டிலும் அதே அன்பான ஆதரவும் ஊக்கமும் தொடர்கிறது."

இவர் பிறந்த வீடு: சிக்கில் சகோதரிகள் இல்லம். புகுந்த வீடு: எம். எஸ். ஸின் குடும்பம்.

விவேகானந்தா கல்லூரியில் படிக்கும் விஜயசிவாவுக்கு என்ஃபீல்டு நிறுவனத்திடமிருந்து திடீர் அழைப்பு: 'உங்களுக்காக இங்கே வேலை காத்துக்கிட்டிருக்கும். நீங்கள் எப்போது வேண்டுமானாலும் வரலாம்!' என்று. ஆனால் முழு நேரப் பாடகனாக வேண்டும் என்பதுதான் இவரது ஆசை.

இவர் அம்மா அகிலா சிவா. இளம் வயதில் நிறையக் கச்சேரிகள் செய்தார். அப்போதெல்லாம் விஜய் மேடையில் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டிருப்பாராம். கச்சேரியில், கடைசிப் பகுதி விஜய்க்கு ஒதுக்கப்படும். குழந்தைக் கலைஞனின் பாட்டை எல்லோரும் ஆச்சரியத்துடன் கேட்பார்கள். கல்யாணக் கச்சேரியானால் கரண்டியும் கையுமாகச் சமைப்பவர்கள் கூட வந்துவிடுவார்கள்!

டி. கே. ஜயராமனிடம் முறையான இசைப் பயிற்சி பெற்றுத் தனிக் கச்சேரிகள் செய்ய ஆரம்பித்தார். நல்ல சங்கீதத்துக்கு எது மிகவும் அவசியம் என்று கேட்டபோது, "சுருதியும் லயமும் சுத்தமாக இருக்கணும்" என்றார். "பக்தியும் ஈடுபாடும் இரண்டாம் பட்சமா?" என்று கேட்டதும், "பாடுபவனுக்குப் பாட்டில் ஈடுபாடும் இசையிடம் பக்தியும் இருந்தால் போதும். அதைவிட்டுப் பாடல் போற்றும் தெய்வத்திடம் பக்தி இருக்க வேண்டும் என்று சொல்வது இசையை ஒரு குறுகிய வட்டத்துக்குள் அடைப்பதாகும்" என்றார் விஜய்.

"இளைய தலைமுறையினரிடம் நிறைய இசை ஆர்வம் இருக்கு" என்று சொல்லும் விஜய சிவா இசை வாழ்க்கை வாழ்வதில் உறுதியாக இருக்கிறார்.

"**சா**ர்டர்ட் அக்கவுண்டன்டாக இருக்கும் உங்களுக்கு வயலின் பயிற்சிக்கு எப்படி நேரம் கிடைக்கிறது?" என்று கேட்ட போது, அனுராதா பிரும்மானந்தத்துக்கு லேசான அதிர்ச்சி.

"இசை என் ரத்தத்தில் ஊறிப் போன விஷயம். ஒரு நாளைக்கு வயலின் வாசிக்காமல் இருப்பது என்பதை என்னால் கற்பனை செய்து கூடப் பார்க்க முடியாது. அது என் வாழ்க்கையின் ஓர் அம்சம்" என்றார் அவசர அவசரமாக.

சி. ஏ. வில் முதல் 'அட்டெம்ப்டில்' முதல் வகுப்பில் தேறி, தன்னுடன் பயின்ற பெண்கள் இருவருடன் சேர்ந்து அனு அண்டு அஸோஸியேட்ஸ் என்ற நிறுவனத்தைத் துவங்கியுள்ளார். இவருக்கு அசோக் லேலண்ட் கூப்பிட்டு வேலை கொடுத்தது; சில மாதங்கள் செய்து பார்த்து, முழு நேர வேலை செய்தால் இசைக்கு ஒதுக்கும் நேரம் குறைகிறது என்பதால் ராஜினாமா செய்து விட்டாராம். "இப்போது அனு அண்ட் அஸோஸியேட்ஸ் நன்றாக நடக்கிறது. இன்னும் வளர்ந்தால் மவுண்ட் ரோடில் இடம் தேட வேண்டும்" என்கிறார். மற்ற இரு பார்ட்னர்களும் அலுவலகத்தைச் சிறப்பாகக் கவனித்துக் கொள்வதால் அனுராதாவுக்குக் கவலையில்லாமல் வயலினில் கவனம் செலுத்த முடிகிறது.

அம்மா லால்குடி ஸ்ரீமதி பிரும்மானந்தத்துடன் இணைந்தும் முன்னணிப் பாடகர்களுக்குப் பக்கவாத்தியமாகவும், தனியேயும் தன் திறமையை வெளிக்காட்டி வரும் அனுராதாவின் வாசிப்பில் லால்குடி முத்திரை மிளிர்கிறது.

திருமணம் ஆனால் குடும்பப் பொறுப்பையும் சேர்த்து அல்லவா சமாளிக்க வேண்டும் என்ற போது, சிறிது வெட்கத்தினிடையேயும், 'ஏன் முடியாது?' என்ற தன்னம்பிக்கைப் பார்வையால் பதில் சொன்னார் அனுராதா.

— சீதா ரவி

புகைப்படங்கள்: கே. வி. ஆனந்த்


nutrine
MILK
மீண்டும் மீண்டும்
சுவைக்கத் தூண்டும்
நியூட்ரின்
மில்க் பிஸ்கட்ஸ்
nutrine
BISCUITS
MILK
nutrine
ACIL/009/86-Tam



பாடசாலை வித்யார்த்திகளின் ஒரு பகுதி

மஹான் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதரவர்களால் 1542ல் ஸ்தாபிக்கப்பட்டு தொடர்ந்து நடந்து வரும் வேத பாடசாலையை மேற்படி ஸமிதியானது தாய் போல் இயங்கிக் காப்பாற்றி வருகிறது. தற்போது பாடசாலையில் 75 மாணுக்கர்கள் வேதாத்யயனம் செய்து வருகின்றனர். அவர்களுக்கு ஒரு நாள் உணவளிக்க சுமார் ரூ 200/– ஆகிறது. இந்த தர்மம் நிரந்தரமாய் நடக்க ரூ 2000/– மூலதனம் ஏற்படுத்தியோ அல்லது அவ்வப்போது ரூ 200/– அனுப்பியோ ஒரு குறிப்பிட்ட தினத்தில் உணவளிக்கும் கைங்கர்யத்தில் பங்கு கொள்ளக் கோருகிறோம்.

நன்கொடை அனுப்ப வேண்டிய பெயரும் முகவரியும்:

அத்வைத வித்யாசார்யா மஹா ராஜா ஸாஹேப்
ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் புண்ய ஸ்மரண ஸமிதி
D–76, மூன்றுவது கிராஸ் தெரு, ஸ்ரீநகர் காலனி,
கும்பகோணம்—612 001.

இந்த நன்கொடைக்கு 80G விதியின்படி வருமான வரிவிலக்கு உண்டு.



பட்டுக்கோட்டை பிரபாகர்

என்னைக் காணவில்லை

21 "வாட்?" என்று படுத்திருந்த பரத் எழுந்து விட்டான். "கடைசில சொன்ன பேர் என்ன?"

"பிரேமா" என்றாள் சுசீலா.

"பிரேமான்னு... பிரேமான்னு..."

"அசோக்கோட காதல் குருவி."

"அவளுக்கு ஈஸ்வரன் அண்ணனு? ஈஸ்வரன் நாகராஜனைக் கொலை செஞ்சதுக்குப் பிரேமா உடந்தையா? அந்தப் பழியை அசோக் மேல விழ வைக்கிறதிலே இவளுக்கு ஆர்வம்னு... அது என்ன காதல்?"

"பொய்க் காதல். வேஷக் காதல்; விஷமக் காதல்."

பரத் தலையை அவசரமாக உதறிக் கொண்டான்.

"எனக்கு இப்போ எல்லாம் கிளியராப் புரியுது. முருகேசன், உடனடியா அசோக்கைப் பார்க்கணும். கொஞ்சம் பேசணும். கொஞ்சம் எச்சரிக்கணும். தவிர... அவனை அந்தப் பங்களாவிலேர்ந்து உடனே அப்புறப்படுத்தணும்."

"ஏன் பரத்?" என்றாள் சுசீலா.

"ஈஸ்வரன் கிட்டே வெளிநாடு போயிருக்கிற என்னோட நண்பனோட வீட்ல தங்க வச்சிருக்கேன்னு சொல்ல வேண்டியதாப் போச்சு. அந்தத் தகவலை வச்சி அவன் தீவிரமா விசாரிச்சா அந்த இடத்தைக் கண்டுபிடிச்சிடலாம்."

"ஓக்கே. அசோக்குக்கு போன் செஞ்சிடலாம்."

"முடியாது. அங்கே போனை நான் தொடர்பு துண்டிச்சி வச்சிருக்கேன். நேர்லதான் போயாகணும். சுசி, நீ வீட்லயே இரு. நானும், முருகேசனும் போய்ட்டு வந்துடறோம். இன்னொரு விஷயம். நான் தண்டவாளத்திலிருந்து தப்பிச்சது ஈஸ்வரனுக்குத் தெரியாதுன்னு நினைக்கிறேன். சப்போஸ் தெரிஞ்சா மறுபடி என்னைத் தாக்க வருவான். அதனால வீட்டுக்கு போலீஸ் பாதுகாப்பு வேணும்."

"நான் ஏற்பாடு பண்றேன் பரத்" என்று முருகேசன் இரண்டு எண்களுடன் போனில் பேசிவிட்டு வைத்து, "வா. நான் ஓட்றேன் பைக்கை. நீ பின்னடி உக்காரு" என்றார்.

பரத் வழிசொல்லிக் கொண்டே,

அசோக்கின் கதையைச் சுருக்கமாகச் சொன்னான்.

பைக் நின்றதும் அவசரமாக இறங்கிச் சென்று, பைக்குள்ளிருந்து சாவியை எடுத்துப் பூட்டைத் திறந்தான் பரத்.

''பரத், பூட்டியா வச்சிருக்கே? தப்பு!''

''வீட்ல யாருமில்லேங்கிற தோற்றத்தை ஏற்படுத்தறதுக்காக வாசல் பக்கம் மட்டும் தான் பூட்டு. பின்பக்கம் ஒரு வாசல் உண்டு. அதை அசோக் உள்பக்கம் தாழ்ப்பாள் போட்டுப்பான். ரொம்ப எமர்ஜென்சின்னா அதைத் திறந்து வெளியே வரச் சொன்னேன். என்ன, இன்னும் கதவு திறக்கலே?'' என்று காலிங் பெல்லை மீண்டும் அழுத்தினான் பரத்.

அமைதி. நான்கைந்து முறை அழுத்தியும் நிசப்தம்.

''ரொம்ப அசந்து தூங்கறார் போலிருக்கு.''

''இவ்வளவு அசந்தா தூங்குவாங்க?''

''வா பரத், பின் பக்கம் போய்க் கதவைத் தட்டுவோம்.''

இருவரும் வீட்டைச் சுற்றிக் கொண்டு பின்புறம் வந்து அங்கு இருந்த வாசல் கதவில் கை வைத்ததுமே... அது உள்பக்கமாகத் திறந்து கொண்டது — உடனடியாக.

''மைகாட்! தாழ்ப்பாள் போட்டுக்காம உள்ளே தூங்கறான் இடியட்! அசோக்! அசோக்!'' என்று உள்ளே வந்து ஹாலின் லைட் சுவிட்ச்சைப் போட...

யாருமில்லை. அருகில் இருந்த பெட்ரூமில், சமையல்கட்டில், மாடியில் என்று எங்கும் எவரும் இல்லை.

''என்ன பரத் இது?'' என்றார் முருகேசன்.

''இன்னிக்குக் காலைல கூட வந்து அசோக் கூட பேசினேன். என்னோட உத்தரவு இல்லாம வெளில எங்கேயும் போகக் கூடாதுன்னு சொன்னேன். போக மாட்டேன்னு பிராமிஸ் பண்ணான்ப்பா.''

''யாராச்சும் கடத்திக்கிட்டு...''

''நோ! பின் வாசல் தாழ்ப்பாள் சேதம் இல்லாம இருக்கு. இயல்பாத் திறந்து வெளியே வந்து கதவைச் சாத்தி வச்சிட்டு எங்கேயோ போயிருக்கான் முட்டாள்.''

''பின் கதவை யாராவது தட்டியிருக்கலாம். யாருன்னு பார்க்கக் கதவைத் திறந்திருக்கலாம். வாயைப் பொத்திக் கடத்தியிருக்கலாம். சான்சஸ் ஆர் தேர்.''

''இல்லே முருகேஷ். இந்த இடத்தை அவ்வளவு சீக்கிரம் அவங்க கண்டுபிடிக்க முடியாது. வாய்ப்பு இல்லே. யார் கதவைத் தட்டினாலும் திறக்கவே திறக்காதே, பதிலும் சொல்லாதேன்னு கண்டிப்பா சொல்லி வச்சிருக்கேன்.''

''ரைட். அசோக் இப்ப இங்கே இல்லே. அவனாக எங்கேயோ போயிருக்கணும்னு சொல்றே. எங்கே போயிருக்கலாம்னு யூகிக்கறே பரத்? சொல்லு. நீ நினைக்கிற இடங்களிலே பார்த்துடலாம்.''

''அசோக் என் பேச்சுக்கு எதிர்ப்பே காட்டலே. நீங்க சொல்றபடி எல்லாம் நடந்துக்கறேன் — இந்தக் கொலைப் பழியிலேர்ந்து விடுவிச்சாப் போதும்னான். நான் போட்ட கண்டிஷன்ல அவனுக்குப் பிடிக்காத ஒண்ணே ஒண்ணு — அவனோட காதலி பிரேமாவுக்குக் கூட இருக்கிற இடம் தெரியக் கூடாதுன்னதுதான். அவளைப் பார்க்கணும், பேசணும்னு துடிச்சான். காலைல கூட ஒரே ஒரு தடவை போன் மட்டும் செஞ்சுக்கறேன்னு கெஞ்சினான். நான் மறுத்துட்டேன்.''

''அப்ப சிம்ப்பிள். அசோக் பிரேமாவைப் பார்க்கத்தான் போயிருப்பான்.''

''இந்த ராத்திரிலயா?''

''தலைமறைவா இருக்கிறவன் பகல்லபோக முடியுமா?''

''முருகேஷ், இப்ப மணி பன்னிரண்டாகப் போகுது. ரொம்ப அன்டைம் இது. இந்த நேரத்திலே அவளை எப்படிச் சந்திப்பான்? அவ பெண்கள் விடுதியிலே இருக்கிற பொண்ணு. ஆனா, நீ சொன்ன மாதிரி அவன் அவளைப் பார்க்கத்தான் போயிருந்தா — தட் சஸ் எ காப்பிட்டல் மிஸ்டேக் ஆஃப் அசோக். பிரேமா அவனுக்கு உண்மையான காதலி இல்லே. அந்த வேஷம் போட்டிருக்கிற அப்பட்டமான எதிரி. இவன் இருக்கிற இடத்தைத் தெரிஞ்சுக்க என் வீட்டுக்கு வந்து போராடித் தோத்தவ. இவ அண்ணன் ஈஸ்வரன் மூலமா என்னையே கடத்தி, உதைச்சி இடம் தெரிஞ்சிக்க முயற்சி பண்ணினவ. இப்போ அவளைச் சந்திக்க இவன் போயிருந்தா — காட் ஒன்லி கேன் சேவ் ஹிம். அண்ணனுக்குத் தகவல் கொடுத்துடுவா. அள்ளிக்கிட்டுப் போய் சட்னி பண்ணிடுவான் முருகேஷ்.''

''பரத், பேசிக்கிட்டே நிக்கிறதிலே அர்த்தம் இல்லே. பிரேமா இருக்கிற விடுதி விலாசம் உனக்குத் தெரியுமா?''

''தெரியும்.''

''கமான் மேன். பேசாதே இனி. போலாம் அங்கே.''

வேப்ப மரங்கள் அடை காத்த விடுதியின் வாசலில் நாற்காலி போட்டு கேட்டில் சாய்ந்து சுகமான உறக்கத்தில் வாட்ச்மேன். தூக்கம் கலைந்து, உடுப்பில், குரலில் மிரண்டு,

''வார்டன் அம்மா உள்ளதான் குவார்ட்டர்சில தூங்கறாங்க எழுப்பிட்டு வரட்டுமா?'' என்றான்.

''வேணாம். நாங்க பிரேமாங்கிற பொண்ணைப் பார்க்கணும்.''

''இந்த ராத்திரிலயா? காலைல வாங்க.''

''யோவ், சொல்றேனில்ல — இது அர்ஜெண்ட்டுன்னு, போ — போய் ரூம்லேர்ந்து எழுப்பிக் கூட்டிட்டு வா. விசாரிக்கணும்.''

''அது... வந்து.... வந்து...''

''என்னய்யா இக்கல்? சரி போய் வார்டனம்மாவைக் கூப்புடு. பேசிக்கிறோம்.''

''சார், வேணாம் சார். நான் சொல்லிடறேன்.''

''சொல்றியா? என்ன சொல்றே?''

''அஞ்சு ரூபா எனக்குக் கொடுத்துட்டு வார்டன்கிட்டே சொல்லாதேன்னு சொல்லிட்டுப் பிரேமா செகண்ட் ஷோ சினிமா

வுக்குப் போய்டுச்சி.''

''யார் கூட?''

''தெரியாதுங்க. ஆட்டோல அந்தப் பையன் உக்காந்திருந்தான். இது போய் ஏறிக்கிச்சி. ஆட்டோ போய்டுச்சி.''

''எந்த சினிமா?''

''கேக்கலேங்க. சொல்லலேங்க.''

''முருகேஷ். நிச்சயமா அது அசோக் தான்.''

மலேயடிவாரத்தில் ஏழு வில்லன்களும் மாறி மாறி வரிசையாக வந்து கதாநாயக னிடம் ரேஷன் அரிசி போல் கணக்காக அடி வாங்கிக் கொண்டு பொத் பொத் தென்று விழுந்து அடுத்த ஷாட்டில் மீண்டும் பாய்ந்து கொண்டிருக்க...

''என்ன பிரேமா, யோசனையிலேயே இருக்கே. பேசவே மாட்டேங்கறே... என் மேல் கோபமா? நான் என்ன செய்றது பிரேம்? பரத் கண்டிப்பாச் சொன்னதால உன்னைத் தொடர்பு கொள்ள முடியலே. இன்னிக்கு எது ஆனாலும் சரின்னு துணிஞ்சி வெளியே வந்து உனக்கு போன் செஞ்சி சினிமாவுக்கு வந்தாச்சி. பேசவே மாட் டேங்கறே...'' என்றான் அசோக்.

''பாத்ரூம் போய்ட்டு வந்துட்றேன் அசோக்.''

''என்ன இது. வந்ததிலேர்ந்து மூணு தடவை ஆய்டுச்சி.''

''வயிறு சரியில்லே அசோக்'' என்று எழுந்து வரிசையில் இருந்து வெளிப்பட்டுக் கதவைத் திறந்து வெளியே வந்து மானேஜர் அறைக்குள் வந்தாள் பிரேமா.

''என்னம்மா இது. நீயும் அரை மணி நேரத் துக்கு ஒரு தடவை ட்ரை பண்றே. நம்பர்ல எடுக்க ஆள் இல்லே. சும்மா ஏன் எங்களைத் தொந்தரவு பண்றே?''

''இதான் சார் கடைசித் தடவை. ப்ளீஸ்.''

''சரி பண்ணிக்க.''

பிரேமா ரிசீவரை எடுத்து எண்களைச் சுழற் றினாள்.

ட்ரிங்... ட்ரிங்...ட்ரிங்..., ''ஹலோ'' என்றான் ஈஸ்வரன்.

''அண்ணா, நான்தான் பிரேமா.''

''ஏய்... என்ன இது இந்த நேரத்திலே... எங்கேர்ந்து பேசறே?''

''ஈகா தியேட்டர்.''


''அங்கே எங்கே போனே?''





''அண்ணு, சந்தோஷமான செய்தி.''
''என்ன?''
''அசோக்கைச் சந்திச்சேன்.''
''ஏய்! எங்கே இருக்கான், சொல்லு சீக்கிரம்?''
''நானும் அவனும்தான் சினிமாவுக்கு வந்தோம். படம் பார்த்துக்கிட்டிருக்கான். நான் மானேஜர் ரூமிலேர்ந்து அரை மணி நேர இடைவெளி விட்டு விட்டு மூணு தடவையா முயற்சி பண்ணி இப்பதான் நீ கிடைச்சே.''
''பத்து நிமிஷம் முன்னுடிதான் வந்தேன்.''
''பரத் என்ன பண்றூர்?''
''இந்த நேரம் சொர்க்கத்துக்கு விலாசம் விசாரிச்சிக்கிட்டிருப்பார். அதை விடு. நான் டாக்சி எடுத்துக்கிட்டு நேரா தியேட்டர் வந்துடறேன். உடனே வர்றேன். படம் விட்டு இயல்பா வெளியே வந்து இயல்பா என்னைக் கூப்பிட்டு என் வண்டில ஏறிக்கங்க. அதுக்கப்புறம் நான் பார்த்துக்கறேன்.''
''சரி'' என்று போனை வைத்துவிட்டு ஒரு ரூபாய் கொடுத்துவிட்டு மறுபடி தியேட்டருக்குள் வந்து அசோக்கின் அருகில் அமர்ந்தாள்.
''ரொம்ப டயர்டா இருந்தாப் போய்டலாம் பிரேமா.''
''வேணும். பரவாயில்லே.''
''ஏதாச்சும் மாத்திரை வாங்கிட்டு வரட்டுமா?''
''இங்கே பக்கத்திலே கடை எதுவும் இல்லே. படம் முடிஞ்சு திரும்பறப்போ பார்த்துக்கலாம் அசோக்'' என்று அவனது கையை எடுத்துத் தன் மடிமீது வைத்துக் கொண்டாள்.
A Film By.... என்று டைரக்டர் அலட்டிக் கொண்டதும்...
மக்கள் எழுந்து வாசல்களை அடைத்தனர்.
கைகோத்து வெளியே வந்த பிரேமா, ''வாங்க அசோக். டாக்சியில போய்டலாம்'' என்று இயல்பாய் நடத்தி, ஈஸ்வரனின் டாக்சியில் ஏறிக் கொள்ள, ஈஸ்வரன் கதவைச் சாத்திப் புறப்பட்டுச் சில நிமிடங்களில் அறுதை சாலைக்கு வந்து கர்ரை இரும வைத்து நிறுத்தினான்.
''என்னப்பா ஆச்சி?''
''பார்க்கிறேங்க'' என்று இறங்கிப் பின் கதவைத் திறந்து, ''சார் காலைத் தூக்குங்க, வேஸ்ட் துணி எடுக்கணும்'' என்று சமீபித்துச் சட்டென்று பாக்கெட்டில் இருந்து கைக்குட்டையை எடுத்து அசோக் நிதானிக்கும் முன்பாக அவன் சுவாசத்தில் அசுத்தம் ப்ளாஸ் நச்சு கலந்து... விருடிகளில் வெட்டின வாழையாய்ச் சரிய வைத்தான்.
''கை கொடு பிரேமா. இவ்வளவு சுலபமா இவனைப் பிடிப்போம்னு நினைக்கலே.''
''இனிமேதான் எச்சரிக்கையா இருக்கணும் அண்ணு.''
''நீ கவலையே படாதே பிரேமா. நான் பார்த்துக்கறேன்.''
''என்ன செய்யப் போறே இவனை? கொலையா?''
''அது முட்டாள்தனம்.''
''பின்னே?''
''அசோக் தற்கொலை செஞ்சுக்கப் போறுன் பிரேமா.''
''எப்படி?''
''செஞ்சுக்க வைப்பேன். முதல்ல வீட்டுக்குப் போய் இவனைக் கிடத்திடறேன். நம்ம தோஸ்த்தை விட்டு உன்னை விடுதில ட்ராப் பண்ணச் சொல்றேன். அசோக்குக்கு உணர்வு திரும்பினதும் துப்பாக்கி முனையிலே தற்கொலைக் கடிதம் எழுத வச்சி, விஷம் குடிக்க வச்சி, கடற்கரையோரத்திலே போட்டுடப் போறேன், தட்ஸ் ஆல்.''
ஈஸ்வரன் தன் வீட்டின் வாசலில் டாக்ஸியை நிறுத்தினதும், அவன் தோஸ்த் கதவைத் திறந்து கொண்டு வந்தான். இருவருமாகப் பிடித்து அசோக்கை உள்ளே கிடத்தியபின்...
''பிரேமாவை ஹாஸ்டல்லே விட்டுட்டு வந்துடு.''
டாக்சி புறப்பட்டது. வீட்டின் கதவைச் சாத்திவிட்டு வந்த ஈஸ்வரன், படுத்திருந்த அசோக் விழி திறப்பதற்காகக் கையில் துப்பாக்கியுடன் காத்திருக்க...
விடுதியின் வாசலில் சிகரெட் புகைத்துக் கொண்டு பரத்தும், முருகேசனும் பிரேமாவுக்காகக் காத்திருந்தார்கள்....
''வண்டியை இங்கே மெயின் ரோட்லயே நிறுத்திடுங்க'' என்று இறங்கிச் சந்தில் நுழைந்து தன் விடுதியை நோக்கி நடந்த பிரேமா தூரத்தில் இருந்தே அவர்கள் இருவரையும் பின்புறமாகப் பார்த்தாள்.

— (அடுத்த வாரம் முற்றும்)





பாலைவன ரோஜாக்கள்

அநியாய அரசியல்வாதிகளை எதிர்த்துப் போராடும் ஒரு பத்திரிகை ஆசிரியரைப் பற்றிய கதை. கதையின் முடிவில் அநியாய அரசியல்வாதிகள் நிலைக்கிறார்கள். பத்திரிகை ஆசிரியர் அழிக்கப்படுகிறார்.

கோயிலுக்குப் பக்கத்தில் சாராயக்கடை வைத்துப் பரிபாலனம் செய்வது —

குடிசைவாசிகளை அப்புறப்படுத்துவதற்காக, அந்தக் குடிசைவாசிகளுக்கிடையே விபசாரத்தில் ஈடுபடுபவர்களையும், கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களையும் நுழைத்து, பொய் வழக்கு ஜோடிப்பது —

கலெக்டருடைய ஃபைலில் இருந்து அவருடைய உதவியாளர் முக்கியமான பேப்பரை அபேஸ் செய்வது —

என்று ஆட்சியில் நடக்கிற, நடக்கக் கூடிய அத்தனை அக்கிரமங்களையும் வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது படம். யதார்த்தம், யதார்த்தம் என்று என்னதான் நிச்சயமாகத் தெரிந்தாலும், திரைக்கதை, வசனங்களுக்குப் பொறுப்பேற்று இருப்பவர் எதிர் முகாமின் தலைவர் என்பதால் மிகை வர்ணம் பூசப்பட்டுக் காட்டப்படுகிறதோ என்ற சந்தேகமும் ஓர் ஓரத்தில் எழாமல் இல்லை.

சத்யராஜ் கலைஞரின் வசனத்தைக் கரைத்துக் குடித்து அபாரமாய் வெளிப்படுத்தி இருக்கிறார். 'நமது நாடு' என்று ஒரு பத்திரிகை நிஜமாகவே வெளிவருவது போலவும், அதன் ஆசிரியர் நிஜமாகவே இருப்பது போலவும் ஒரு பிரமையை இவர் ஏற்படுத்தி இருப்பதைப் பார்த்தால் கூடிய விரைவிலேயே இமயத்தின் உச்சியில் நடிப்புக் கொடியைநாட்டப்போகிறார்என்பதுசந்தேகமறத் தெரிகிறது.

இறுக்கமான முகபாவம் ஆபீஸில். பாசவலையின் காரணமாகப் பிரச்னைகளில் சிக்கி, உணர்ச்சிக் கொந்தளிப்புகளையுடைய முகபாவம் வீட்டில். இருதுருவங்களிலும் லட்சுமி சக்கைப் போடு.

கிளுகிளுப்புக்காக இருக்கட்டுமேயென்று வசந்த், மாதுரி பாத்திரங்களை வைத்தார்களோ என்னவோ, படத்தின் ஸீரியஸ்னெஸ் அந்தப் பாத்திரங்களைத் தலைதூக்காமல் செய்து, படத்தோடு ஒட்டவிடாமல் விரட்டியடித்திருக்கிறது.

பிரபு — நீண்ட நாட்களுக்குப் பின் நல்ல பாத்திரமேற்று மினுமினுக்கிறார்.

பாடல்களைப் பற்றி யாருமே கவலைப்படவில்லை போலும். அதனால் இரண்டோடு போதும் என்று நிறுத்திக் கொண்டார்கள். அப்படியும் ஜனகராஜ் பாடும் தத்துவப் பாடல்(?) ஒன்றும் சோடை போய்விடவில்லை.

இவ்வளவு அடர்த்தியான படத்தில், ஜனகராஜிற்கு வேலையே இல்லையென்றாலும், அவர் தோன்றுகிற இடத்தில் அளவாகச் சிரிக்க வைத்து, உயிர் விடுகிற இடத்தில் இரண்டு சொட்டுக் கண்ணீரையும் சிந்த வைத்திருக்கிறார் என்றால் — டைரக்டருக்கு 'ஜே'யா, ஜனகராஜிற்கு 'ஜே'யா என்று தெரியமாட்டேன் என்கிறது.

மலேசியா வாசுதேவன் அமர்க்களம்.

இடைவேளை நேரத்தில் அடிபட்ட சத்யராஜ் உடம்பில் கட்டுடன் போய், உருட்டைக் கட்டையால் விளாசித் தள்ளுவது விசில் பறக்கச் செய்கிறது. அதேபோல் — க்ளைமாக்ஸில் படம் இன்னும் கொஞ்சம் இருக்கப் போகிறது என்று ஏக்கத்தோடு எதிர்பார்க்கும் போது, ஊசி குத்திய மாதிரியான வலியுடன் நின்றுவிடுகிறது. இரண்டு காட்சிகளும் டைரக்டரின் புகழ் பாடும் காட்சிகள்.

படிக்காத பாமரர்களைப் பத்திரிகைகள் மூலம் அவ்வளவாகத் தட்டி எழுப்ப முடியாது. பாலைவன ரோஜாக்கள் தட்டி எழுப்ப வேண்டும்.

— ஜெயமன்மதன்



MCA/NTC/114 Tam

என்னைக் காக்க வந்தாயா?

ஆர். சூடாமணி

திருமண வரவேற்பு.

பிரகாசக் குழல் விளக்குகளின் கீழே அந்தப் பெரிய ஹாலில் இரவு பகலாகியிருந்தது. பட்டும் பளபளப்புமாக ஹால் உயிர் பெற்று உயிர்த்துக் கொண்டிருந்தது. நாற்புறமும், பீரியெழும்கோலாகலக் குரல்களால் எதிரொலித்தது. இந்த ஆண்கள் குவாலியர் ஸூட்டிங் விளம்பர மாடல்களாக இருக்கலாம். இந்தப் பெண்கள் ராதா ஸில்க் ஹவுஸூம், தங்க மாளிகையும் சேர்ந்து கண்ட கனவுகளாய் இருக்கலாம். அலங்கார வகையில் இவர்களுக்கும் மணமக்களுக்குமிடை அதிக வேற்றுமை இல்லை. கழுத்து மாலைகள் மட்டும்தான் திருமண ஜோடியை இனம் பிரித்துக் காட்டும் அடையாளம். வர்ண மயமான அந்த உற்சாக விழாவுக்கு நறுமணமும், கூடியிருந்தது. மலர்கள், சந்தனம், பன்னீர், வாசனைத் தைலம், வகை வகையான பர்ஃப்யூம், இன்னும் புத்தாடை மணம், புது நோட்டு மணம்.....

வர்ணம், மணம் இவற்றோடு ஒலிக்கும் தான் பஞ்சமா? கலகலப்பான பேச்சுகள், கலீரென்ற சிரிப்புகள், குழந்தையர் குறுக்கும் நெடுக்குமாய் ஓடி மகிழும் இரைச்சல்கள், மனிதர்கள் நடப்பதும் உட்காருவதும், எழுந்திருப்பதுமாய் இடைவிடாத ஆரவாரங்கள்.

'இந்தச்சந்தைக்கூட்டத்தில்எனக்கென்ன வேலை?' என்ற கோபம் சுள்ளென்று எழ, மேடை மீதிருந்த ரமேஷ் முகம் சிவந்தான். இத்தனை ஒலிகளிடை அவனுடைய ஒலிக்கு இடமில்லையா? இங்கு ஒலி என்றால் இந்த உரத்த பேச்சுக்களும் கெக்கெக்கே சிரிப்புகளும்தானா? இங்கு சங்கீதம் என்பது ஒலியோடு சேர்த்தியில்லையா?

''ஹலோ, மிஸ்டர் சிதம்பரம்!''

''பானுசாமியா! ஹலோ, எப்படியிருக்கீங்க?

''என்னய்யா, எங்க வீட்டுக்கு வழி மறந்து போயிடிச்சா? இப்படி ஏதாவது ஒரு கல்யாணத்தில நாம மீட் பண்ணுத்தானா? ஆனாலும் மோசம் நீங்க!''

''நோ, நோ, தப்பா நினைக்காதீங்க. அடிக்கடி உங்க ஞாபகம்தான். ஆனா கம்பெனியில இப்ப மூச்சு முட்ற வேலை....''

ஹாலின் இரு கோடிகளிலிருந்து ஒன்றையொன்று பார்த்துக் கூவிய குரல்கள் மற்ற எல்லா ஒலிகளையும் அமுக்கி முழுகச் செய்தன. நெருங்கி வந்த நண்பர்கள் அறை நடுவில் கைகுலுக்கிக் கொண்டார்கள். ''வீட்ல எல்லாரும் சௌக்யமா? பையன் என்ன செய்யறான்?''

''காலேஜை ஒரு பொழுதுபோக்காய் வச்சுக்கிட்டிருக்கான். வேறென்ன சொல்ல! அதை விடுங்க. மிஸ்டர் கதிர்வேல் ரிடையர் ஆயிட்டாரா? அடுத்த ஜி.எம். நீங்கதானே?''

எல்லாப் பக்கங்களிலிருந்தும் குறுக்கும் நெடுக்குமாய் வீசி மோதும் பேச்சு அலைகள். நடுவில் சிக்கித் தவிக்கும் சிறு படகுதானா அவன் இசை?

இழைத்து இழைத்து நெக்குருகி நாத மயமாகி அகண்ட ஞானத்திலிருந்து ஸப்த ஸ்வரங்களால் அள்ளி அள்ளிக் குரல் வளத்தில் வைத்துக் கொடுக்கும் அழகுகளெல்லாம் இங்கு வீண்தானா? கருட்டியில் துள்ளிப் பறந்து காணடாவாய்க் கசிந்துருகுவதெல்லாம் இங்கே யாருக்காக? பாட்டை ரசிக்க இக்கூட்டத்தில் ஒருவருமே இல்லையா? 'இதைக் கேளுங்கள், ஒரு குழந்தை வளர்ந்து ஆளாகும் அதிசயத்தைப் பாருங்கள்' என்பது போல் இருமடங்கு தீவிரத்துடன் ஆலாபனை, கீர்த்தனை, நிரவல், ஸ்வர பிரஸ்தாரங்கள் என்று இசை வடிவைத் தொட்டுத் தொட்டுச் செதுக்கி உருவாக்கி வளர்த்துக் கொண்டே போனான்.

''அடடா, பிரமாதமாயிருக்கே!''

அருகில் குரல் கேட்டு ஆவலாய்த் திரும்பிப்



பார்க்கையில் அங்கு நின்றிருந்த பெண்மணி இன்னொருத்தியின் புடைவையைத் தொட்டுப் பார்த்துக் கொண்டிருந்தாள். ''அமெரிக்கன் ஜார்ஜெட்தானே?''

'என்னை ஏன் இந்தக் கௌரவர் சபையில் துகிலுரிக்கிறாய்?' என்று ராக தேவதை அவனிடம் முறையிட்டது.

விஸ்தாரமாய் விரித்துக் கொண்டிருந்த கற்பனை ஸ்வரங்களைப் பட்டென்று பாதியில் நிறுத்தி சரணத்தைச் சங்கதிகளின்றி ஒரே முறை பாடிப் பல்லவிக்குத் திரும்பி முதல் வார்த்தையையே கீழ் ஷட்ஜத்தில் இறக்கி நிறுத்திக் கீர்த்தனையை முடித்தான் ரமேஷ்.

பக்கவாத்தியக்காரர்கள் பாட்டின் திடீர் முடிவால் அவனை ஆச்சரியத்துடன் பார்த்தார்கள். வேதனையும் கோபமுமான அவன் முகத்தைக் கண்டதும் எதுவும் பேசாதிருந்து விட்டார்கள். அந்த மனநிலை அவர்களும் அறிந்ததுதான். பாடகரைத் கேட்காதவர்கள் வயலினையும், மிருதங்கத்தையுமா கேட்கப் போகிறார்கள்? ஹாலில் பேச்சுக்களிடையே சில சமயம் சிறு மௌனம் நிகழும்போது மேடை மீதிருந்து வந்து கொண்டிருக்கும் வித்வான்களின் இசை ஒரு பின்னணியாக ஒலிக்கும். கல்யாண வைபவத்தில் மாவிலைத் தோரணம்போல் அதுவும் ஓர் அலங்காரம் மட்டுமே. வேறு கவனத்துடன் பாட்டுக்குத் தாளம் போடுபவர்கள் அல்லது தலையை ஆட்டுபவர்கள் பிறகு. ''அப்புறம் ஸார், இன்னிக்கு ஷேர் மார்க்கெட் நிலவரத்திலே...'' என்று பேச்சைத் தொடரும்போது மேடை மீது ஆனந்த பைரவிகூட அழுது விடுவாள்.

ரமேஷ் தன் கைக்கடியாரத்தைப் பார்த்தான். மணி ஆறரை. ஏழரைக்குத்தான் டின்னர். அதாவது, அடுத்த நிகழ்ச்சி. இன்னும் ஒரு மணி நேரம் அவன் பாடியாக வேண்டும். யாரோ வித்வான்களுக்குக் காப்பி கொண்டு வந்தார்கள். இது இரண்டாம் டோஸ். காப்பி குடிக்கும் நேரத்துக்காவது பாட வேண்டாம்என்றநிம்மதியோடு ரமேஷ் மெதுவாகக் குடித்தான்.

கல்யாணக் கச்சேரி செய்வதே அவனுக்குப் பிடிக்காத விஷயம். ஆனால் இன்று குருவின் வார்த்தைக்காக அவன் ஒப்புக்கொள்ள வேண்டியிருந்தது. நீலகண்ட சர்மாவைத்தான் இந்த வீட்டவர்கள் ஏற்பாடு செய்ய முயன்றிருந்தார்கள். ''நான்-அந்தத் தேதியில் இந்தியாவிலேயே இருக்க



மாட்டேன். சிங்கப்பூர், மலேசியான்னு கச்சேரி டூர் போயிருப்பேன். என் சிஷ்யன் அபாரமாய்ப் பாடுவான். அவனை ஏற்பாடு பண்றேன்'' என்று அவர் சொல்லிவிட்டார்.

குருவை நினைத்தபோது ரமேஷுக்கு மிகவும் வருத்தமாயிருந்தது. அவனுக்கு முப்பத்து நான்கு வயது. பாங்கில் உத்தியோகம். சங்கீதம் அவனை மிகவும் கவர்ந்த துறை. வெறும் பொழுதுபோக்குக்கு மேலாக, ஆத்மானுபவமாய் இருந்தது. நல்லகுரலும் திறமையும் ஈடுபாடும் இருந்ததால் முன்னணி கர்நாடக இசை விற்பன்னர்களில் ஒருவரான சங்கீத கலாநிதி எஸ். நீலகண்ட சர்மா அவனை விருப்பத்துடன் சிஷ்யனாக ஏற்றார். முழு மூச்சுடன் அவன் திறமையைப் பரிமளிக்கச் செய்யும் நல்லாசிரியராகவே இருந்து வந்தார். அவர் மகன் சுப்பிரமணியனுக்கும் சங்கீதத்தில் அக்கறை பிறக்கும் வரை.

மகனையும் சிஷ்யனைக் கொண்டவர் அதன்பின் ஒரு குருவாகவே நடந்து கொள்ளவில்லை. ஒரு தந்தையாகவே நடந்து கொண்டார். சுப்பிரமணியனுக்கு ஆர்வம் இருந்த அளவு திறமை இல்லை. எனினும் சர்மா அவனை முன்னுக்குக், கொண்டு வருவது ஒன்றிலேயே நாட்டமாயிருந்தார். ரமேஷிடம் அவர் அக்கறை குறைந்தது. அவனது உயர்ந்த திறமையைத் தம் மகனுக்குப் போட்டியாகவே நினைக்கிறாரோ என்று ஐயுறும் வகையில், ''ஏண்டா ரமேஷ், இப்படி சங்கீதம்னும் சாதகம்னும் கட்டிண்டு அழறே? பெரிய பாங்க் ஆபீஸராய்க் கைநிறையச் சம்பளம் வாங்கறே? அதுக்கு மேல் என்ன வேணும்? எப்பவானும் ஆசைக்கு வீட்டில் சிநேகிதாளுக்கெதிரே ரெண்டு கிருதிகளை ஒரு ஹாபி மாதிரி பாடிண்டு அக்கடான்னு இரேன்'' என்று பேசினார். ''ரமேஷ் என்கிற பேருக்கும் கர்நாடக சங்கீதத்துக்கும் பொருத்தமாகவே இல்லையே! ரமேஷ் பாகவதர்னு போட்டுப்பியோ?'' ஏன்று கிண்டல் செய்தார்.

''ஒரு ஹிக்கின்ஸ் பாகவதரே நம்மிடை இருந்தார் என்கிறபோது ரமேஷ் பாகவதர்ல என்ன ஸார் தப்பு?'' என்று அவனும் சிரித்துக் கொண்டே பதில் சொன்னான். விடாப்பிடியாய் அவரிடம் பாடம் கேட்டு வந்தான். ''கற்றுத் தர மாட்டேன்'' என்று அவரால் வெளிப்படையாய்ச் சொல்ல முடியவில்லை. அவருடைய அசிரத்தையை மீறிக் கொண்டு அவன் மேடைக் கச்சேரிகள் செய்வதையோ விஷயம் தெரிந்த ஒரு சில சங்கீத விமர்சகர்களிடையே நல்ல பெயர் பெற்று வருவதையோ அவரால் தடுக்க முடியவில்லை. ஏதாவது சாக்கில் அவனைக் கடிந்து கொள்வது அவருக்குப் பழக்கமாகியது. வலிமையான காரணத்தை வேறு அவனே ஒருமுறை தன்னையறியாமல் தந்துவிட்டான்.

சர்மா தம்மை முத்துஸ்வாமி தீட்சிதரின் சிஷ்ய பரம்பரையில் வந்தவராகச் சொல்லிக் கொள்வதுண்டு. அது உண்மையாகவும் இருக்கலாம். தீட்சிதரிடம் அவருக்கு ஆழ்ந்த பக்தி இருந்தது. ஒருநாள் அவருடன் சங்கீத சர்ச்சை செய்துகொண்டிருந்தபோது ரமேஷ், ''தீட்சிதர் கிருதிகள் நல்ல ராக ஞானத்தைக் காட்டுகின்றன. அவர் ஒரு பண்டிதர். தியாகய்யர் கீர்த்தனைகளோ ஒரு தனி மனிதனின் பக்தி மயமான இதயப் பேச்சுகளாக இருக்கின்றன. ராமனோடு நேருக்கு நேர் பேசி உணர்ச்சிமயமாய் உருகி விடுகிறார். தீட்சிதர் படைப்புகள் நேர்த்தியான, விரிவான கட்டட அமைப்புகளென்றால் தியாகய்யர் படைப்புகள் பளீர் பளீரென்று மின்னி நெஞ்சை சர்க்கும் உணர்ச்சிப் பொறிகள்' என்ற ரீதியில் பேசிவிட்டான்.

நீலகண்ட சர்மா அவனுடைய இக்கருத்தை இரு இசைக் கர்த்தாக்களை ஒப்பிட்டு ஓர் இளைஞன் ஏதோ தன் அறிவுக்கு எட்டிய விதமாய் ஆய்வு செய்திருப்பதாக எண்ணிச் சாதாரணமாய் எடுத்துக் கொள்ளாமல் அவன் பேச்சை தீட்சிதரின் பக்திக்கு இழைத்த அபசாரமாகவும் அந்த வாரிசு வரிசையில் வந்த தமக்குத் தனிப்பட்ட முறையில் செய்த அவமானமாகவும் கருதிவிட்டார். அவனிடம் பின்னும் மனவேற்றுமை உணரலானார். அதனாலேயே, மூன்று ஆண்டுகளாகச் சென்னையில் சங்கீத விழாவின் போது வித்வத் சபையில் பிற்பகல் கச்சேரி செய்து வந்தவன் இவ்வருடம் எப்படியாவது தனக்கு மாலை அல்லது இரவு நேரக் கச்சேரிக்கு வாய்ப்புப் பெற்றுத் தரும்படி அவரிடம் கேட்டபோது நாசூக்காய் மறுத்துவிட்டார். சுய தகுதிகளோடு கூட அவர் சிபாரிசும் சேர்ந்தால் நிச்சயம் அவனுக்குக் கிடைக்கும். ஆனால் அவர் ரகசியமாய்த் தம் மகனுக்கு அந்த வாய்ப்புக் கிடைக்க முயன்று கொண்டிருந்தார். ''உனக்கென்னடா ரமேஷ் அவசரம் இப்போ, ஈவினிங் கச்சேரி செய்ய? நீ சின்னவன்தானே! நிறைய காலம் இருக்கு. எல்லாம் அடுத்த வருஷம் பார்த்துக்கலாம் போ'' என்று அவனுக்குப் பதிலளித்துவிட்டார். சுப்ரமணியன் அவனைவிட ஒரு வயது சின்னவன்.

இன்று இங்கே வருவதற்கும் அவர் தமக்குப் பதிலாய் மகனை அனுப்பவில்லை. கல்யாணக் கச்சேரியை யாரும் சிரத்தையாய் உட்கார்ந்து கேட்பதில்லை என்பதால் இவனைத்தான் அனுப்பியிருக்கிறார். 'அபாரமாய்ப் பாடுவான்' என்று அதற்கு ஒரு சர்க்கரைப் பூச்சு.

சர்க்கரையில்லாத காப்பியைப் பருகியது போல் ரமேஷுக்கு வாய் கசந்தது. காலி டம்ளரைத் திருப்பிக் கொடுத்தான். தொண்டையைச் செருமிக் கொண்டான். கச்சேரியைத் தொடர்ந்தான். ராகங்களோடு கொஞ்சினான், குழைந்தான், கம்பீரமானான், வீறு கொண்டான், விளையாடினான், உருகினான், பரவசமானான்.

திடீரென்று ஓர் அரசியல் பிரமுகர் பத்து நிமிடங்களுக்கு மின்னல் விருந்தினராய் வந்து போனார். அந்தப் பத்து நிமிடங்கள் மணமக்கள் உட்பட அவரைச் சுற்றியே கூட்டம், சலசலப்பு. மூலைமேடையில் சங்கீதம் தாயில்லாக் குழந்தையாய்க் கிடந்தது.



"என் பெண் சங்கீதம் கற்றுக்கொள்ள இசைக் கல்லூரிக்குப் போகிறாள்."

"உங்களிடம் ஏது பணம்?"

"நான் அனுப்பவில்லை. அக்கம் பக்கத்து வீட்டார்களெல்லாம் சேர்ந்து தான் அனுப்பி வைக்கிறார்கள்!"

— அரகண்டநல்லூர் சாதிக்பாஷா.

ரமேஷ் ஒருகணம் பாடுவதை நிறுத்தி விட்டுச் சுற்றிலும் பார்த்தான். கற்பனையில் தம்பூரை உடைத்து சபையினர் தலையில் விட்டெறிந்துவிட்டு வெளியேறினான்.

பாட்டு நின்றிருந்ததைக் கூடப் பெரும் பாலோர் கவனிக்கவில்லை. கவனித்தவர் களில் யாரோ, "பாடகர் நிறுத்திவிட்டாரே! கச்சேரி முடிஞ்சுடுத்தா?" என்று கேட்டுக் கொண்டிருந்தது காதில் விழுந்தது.

ஒருபாட்டு பாதியில் நிற்பதற்கும் மங்களம் பாடுவதற்கும் வித்தியாசம் தெரியாத ஞான சூன்யங்களிடை எனக்கென்ன வேலை? ராகங்களில் முக்குளித்து முக்குளித்து முத்துக்களை எடுத்து வருவதெல்லாம் இங்கே யாருக்காக? ஓ கல்யாணியே, ஸஹானாவே, சாருகேசியே, என்னை மன்னியுங்கள்.

அறையின் சப்தக் குழப்பத்தினுள் மூழ்கி மூச்சு முட்டுவதுபோல் இருந்தது. மனச் சோர்வு உடலையும் களைப்புறச் செய்தது. வேதனையுடன் பாட்டைத் தொடர்ந்தான். நல்லவேளை, இந்தச் சித்திரவதை இனி அதிக நேரமில்லை. இன்னும் ஓர் உருப்படி பாடி விட்டால் போதும்.....

பொங்கிய ஆறுவடிவதுபோல்கூட்டம் குறைந்துகொண்டிருந்தது. இப்போதுமிச்சம் சில பேர்தான். இரண்டு கனவான்கள் ஒரு மூலையில் சோபாவில் அமர்ந்து ஏதோ லாப நஷ்டக்கணக்குப் பேசிக் கொண்டிருந்தார் கள். தொழிலதிபர்களாயிருக்கலாம். மண மக்களின் மாலைகளிலிருந்துரோஜா இதழ்கள் உதிர்ந்து கொண்டிருந்தன. நாலைந்து பேர் கும்பலாயிருந்த ஓரிடத்தில் ஒருவர் நாற்காலி யில் சாய்ந்தபடி ஏறக்குறையத் தூங்கியிருந் தார். ரமேஷின் உதடுகள் சுழித்தன. 'அடடா, நான் நீலாம்பரி பாடவில்லையே! பாடியிருந் தால் என் ராகபாவத்தின் வெற்றியை எண்ணித் திருப்தியடைந்திருக்கலாம்' என்று கசப்புடன் நினைத்துக்கொண்டான்.

இன்னொரு புறத்தில் ஓர் ஆண்—பெண் ஜோடி வீட்டுக்காரர்களிடம் விடை பெற்றுக் கொண்டிருந்தார்கள். பிறகு அந்த ஆண் தன் பின்னே நாற்காலியில் உட்கார்ந்திருந்த பெரியவரைத் திரும்பிப் பார்த்து: "அப்பா, வாங்க போகலாம்" என்று அழைத்தான்.

"கொஞ்சம் இரு" என்றார் பெரியவர்.

"நேரமாகுதுப்பா, எழுந்திருங்க."

"எனக்குச் சாப்பாடு வேணும். நீயும் புஷ்பாவும் போய்ச் சாப்பிட்டுட்டு வாங்க. அதுவரைக்கும் இங்கே உட்கார்ந்திருக் கேன்."

"நாங்க கூடச் சாப்பிடப் போறதில்லே மாமா. இன்னொரு ரிஸப்ஷனுக்குப் போக ணும். அதுக்கு இப்பவே லேட்டாயிடிச்சு, வாங்க" என்றாள் அப்பெண்.

"அப்போ, நீங்க ரெண்டு பேரும் போங்க, நான் வரல்லே."

"என்ன பிடிவாதம்ப்பா! ஏன் வரமாட் டேங்கறீங்க?" என்று மகன் குரலை உயர்த்தி னான்.

"இந்த மனுஷன் என்னமாய்ப் பாட றாண்டா! சின்ன வயசுதான், ஆனா என்ன ஞானம், என்ன கற்பனை! நான் முழுக் கச் சேரியும் கேட்டுட்டுத்தான் வருவேன். நீங்க போங்க."

"நாங்க அந்த ரிஸப்ஷனுக்குப் போயிட்டு அப்படியே வீட்டுக்குப் போயிடுவோம்ப்பா. மறுபடியும் இத்தனை தூரம் வர முடியாது. நீங்க இப்ப வந்தா எல்லாரும் ஒண்ணாய்க் காரில் போயிடலாம்."


"எனக்குக் கார் வேணாம். பஸ்ல வந்துக் கறேன்."

"இங்கேயிருந்து நம்ம ஏரியாவுக்கு ஒரு மணி நேரத்துக்கு ஒரு பஸ்தான். எத்தனை நேரம் காத்துக்கிட்டிருப்பீங்க?"

"அப்ப நடந்து வரேன்."

"எப்படியானும் போங்க. சொல்ற பேச்சைக் கேட்டாத்தானே!" அந்த ஜோடி அகன்றது.

ரமேஷ் அந்தப் பெரியவரையே பார்த்துக் கொண்டிருந்தான். அவரும் அவனைப் பார்த் தார். அவனைப் பரிச்சயமில்லாவிட்டாலும் அவன் இசை தம்மிருவரையும் மிக நெருக்க மாக இணைத்திருப்பது போன்ற முகபாவத் துடன் லேசாய்ப் புன்னகைபூத்தார். அவனும் அந்த நெருக்கத்தை உணர்ந்தவனாக அவரைப் பார்த்துக் கொண்டு, உட்கார்ந் திருந்தான். 'உன்னை எங்கெங்கோ தேடி னேனே! நீ இங்கேயா இருக்கிறாய்?' என்னும் பார்வை. களைப்பு மறைந்தது. விறுவிறு வென்று உடம்பில் ஒரு புது உற்சாகம் பாய்ந் தது. அவன் கண்களுக்கு அவர் ஒருவரே தெரிந்தார். அந்த ஒருவரையே நோக்கிய வாறு, அந்த ஒருவருக்காகவே, அவன் மோகனமாய் மாறி, 'நன்னு பாலிம்ப நடசி வச்சிதிவோ நா ப்ராணநாதா!' என்று கடைசிப் பாட்டைப் பாட ஆரம்பித்தான்.



சிங்களா-தமிழ் போராட்டம்
சமரசம்
சண்டை போட்டது போதும்!.. டிபன் வரட்டும்!
மத்திய, மகாராஷ்டிர, கர்நாடக அரசுகள்
அந்தக் கிழம் பேச்சைக் கேட்காதே! தாமதம் பண்ணாதே! இந்தக் கமண்டலத்தில் 145 கோடி தள்ளு!.. அப்புறம் பாரு.. தண்ணி கொட்டோ கொட்டுன்னு கொட்டுதா இல்லையா பாரு!.. ஹ்ரீம்! ஹாரீம்!!.. ரீம்.. ரீம்!
ஐயோ, இவ்வளோ பெரிய காரியத்தைக் கொடுத்தீரே!.. ஐயோ.. பத்திக்கிட்டு எரியுதே! பத்துப் பதினைஞ்சு, பதினெட்டு பஸ் கொளுத்தினதும் சமாளிப்போம்!.. மேலே யாராவது இப்படி செஞ்சா சுட்டுத் தள்ளுவோம்!

கலாக்ஷேத்ராவில்

நடன மேதை ருக்மிணி தேவி அருண்டேல் 1936 இல் கலாக்ஷேத்ராவை சென்னை, அடையாறில் ஆரம்பித்தார். மளமளவென்று அதன் வளர்ச்சி அடையாறு ஆலமரம் போல ஆகிவிட்டது! 1962 இல் அடையாறு கடற்கரை ஓரமாகக் கலாக்ஷேத்ரா பிரமாதமாக விரிவடைந்துவிட்டது. 'கலாக்ஷேத்ரா பப்ளிக் சேரிடபிள் டிரஸ்ட்' உருவானது.

1985 வாக்கில் ருக்மிணி தேவிக்கு உடல் நிலை குன்ற ஆரம்பித்தது. இந்தச் சமயத்தில் தம்முடைய மாபெரும் சாதனையான 'கலாக்ஷேத்ரா' தமக்குப் பிறகும் தொடர்ந்து சரியாக நிர்வகிக்கப்பட வேண்டும் என்று நினைத்தார் போலும். எனவே தாம் கண் மூடுவதற்கு முன்னால் டிரஸ்டின் நிர்வாக நடைமுறைகளை வழிப்படுத்தி, இன்னின்னாரை டிரஸ்டிகளாக நியமித்துவிட வேண்டும் என்று முடிவு செய்தார்.

அதன்படி ருக்மிணி தேவி அருண்டேல், எஸ். நாராயணசாமி, ஆர். வி. ரமணி ஆகியோரை வாதிகளாகவும், கலாக்ஷேத்ரா டிரஸ்ட், பெசன்ட் சென்டினரி டிரஸ்ட், சங்கப் பதிவாளர்; (சென்னை மாவட்டப் பதிவாளர்) ஆகியோரைப் பிரதிவாதிகளாகவும் கொண்ட ஒரு மனுவை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்.


அதில் தம்முடைய அபிலாஷைகளை விரிவாகத் தெரிவித்துள்ளார், ருக்மிணி தேவி. அடையாறு கடற்கரையை ஒட்டி நிறுவப்பட்டுள்ள கலை அரங்கம், நடன வகுப்புக்கள், ஆராய்ச்சி வகுப்புக்கள் போன்றவை சிறப்பாக நிர்வகிக்கப்பட வேண்டுமென்றும், அதற்குச் சிலரைத் தாம் டிரஸ்டிகளாக நியமிப்பதாகவும் கூறியுள்ளார். அதோடு, 1962 க்குப் பிறகு, கலாக்ஷேத்ரா 'மளமள'வென்று விரிவடைய 'ஆரம்பித்துவிட்டதால் அதனுடைய 'அகாடமிக்' வேலைகளுக்காக ஒரு சங்கத்தைத் தாம் ஆரம்பித்துள்ளதாகவும் மிகச் சாதாரணமாகக் குறிப்பிட்டுச் சென்றுவிட்டார். தமிழ்நாடு சங்கப் பதிவுச் சட்டம் 1975 இன் கீழ் சங்கம் நடந்து வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார். இந்த மேலெழுந்த வாரியான வாசகங்களினால் தகராறு வளர்ந்தது. இந்தச் சங்கமா அல்லது டிரஸ்டா, எதற்கு அதிக அதிகாரம்?

ருக்மிணி அருண்டேல் டிரஸ்டிகளாக ஒன்பது பேரை நியமித்திருக்கிறார்: ருக்மிணி தேவி, ஆர். வெங்கட்ராமன், எஸ். நாராயணசாமி, சி. எஸ். வித்யாசங்கர், ஆர். வி. ரமணி, ஏ. ஒய். சுந்தரம், சங்கரமேனன், கே. வீராசாமி, எம். வி. அருணாசலம் ஆகியோர்தான்.

ருக்மிணி தேவி தாக்கல் செய்த மனுவை விசாரித்த உயர்நீதிமன்ற நீதிபதி காதர், டிரஸ்டிகளாக மேற்கூறிய ஒன்பது பேரையும் ஏற்றுக் கொண்டு, தொடர்ந்து கலாக்ஷேத்ரா, டிரஸ்டுக்கு உண்டான சட்டதிட்டங்களின்படி நடக்கலாம் என்று 'ஓகே' செய்துவிட்டார்.

இப்போது, கலாக்ஷேத்ரா சங்கம் (Society) எதிர்ப்புக் குரல் கொடுத்தது. ருக்மிணி அருண்டேலுக்கு முழுமையாக

பிளைவுட் வீணை



புதிய பாணி வீணை, தம்பூராக்கள் உருவாவது காலத்தின் கட்டாயம். முதலாவது, நல்ல பலா மரங்கள் கிடைப்பதில்லை. கிடைத்தாலும் விலை எக்கச்சக்கமாகிறது. மேலும் விமானத்தில் பறக்கும் கலைஞர்களுக்கு 'மினி சைஸ்' இசைக் கருவிகள்தான் கொண்டு போக வசதி. எனவே, பிளைவுட்டில் ஒரு வீணை தயாரித்திருக்கிறார் மகாலிங்கம் (வயது 59). புது பிளைவுட் வீணை விலை ரூபாய் 900 தான். எடை ஐந்து கிலோவுக்கும் குறைவு. நீளமும் கொஞ்சம் குறைச்சல்தான். குடமே இல்லை. வேண்டாத போது மடக்கி விடக் கூடிய உலோக ஸ்டாண்டு இருக்கிறது.

சிறந்த கலைஞருக்கான தமிழக அரசின் விருது பெற்ற மகாலிங்கம், "நாதத்தில் கடுகளவும் பிளைவுட் வீணை குறைவாய் இருக்காது" என்று உறுதியாகச் சொல்கிறார். அதிலிருந்து கலைஞர் எழுப்பும் இசை தரமாக இல்லையெனில் அதற்கு அவர் பொறுப்பல்ல!

தகவல்: மௌஷ்மி

படம்: சோமசுந்தரம்

இன்றைய கச்சேரி பாணி எப்படி வந்தது?

காலாண்டுக்கு ஒருமுறை கலாக்ஷேத்ரா என்ற தலைப்பிலேயே கலாக்ஷேத்ரா ஒரு சஞ்சிகை வெளியிட்டு வருகிறது. சமீபத்தில் வெளியான இந்த சஞ்சிகையில் தென்னிந்தியாவின் கச்சேரி பத்ததி பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் பல இடம்

என்ன கலாட்டா?

உடல், மன ஆரோக்கியம் இல்லாத நிலையில் இந்த மனு போடப்பட்டது என்றும், 'கலாக்ஷேத்ரா சாரிடபிள் டிரஸ்ட்தான் கலாக்ஷேத்ராவை நடத்த வேண்டும்' என்று கூறியது சரியல்ல என்றும் வாதிட்டது. கலாக்ஷேத்ரா மிகச் சிறப்பாக விரிவடைந்த நிலையில் அதனைச் சரியாக நிர்வகிக்கவே இந்தச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது என்றும் வாதிட்டார்கள். எனவே டிரஸ்டிகள் கலாக்ஷேத்ராவை நிர்வகிக்கக் கூடாது, சங்கத்திற்கே இந்த அதிகாரம் உண்டு என்றார்கள்.

நீதிபதிகள் சத்யதேவ், மஹேஸ்வரன் அடங்கிய 'உயர்நீதிமன்ற பெஞ்ச்' இந்த வழக்கை விசாரித்து சங்கத்தின் வாதத்தை ஏற்றுக் கொண்டது. அவர்களின் பக்கம் வழக்கு வெற்றி பெற்றது.

உயர்நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பு சரியில்லையென்று உச்சநீதிமன்றத்திற்கு 'கலாக்ஷேத்ரா சாரிடபிள் டிரஸ்ட்' சென்றது. உயர்நீதிமன்றத் தீர்ப்பிற்குத் தடையுத்தரவும் வாங்கிவிட்டது. இதுதான் தற்போதைய நிலைமை!

சங்கம் என்பது 'தமிழ்நாடு சங்கப்'பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு அந்தந்த மாவட்டப் பதிவாளரின் கீழ் வரும். ஒவ்வொரு வருடமும் அதனுடைய நடவடிக்கைகளைப் பதிவாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும். பொதுக்குழுக் கூட்டம், நிர்வாகக்குழுக் கூட்டம், செயற்குழு உறுப்பினர்களிடையே தேர்தல், வரவு செலவு கணக்குகள் போன்ற அனைத்து விவரங்களும், பதிவாளருக்கு அனுப்பப்பட்டு, தணிக்கை செய்யப்படும். இப்படியாகப்பதிவுசெய்யப்படும்சங்கங்கள் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் வருகின்றன.

ஆனால் 'பப்ளிக் சேரிடபிள் டிரஸ்ட்' அப்படி அல்ல. இது நீதிமன்ற உத்தரவிற்குக் கட்டுப்பட்டது. டிரஸ்டின் நிறுவனர் சில டிரஸ்டிகளை நியமித்து, அதன் வழிமுறைகளை உருவாக்கி, நீதிமன்றத்திடம் சமர்ப்பிக்க வேண்டும். அதை நீதிமன்றம், எந்தவித ஆட்சேபணையும் இல்லாத பட்சத்தில் ஏற்றுக் கொண்டு விடும். டிரஸ்டிகளிடையிலோ, மற்ற நடவடிக்கைகளிலேயோ எந்தத் தகராறும் வராத பட்சத்தில் மீண்டும் நீதிமன்றத்திற்குப் போக வேண்டிய அவசியமில்லை. டிரஸ்டைத் தொடர்ந்து நடத்திக் கொண்டே போகலாம். ஏதேனும் சிக்கல்கள் ஏற்படும் பட்சத்தில் நீதிமன்றத்தில் மனு செய்து, நீதிபதியின் உத்தரவிற்குக் கட்டுப்பட வேண்டும்.

உச்சநீதிமன்றத்தில் வழக்கு இருப்பதால் அதனை நாம் விமரிசனம் செய்வது முறையல்ல. நம்கவலையெல்லாம், கலாக்ஷேத்ராவை சாரிடபிள் டிரஸ்ட் நிர்வகிப்பதா, சங்கம் நிர்வகிப்பதா என்ற போட்டா போட்டியில் ருக்மிணி தேவி என்ற நடனமேதை நிர்மாணித்த கலைக்கோயில் எந்த விதத்திலும் பாதிக்கப்படக் கூடாதே என்பதுதான்.

தொகுப்பு: **டி. ஆர். ரமேஷ்**

பெற்றுள்ளன. பிரபல வித்வான்களும் ஆராய்ச்சியாளர்களும் இக்கட்டுரைகளை எழுதியுள்ளனர். மிகுந்த கவனத்தோடு, பழங்காலத்துப் புகைப்படங்களைத் தேர்ந்தெடுத்துப் பிரசுரித்துள்ளதைப் பாராட்ட வேண்டும். இசையின் வரலாற்றில் ஆர்வம் உள்ளவர்களுக்கு இந்த சஞ்சிகை ஓர் அரிய பொக்கிஷம்.

தனிப்பிரதி விலை ரூ. 20/— கலாக்ஷேத்ரா, சென்னை — 41.

கிழக்கையும் மேற்கையும் இணைக்கும் கலைஞர்

"அச்சமில்லை, அச்சமில்லை" படத்துக்கு இசை அமைத்தாரே வி.எஸ். நரசிம்மன் அவருக்கு மேற்கத்திய சாஸ்திரீய இசையில் மிகுந்த ஈடுபாடு. வயலினை அந்தப் பாணியில் அருமையாகக் கையாள்கிறார். தாமே புத்தகங்களைப் பார்த்துக் கற்றுக் கொண்டு முன்னேறி, லண்டன், டிரினிடி காலேஜ் ஆஃப் மியூஸிக் நடத்தும் இசைப் பரீட்சைகளில் தேறினார். சென்னையில் இவர் தலைமையில் ஒரு மேற்கத்திய சாஸ்திரீய இசைக் குழு இயங்கி வருகிறது.



சமீபத்தில் டி.வி.யில் கூட இவர்கள் நிகழ்ச்சி ஒளிபரப்பாயிற்று.

அதிசயம் என்னவென்றால் வி.எஸ். நரசிம்மன் சிறந்த கோட்டுவாத்திய வித்வான்! இவர் தாத்தாவின் பெயரே 'பிடில்' ரங்கநாதன்! அப்பா சீனிவாச அய்யங்கார், வயலின், வீணை, கோட்டுவாத்தியம் என்று எல்லா வாத்தியங்களிலும் வல்லவர்!

"கிழக்கு கிழக்குதான்; மேற்கு மேற்குதான்! இரண்டும் இணை சேராது" என்ற புகழ் பெற்ற வாசகம் நரசிம்மனிடம் தோற்றுப் போய்விட்டது! மௌலி

ஆயிரம் கண்ணுடையாள்

ஓம் நமசிவாய

சௌ பாக்கியவதி கமலாம்பாவிற்கு அனேக ஆசீர்வாதங்களுடன் நரசிம்மாச்சாரி எழுதிக் கொண்டது. உபயக்ஷேமம்.

நான் சமீபத்தில் இங்கே ஆயிரம் கண்ணுடையாள் படத்தைத் தரிசிக்கும் பாக்கியத்தைப் பெற்றேன். ஆனாலும் என்ன, சக்தியின் பெருமையை விளக்கும் வகையில் பல படங்கள் முன்னரே வந்துவிட்டதால் இப் படம் அந்த வரிசையில் ஒன்றாகிவிட்டது.

அஷ்டமாசித்திகளை வரமாகப் பெற்ற அரக்கன் தேவியையே கொடுக்கும்படி சிவனிடமே மேலும் வரமாகக் கேட்பது பார்த்து, சிவனார் அவன் இஷ்டப்படி வரமளிக்க, சக்தி அரக்கனைத் தாண்டவமாடிக் கொல்லுகிறாள் என்ற புராணக் கதையை பூசாரி சொல்வது போல் காட்டினாலும், அதற்கும் அப்புறம் காட்டப்படும் கதைக்கும் இதற்கும் லவலேச சம்பந்தமுமில்லை.

ஒரு குடும்பத்தின் கதை என்று சொல்லுகிறார்கள். செல்லமாக வளர்ந்த ஹீரோ ராஜீவ் பல பெண்களைக் கற்பழிக்க அவர்கள் அம்பாள் ஆயிரங்கண்ணுடையாளின் பக்தைகள் என்பதினால் ராஜீவை அழிக்க விரும்புகிறாள் சக்தி.

பூசாரி நம்பியாரின் மகள் ஜீவிதாவை, தாயரர் பத்மினிக்காக மகன் ராஜீவ் மணந்து அவளை வாழாவெட்டியாக ஆக்குவதும், அவள் சபதம் எடுத்துக் கொண்டு பிரெஞ்சுக்காரியாக வேஷம் போட்டு, புருஷனுடன் உறவு கொள்ளுவது, மங்கம்மா சபதத்தை நினைவூட்டுகிறது.

ஜீவிதாவின் வயிற்றில் பிறந்த குழந்தை ஷாலினி, சக்தியின் அருளால், பல அதிசயங்கள் காட்டித் தகப்பனையே பழி வாங்குவதும், ராஜீவின் தாயார் பத்மினி, மனைவி ஜீவிதா ஆகியோரின் பிரார்த்தனைக்கு இரங்கி, 'ராஜீவ் மனந்திருந்தி வணங்கினால் வாழ்வு கொடுப்பதாக' குழந்தை ஷாலினி ரூபத்தில் சக்தி சொல்ல, அந்தப் படியே முடிவு சுபமாக ஏற்படுகிறது. ஷாலினி என்கிற குழந்தை வெகு பிரமாதமாக நடித்திருக்கிறது. அந்தக் குழந்தை சக்தியுடன் ஐக்கியமாவது பழைய நந்தனார், மாணிக்க வாசகர், ஜோதி ராமலிங்கம் இவர்களை நினைவூட்டுகிறது.

வைத்திருப்பதுதான்
ராஜீவ், இறுதிவரை இறுக்கமாக முகத்தை போதிக்கிறார். மற்ற
நடிப்பு, என்கின்ற புதிய பாடத்தை நமக்கெல்லாம் பெறுவதாகக்
படி ஊமை பேசுவதாகக் காட்டுவதும், குருடன் பார்வை கருத்தையும் கண்
காட்டுவதும், உன் போன்ற பெண்மணிகளின்
களையும் ஒருங்கே கவர்வதற்காகவே.

பாம்பும், பூனையும் சண்டை போடுவது புதுமையாக இருக்கிறது.
பத்மினி, நம்பியார், மனோரமா முதலானோர் நடித்தும் அவர்களுக்குச்
சரியான பாத்திரங்கள் இல்லை என்பது எமது தாழ்மையான அபிப்பி
ராயம்.

பாட்டுக்கள் மனத்தில் தைக்கிற மாதிரியில்லை. பழம்பெருமை
வாய்ந்த டைரக்டர் கே. சங்கர் இயக்கியிருக்கிறார். பழம்பெருமைகளை
மட்டும் இப்போது சொல்லிக் கொள்ளலாம். மற்றபடி வேறு விசேஷ
மில்லை. வேணும். ஆசீர்வாதம்.

— ஜெயமன்மதன்





கொஞ்சம் துணிச்சல்; கொஞ்சம் லட்சியம்!



நாடகக் காட்சி



கர்நாடக இசையையும், அதன் உயர்வையும் மையமாக வைத்து, கணிசமாகப் பொருளும் செலவழித்து, ஒரு நாடகம் தயாரித்து சபாக்களில் வெற்றிகரமாக வழங்குவது என்றால், கொஞ்சம் • துணிச்சல், கொஞ்சம் லட்சியம் எல்லாம் வேண்டும். பாஸ்கரிடம் அவை இருக்கின்றன. பேசுகிறார்:

"சங்கீத சப்ஜெக்டை வைத்து ஒரு நாடகம் போட வேண்டும் என்று ரொம்ப நாளாக ஆசை மனசில் குடைந்து கொண்டே இருந்தது. ஒரே வீட்டில் மேலே ஒரு முரடனும், கீழே ஒரு பாகவதரும் குடியிருந்தால் எப்படியிருக்கும் என்று யோசித்தேன். பாகவதர் தினமும் காலையில் பாடுவது ரௌடிக்கு இடைஞ்சலாக இருக்கிறது. ஆனால் ரௌடி மிரட்டாமலே, திடீரென்று ஒருநாள், பாட்டுப் பாடுவதை நிறுத்தி விடுகிறார் பாகவதர். பாகவதரின் மனைவி, அதிர்ச்சியில் பிரமை பிடித்த மாதிரி உட்கார்ந்து விடுகிறாள். ஒரு பிழையைச் சுட்டிக் காட்டி மனைவி குத்தலாகச் சொன்னதற்காக, 'இனி பாடவே மாட்டேன்' என்று சத்தியம் செய்திருக்கும் பாகவதர், 'பாட்டுப் பாடு பாகவதரே' என்று ரௌடி கெஞ்சிக் கேட்டும், மறுத்துக் கொண்டே இருக்கிறார். பாகவதர் எப்போதோ பாடிய காஸட்டை ரௌடி போட்டுக் கேட்கும் போது, பாகவதரின் மனைவி மெல்ல எழுந்து நடக்கிறாள். 'இந்தப் பாட்டில் ஒன்றும் இல்லை என்று நினைத்தோமே, இதில் ஏதோ இருக்கிறது' என்று ரௌடிக்குத்

கதக்

இவ்வாண்டு கிருஷ்ண கான சபையில் கதக் கலைஞர் பிர்ஜூ மகராஜ் நிருத்ய சூடாமணி விருது பெறுகிறார். 'கதக்' என்ற நடன வகை பற்றி......

கர்நாடக இசையின் அடிப்படை பக்தி என்பது போலவே, கதக் நடனத்தின் அடிப்படையும் பக்திதான். புராண இதிகாசக் கதை நிகழ்ச்சிகளை நடனத்தின் வழியாகச் சொல்லும் 'கதாகார்' என்று ஒரு சமூகமே முன்பு உருவாயிற்றாம். இவர்கள் ஊர் ஊராக, கோயில் கோயிலாகப் போனார்கள். இதிகாசக் கதைகளை மக்களிடையே இசையோடு பாடியும் நடனமாடியும் மகிழ்வித்தார்கள். குறிப்பாக ராதையும் கிருஷ்ணனும் இந்தப் பாடல்களிலும் நடனங்களிலும் அதிகமாக இடம் பெற்றார்கள். கதையைச் சொல்லும் கதாகார்களால், நாளடைவில் இந்த நடனத்துக்கு 'கதக்' என்று பெயர் வந்தது.

முகலாய ஆட்சியின் போது கதக் மெல்ல மெல்லக் கோயில்களிலிருந்து அரசவைகளில் அடியெடுத்து வைத்தது. அப்போது சில புதிய வடிவங்களையும் பெற்றது. அதன் ஆதாரமான அம்சங்கள் அப்படியேதான் இருந்தன. ஆனால் சொல்லப்படும் கதைகளும், பாடப்படும் பாடல்களும் பக்தியை

தோன்றுகிறது. பாகவதரை மறுபடி பாட வைப்பதில் தீவிரமாகஇருக்கும்ரௌடி, அதில் வெற்றி அடைந்து விட்டாலும், அதற்காகத் தன்னைத் தியாகம் செய்து கொண்டு விடுகிறான். இவ்வாறு ஓரளவுக்குக் கதையை யோசித்து வைத்திருந்தேன்...

''பாகவதர் என்ன தப்புப் பண்ணினார் என்று மனைவி குத்திக் காட்டினாள்; பாகவதர் ஏன் பாட மாட்டேன் என்று சபதம் செய்கிறார்; அப்புறம் எப்படி அவர் மனசை ரௌடி மாற்றுகிறான் என்பதற்கெல்லாம் சரியான காரணங்கள் வேண்டும். மூன்று நான்கு மாதங்கள் நானும் நண்பர் 'ஜோசியர்' சீனுவும் சந்தித்துக் கொண்ட போதெல்லாம் இந்தக் கதையைக் கொஞ்சம் கொஞ்சமாக இம்ப்ரூவ் செய்து கொண்டே இருந்ததில் ஒரு மாதிரியாக ''ஜன்மம் பொறந்திடுச்சு'' நாடகம் உருவாகிவிட்டது.

''கர்நாடக சங்கீதத்தை உசத்தியாகக் காண்பிக்க வேண்டுமானால், அதற்கு ஒரு நல்ல பாட்டு வேண்டும். அது தமிழில் இருக்கலாமா, வேறு மொழியில் இருக்கலாமா என்று மண்டையைக் குடைந்து கொண்டோம். தமிழிலேயே இருந்தால் அதன் உயர்வை மறுபடி டயலாக்கில்எடுத்துச்சொல்லும் போது சப்பென்று போய் விடுவது மட்டுமில்லை, ஆடியன்ஸ் எப்படி ரசிப்பார்களோ தெரியாது. பாகவதரின் பாட்டில், அவரைத் திரும்பப் பாட வைக்கும் அந்தப் பாட்டில், உள் அர்த்தமும் அழுத்தமாக இருக்க வேண்டும். ரௌடியே அதை எடுத்துச் சொல்லும்படியாக அமைய வேண்டும். என்ன செய்வது என்று மறுபடி யோசித்தோம்.

''பி.பி. ஸ்ரீனிவாஸ்தான் பாட்டுப் பாடுவதோடு, பாட்டும் எழுதுவாரே? அவரிடம் ஐடியாவைச் சொன்னோம். முதலில் அவருக்கே நம்பிக்கை இருக்கவில்லை. 'சரி, சாயங்காலம் டிரைவ் — இன்னில் பார்ப்போம், அங்கே வந்து விடுங்கள்!' என்றார் பி.பி.எஸ்.

'''மறுபடி கதையைச் சொல்லுங்கள்!' என்றார் ஸ்ரீனிவாஸ். சொன்னோம். மளமளவென்று ஒரு காகிதத்தை எடுத்து, 'உத்தம ஜன்ம, ஈ நர ஜன்ம...' என்று தெலுங்கில் ஒரு பாட்டை எழுதினார். அர்த்தமும் சொன்னார். 'கானடா ராகத்தில்பாட்டைப்போடுங்கள்' என்றார். மறுபடி பிரச்னை, யார் பாடுவது? சட்டென்று 'சங்கீதாஞ்சலி' சந்தானம் நினைவுக்கு வந்தார். அவரிடம் நாடகத்துக்கான பாட்டைப் பாட முடியுமா என்று கேட்டோம். ஒப்புக் கொண்டவுடன், பாட்டைப் பதிவு செய்து கொண்டோம்.

''முதல் நாளன்று பி. பி. ஸ்ரீனிவாஸ் வந்தார். வந்தவர், 'மலைய மாருதம்' என்று இப்போது கன்னடத்தில் சக்கைப் போடு போடுகிற படத்தின் டைரக்டர் ரவியையும் அழைத்துக் கொண்டு வந்தார். இரண்டு பேருமே, நாடகம் முடிந்து, மேடைக்குப் பின்னால் வந்து பாராட்டினார்கள். மறுநாள் பி. பி. எஸ். போன் செய்து, 'ரவி உங்களைப் பார்க்கணும் என்கிறார். போய்ப் பார்த்துவிடுங்கள்' என்றார். அப்போதுதான் கதை தமக்குப் பிடித்திருப்பதாயும், கன்னடம் — தமிழ் இரண்டிலும் இதைப் படமாக்க விரும்புவதாகவும் தெரிவித்தார் ரவி. சந்தோஷமாக இருந்தது.''

கதை எழுதி, நாடகத்தைத் தயாரித்திருக்கும் பாஸ்கரே ரௌடி துரையாக வருகிறார். ஓரிடத்தில் கூட இரட்டை அர்த்தத்தின் துணையை நாடாமல், இயல்பாக வசனம் எழுதியிருக்கும் 'ஜோசியர்' சீனுவும் நடிக்கிறார். மற்றும் முரளி, கோவை காமாட்சி, ராகினி, டி. கே. சீனிவாசன் முதலியோர் நடித்திருக்கிறார்கள்.

நாடகத்தில் குறைகள் இல்லாமல் இல்லை. ஆனால் அவை நாடகத்தின் உயர்வைச் சிதைக்கவில்லை.

— **சாருகேசி**

படங்கள்: **யோகா**

யும் தாண்டிப் போயின. வைதீகமான நடனப் பாணியைச் சற்று ஒதுக்கிவிட்டு, திறமையை எப்படியெல்லாம் காட்டலாம் என்று யோசிக்க ஆரம்பித்தார்கள். அதில் பிரமிப்பூட்டும் அதிவேகச் சுழற்சியும், அயர வைக்கும் பாத வேலைகளும் அறிமுகப்படுத்தப்பட்டன.

நடனப் பகுதி, கதக் நடனக் கலைஞரின் அதிவேகமான, நுட்பமான, பாத வேலைகளை வெளிப்படுத்தும். சைகைகளும் பாவங்களும் நிறைந்த பகுதியில், பாடலின் கவிதை நயத்தை வெளிக் கொண்டு வர நடனக் கலைஞர் தம் திறன் முழுவதையும் கையாளுவார்.

இந்துக் கோயில்களிலிருந்து உதயமாகி, முகலாய அரண்மனைகளில் வளர்ந்தது கதக். சாரங்கியும், சிதாரும், புல்லாங்குழலும், தபலாவும் பக்க வாத்தியங்களாக இருந்தாலும், தபலாக் கலைஞரை அதிக வேலை வாங்கும் கலை, கதக்.

நடனங்களுக்கிடையே, நடனக் கலைஞரே சொற்கட்டுக்களை அறிவித்துவிட்டு, அதை தபலா கலைஞர் திருப்பி வாசிக்க, அதற்கு நடனக் கலைஞர் சலங்கை மணிகள் ஜல்ஜல்லென்று ஒலிக்க நடனமாடிக் காண்பிப்பார். சிநேக பாவத்தோடு கூடிய இந்தப் போட்டியில் சொற்கட்டு, தபலா, நடனம் என்று மாறி மாறி வரும். மூன்றின் மொத்தக் கோவையையும் பிரமிப்பூட்டுவதாக இருக்கும்!

— **சித்தார்த்**

PONDICHERRY UNIVERSITY

THE SCHOOL OF MANAGEMENT

Post-Graduate Programme in Management 1987-88

ADMISSION TO TWO-YEAR M.B.A. COURSE

Applications in the prescribed form are invited for the **MASTER OF BUSINESS ADMINISTRATION DEGREE** (M. B. A.) Course of the Pondicherry Central University, beginning from **July 1987**, as approved by the **All India Board of Management Studies.**

The School offers **M. B. A. (Master of Business Administration)** with specialisation in:

1. **GENERAL BUSINESS ADMINISTRATION** (with emphasis in Marketing)
2. **FINANCE MANAGEMENT** (with emphasis in Costing)
3. **MANAGEMENT INFORMATION SYSTEMS** (with exposure to Computers) &
4. **HOSPITAL MANAGEMENT AND PUBLIC SYSTEMS** (with emphasis on Personnel Management)

These Courses will be highly **innovative and placement oriented**, dove-tailed with most modern inputs and also a possible French Collaboration.

Top quality faculty (full time and part time) drawn from various Universities in India are in position.

2. QUALIFICATIONS:

Graduates of any discipline with an aptitude for Management Studies from any recognised University can apply. Those who are appearing for final examinations can also apply if they are confident of getting through with Credit.

However at the time of actual admission original or provisional degree certificates must be produced.

3. APPLICATIONS:

Prescribed application forms can be had on written requisition from **The Dean, The School of Management, Pondicherry Central University, 'Invocation' Pondicherry 605 012** by sending an oblong size **(30 cms × 12.5 cms)** Self addressed Stamped Envelope with Stamp for **Rs.** 3/- along with a Demand Draft for **Rs.** 100/- (One hundred only) towards combined Application and Entrance Test Fees **(Rs. 33/- for SC, ST, and Handicapped candidates)** drawn in favour of **FINANCE OFFICER, CENTRAL UNIVERSITY, PONDICHERRY** on any Nationalised Bank at Pondicherry.

LAST DATE FOR APPLICATIONS: 2nd February 1987 (2.2.1987)

Applications should be sent by Registered Post on or before 2.2.1987 positively. The Applications should be complete in all respects or else they are liable to be rejected.

4. RESERVATION:

Reservation of seats will be made for SC, ST and Handicapped candidates as per rule.

5. SELECTION:

Candidates will be selected on the basis of **pure merit** assessed by an **ENTRANCE EXAMINATION** on **GMAT** model followed by an **INTERVIEW** at Pondicherry.

The second batch of candidates for which this Advertisement relates will join the course on **1st July 1987.**

SCHOOL OF MANAGEMENT
CENTRAL UNIVERSITY
'INVOCATION'
PONDICHERRY 605 012

Dr. M.T. THIAGARAJAN
B.E., M.E., FIE., FIMH (London)
K.D.T. DR.ING (Dresden)

6 விருதுகள் 6 கலைஞர்கள்!




* தருமபுரம் சுவாமிநாதன்

* ரோபின் கோஷ்





* பிர்ஜு மகராஜ்



* கே.வி. என்



* கோபிநாத்



* டி.கே. மூர்த்தி

வருஷா வருஷம் கலை விழாக்களும் அதிகமாகி வருகின்றன; அவ்விழாக்களில் கௌரவிக்கப்படும் கலைஞர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது. இவ்வாண்டு விருதுகள் பெறும் ஆறு கலைஞர்கள் பற்றி ரத்தினச் சுருக்கமாக......

"என்னைப் போல் நீ வயலின் வாசிக்க வேண்டாம். பாட்டுத்தான் பாடணும்!'' என்றார் கொல்லங்கோடு விசுவநாத பாகவதர், தம் மகன் நாராயணசுவாமியிடம். சி.எஸ். கிருஷ்ணய்யர், பாப்பா வெங்கட் ராமையா, பாலக்காடு மணி ஐயர் என்று பல படிகள் தாண்டி, அரியக்குடி ராமானுஜ ஐயங்காரிடம் வந்து சேர்ந்தார் கே.வி.என்.

ராக வடிவத்தைச் சற்றும் பிசிறு தட்டாமல் பாவபூர்வமாக ஆலாபனை செய்வது; பாடல்களை உணர்ச்சியோடும் உச்சரிப்புச் சுத்தத்தோடும் பாடுவது; லயத்தில் தேர்ச்சி பெற்று சுவரபிரஸ்தாரங்களில் தனித்தன்மையோடு வித்வத்தைக் காட்டுவது; சாரீர வசதியோடு சுருதி பிசகாமல் இழைவது; எல்லாவற்றுக்கும் மேலாக பக்தியோடு இசையை ஈசுவரார்ப்பணம் செய்வது என்று எல்லாத் தன்மைகளும் பொருந்திய முழுமை பெற்ற இசைக் கலைஞராகத் திகழ்கிறார் கே.வி. நாராயணசுவாமி.

''எம்.டி. ராமநாதன் இன்றைக்கு இருந்து, எனக்கு 'சங்கீத கலாநிதி' பட்டம் தந்திருந்தால், எனக்கு வேண்டாம் என்று நிச்சயம் சொல்லியிருப்பேன்! கே.வி. நாராயண சுவாமிக்குக் கொடுத்த விருது இல்லை இது. என் குருநாதர் ஐயங்கார் அவர்களுக்கு மறுபடி கொடுக்கிறார்கள் என்றே நினைத்துக் கொள்கிறேன்'' என்றார் கே.வி. என்.

மைலாப்பூர் ஃபைன் ஆர்ட்ஸில் 'சங்கீத கலா நிபுண' விருது பெறுகிறார் டி.கே. மூர்த்தி. திருவனந்தபுரத்தை அடுத்த நெய்யாற்றங்கரையைச் சேர்ந்த மூர்த்திக்கு, ஏழு வயதில் குரு, தமையனார் கோபால கிருஷ்ணன்தான். ஹரிகதைகளுக்கு மட்டுமே வாசித்துக் கொண்டிருந்தார் மூர்த்தி. ஒரு தடவை, தஞ்சாவூர் வைத்தியநாதய்யர் ஒரு கச்சேரியில் மிருதங்கம் வாசித்து முடித்த பிறகு, அடுத்ததாக ஹரிகதைக்கு மூர்த்தி வாசித்துக் கேட்டபிறகு, அவருக்குப் பட்டு எடுத்துப்போர்த்திப்பாராட்டிவிட்டு, 'என்னிடம் மிருதங்கம் கற்றுக் கொள்கிறாயா?' என்று கேட்டாராம். இவரைக் குருவாக அடைய மாட்டோமா என்று ஏங்கிக் கொண்டிருந்த மூர்த்தி, இரண்டே மாதத்தில் தஞ்சை போய்ச் சேர்ந்துவிட்டார்.'' அப்போது பாலக்காடு மணி ஐயரும் அங்கே மிருதங்கம் கற்றுக் கொண்டிருந்தார். பாலக்காடு மணி கஞ்சிரா வாசிக்க, மூர்த்தி மிருதங்கம் வாசித்த

நிகழ்ச்சிகள் பல!

ஒரே வித்துவானுக்குத் தொடர்ந்து முப்பது வருடங்களுக்கு மேலாகப் பக்கவாத்தியம் வாசிக்கும் வாய்ப்பு சாதாரணமாகக் கிடைக்காது. எம்.எஸ்ஸுக்கு 35 வருடங்களுக்கு மேலாக வாசித்த பெருமை டி.கே. மூர்த்திக்கு உண்டு.

''மிருதங்கச் சக்கரவர்த்தி'' என்ற பட்டம் உள்பட பல பட்டங்களைப் பெற்றுள்ள மூர்த்தி, அனைத்திலும் உயர்வானதாக மதிப்பது காஞ்சிப் பெரியவர் அருளாசிகளோடு அளித்த ''மிருதங்க பூஷணம்'' என்ற பட்டத்தைத்தான். மூர்த்தி சிறிது, கீர்த்தி பெரிது என்பது யாருக்குப் பொருந்துகிறதோ இல்லையோ, டி.கே. மூர்த்திக்கு நிச்சயம் பொருந்தும்!

இந்தியன் ஃபைன் ஆர்ட்ஸில், 'சங்கீத கலா சிகாமணி' விருது பெறும் குரு கோபிநாத் ஆலப்புழையைச் சேர்ந்தவர். இப்போது வயது 78. இதில் 64, வருடங்களை நடனத்துக்காகவே அர்ப்பணித்த மேதை. ஒரு சந்நியாசியைப் போன்ற, மரியாதை உண்டாக்கும் தோற்றம்.

ஐந்து குருநாதர்களிடம் பயின்று, பதினாறு வயதில் மேடையேறி, கதகளி மட்டுமல்லாமல், சம்பிரதாய நடன வகைகள் தவிர, நாட்டுப்புற நடனக் கலைகளையும் கற்றுத் தேர்ந்தவர். நடனம் சம்பந்தமான பல புத்தகங்களுக்கு ஆசிரியர்.

கதகளி நடன வகையை, கேரள எல்லையைத் தாண்டி வெளி இடங்களில் பரப்பிய ஜாம்பவான்களில் மிக முக்கியமானவர் என்று குரு கோபிநாத்தைச் சொல்லுகிறார்கள். முப்பதுக்கும் மேற்பட்ட நடன நாடகங்களை அமைத்த இந்தக் கலைச் சிற்பி, திருவிதாங்கூர் மகாராஜாவிடம் பட்டமும் 'புகழ் பெற்ற உலக நடனமணிகளின் அருகே இணையாக நிற்கும் தகுதி படைத்தவர்' என்று ரவீந்திரநாத் தாகூரின் பாராட்டையும் பெற்றவர்.

கிருஷ்ண கான சபையில், 'நிருத்ய சூடாமணி' விருது பெறும் பிர்ஜு மகராஜ், இரண்டு முறை 'பத்ம விபூஷன்' விருதை வேண்டாம் என்று நிராகரித்துப் பின்னர் ஏற்ற கதக் நடனக் கலைஞர். 'இப்படிப் பட்டம் தருவதைவிட, வகுப்பு நடத்த எனக்கு நல்லதாக ஓர் இடம் கொடுத்தால் எத்தனை நன்றாக இருக்கும்!' என்கிறார்.

பிர்ஜ் மோகன் நாத் மிஸ்ரா, பிர்ஜு மகராஜ் ஆனது எப்படி? மகராஜ் என்ற பட்டம், சாதாரணமாக எல்லாம் கற்றறிந்த ஒரு பண்டிதருக்குத்தான் கிடைக்கும். 'ஒருவேளை லயம், நிருத்யம், அபிநயம் என்று கதக்கில் எல்லாவற்றையும் அறிந்ததால் இருக்கலாம்' என்கிறார். 'தவிர, தகப்பனார் இருந்தபோது இவரை சோட்டே மகராஜ் என்று அழைத்து வந்திருக்கிறார்கள். இப்போது 'மகராஜ்' பெயருடன் ஒட்டிக் கொண்டுவிட்டது!

ஏழு வயதில் கதக் நடனமாட ஆரம்பித்து, ஒன்பதாவது வயதிலேயே தகப்பனாரை இழந்த பிர்ஜுவுக்கு, பிறகு அம்மாதான் கதக் கற்றுக் கொடுத்திருக்கிறார். பட உலகை நம்பி இவர் பம்பாய் கிளம்ப இருந்தபோது அம்மா தடுத்துவிட்டாராம். 'பணம் நிறையக் கிடைக்கும். ஆனால் உன் கலையைப் பரிசுத்தமாகக் காத்துக் கொள்ள முடியாது மகனே!' என்றாராம்.

டாக்டர் சேலம் ஜெயலட்சுமியின் கல்கரல் சென்டர் ஃபார் பெர்ஃபாமிங் ஆர்ட்ஸில் 'சங்கீத சாகரம்' பட்டம் இந்த வருஷம் வட இந்திய வயலின் கலைஞர் புரொபசர் ரோபின் கோஷுக்குக் கொடுக்கிறார்கள். அலாவுதீன் கானின் நேரடி சிஷ்யன் ரோபின். விசுவ பாரதியோடு தொடர்பு உடையவர்.

ஒரு முனிவரைப் போன்ற தோற்றம். மேலே சட்டை ஏதும் கிடையாது. கழுத்தில் ருத்திராட்ச மாலைகள் மட்டுமே.... இந்த எளிய மனிதர்தான் தமிழிசைச் சங்கத்தில் 'இசைப் பேரறிஞர்' விருது பெறும் தருமபுரம் சுவாமிநாதன்.

1942 முதல் 47 வரை, தருமபுரம் மடத்திலுள்ள தேவாரப் பாடசாலையில் படித்தவர் சுவாமிநாதன். அங்கே கூடவே வடமொழியும் கர்நாடக இசையும் கற்றுத் தருவார்கள். பிறகு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சங்கீத வகுப்பில் சேர்ந்து முதல் வகுப்பில் தேறி, சங்கீத பூஷணம் பட்டமும் பெற்றார்.

இவருக்கு இரண்டு குறைகள்: 'தமிழ் நாட்டில் இவ்வளவு மடாலயங்களும், கோயில்களும் இருந்தாலும் பெரும்பாலும் தேவாரம் கேட்பது அரிதாக இருக்கிறது. திருமுறையினால்தானே கோயில்களே வாழ்ந்து கொண்டிருக்கின்றன! ஆனால் இப்போது தேவாரம் ஓதுவது குறைவாகவே இருக்கிறது. தகுதியுள்ள ஓதுவார்கள் வருவது இல்லை. இது குறை நம்பர் ஒன்று. இரண்டாவது:

''கிறிஸ்துவர்கள் பைபிளிடத்தும், முஸ்லீம்கள் குர் ஆனிடத்தும், வைஷ்ணவர்கள் திவ்ய பிரபந்தத்திடமும் வைத்திருக்கும் பக்தியும் மரியாதையும் பார்க்கும்போது, சைவர்கள் தேவாரத்தின் மீது கொண்டிருக்கும் பற்று மிகக் குறைவு, மிகச் சாதாரணம்!''

'பணத்துக்காக யாரேனும் உன்னைப் பாடச் சொன்னால், போய்ப் பாடு. ஆனால் தினமும் நூறு பாட்டாவது சிவன் கோயிலில் போய்ப் பாடு. வாழ்க்கைச் செலவுக்குப் பணமும் கிடைக்கும். கூடவே சிவ புண்ணியமும் கிடைக்கும்!' என்று இவரிடம் கூறினார் திருப்பனந்தாள் மடாதிபதி அருள் நந்தித் தம்பிரான். ''இன்றைக்கும்கூட கந்த கோட்டத்தில் போய்ச் சிவலிங்கத்திடம் நின்று நூறு பாட்டுப் பாடிவிட்டுத்தான் வந்தேன். கோயில் பூட்டியிருந்தால், வாசலில் நின்று பாடிவிட்டாவது வருவேன்'' என்கிறார் சுவாமிநாதன் உணர்ச்சியுடன்

பேட்டி, கட்டுரை: **சாருகேசி**

புகைப்படம்: **யோகா**

பார்ப்பவர் வியந்து பாராட்டும் வகையில் உங்கள் வீட்டுச்சுவர்கள் பளபளப்பாக அமைய



சிங்கிள் ஷாட்

- எந்தவிதமான 'செம்' முடனும், சுண்ணும்புடனும் கலந்து சுவர்களில் பூசக் கூடிய அட்ஹெஸிவ் சிங்கிள் ஷாட்
- சுவரில் உப்புத்தாள் தேய்க்காமலேயே, இதை கலந்து அடிக்கலாம்.
- இதை பயன்படுத்துவதால் 'செம்' சுண்ணும்பு கைகளில் ஒட்டாது பிரிந்து போகாது. விரிசல் ஏற்படாது.



- சுவரில் புள்ளிகளோ, கோடுகளோ ஏற்படுவதை இது தடுக்கிறது.
- நீடித்து உழைக்கும் திறன் வாய்ந்தது
- 125 கிராம், 250 கிராம், 500 கிராம் மற்றும் 1 கிலோ டப்பாக்களில் கிடைக்கிறது.

தயாரிப்பாளர்கள்:

ஜெம் நா:ப் கெமிக்கல்ஸ் [பி] லிமிடெட்.

இராஜபாளையம்-626117

Efficent LC 408A 36

14

ராஜாஜி வாழ்க்கை வரலாறு—III

ராஜ்மோகன் காந்தி



ஆகஸ்டு 16. சுதந்திர இந்தியாவில் ராஜாஜி – காந்திஜியின் முதல் சந்திப்பு. முதல் நாள் மகாத்மா உண்ணா நோன்பு மேற்கொண்டிருந்தார் – மகாதேவ தேசாய் நினைவாக. அவர் காலமானது 1942ல் ஆகஸ்டு 15ம் தேதிதான். இன்று மகாத்மா சுதந்திரத்தின் சிலிர்ப்பை உணரவில்லை. இந்து–முஸ்லிம் சகோதரர்கள் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொல்வதால் ஏற்பட்ட வேதனையை அனுபவித்துக் கொண்டிருந்தார். ஸி. ஆர். காந்தியின் கரங்களை எடுத்துத் தமது கைகளில் வைத்துக் கொண்டார். இருவருமே சற்று நேரம் ஒன்றும் பேசவில்லை. பிறகு அவர்கள் கலவரங்கள் நடக்கக் கூடுமோ என்பது பற்றியும் அக்திகள் குறித்தும் உரையாடினார்கள். அது மட்டுமல்ல, ராஜாஜி இப்போது வசிப்பது போன்ற மாளிகையில் மகாத்மாவினால் வாழ முடியாது என்றும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. உடனிருந்த ஷ்ரவர்த்தி, "மகாத்மா மக்களோடு மக்களாக வாழ்கிறவர்; அவருக்கு அரண்மனைகள் மீது மோகமில்லை" என்றார். "அதனால் தான் அவரை ஆகாகான் மாளிகையில் சிறை வைத்தார்கள்!" என்றார் ஸி. ஆர். மகாத்மா சிரித்துவிட்டார். சரியாகத் தொண்ணூறு நிமிஷங்களுக்குப் பிறகு இருவருமே சொல்லி வைத்தாற்போல் ஒரே நேரத்தில் தத்தமது பாக்கெட் கடிகாரங்களை எடுத்துப் பார்த்தார்கள். ஒருவரை ஒருவர் நோக்கினார்கள். பிரிந்தார்கள்.

கல்கத்தா கண்ட அற்புதம்!

தில்லியில் சுதந்திர தினம் பிரமாதமாகக் கொண்டாடப்பட்டது. "என்னுடைய வாழ்நாளிலேயே மன மலர்ச்சி அளித்த குறிப்பிடத்தக்க ஒரு தினமாக ஆகஸ்டு 15 விளங்கியது" என்று மவுண்ட்பேட்டன் ஸி. ஆருக்கு எழுதினார். ஆனால் பஞ்சாப் படுகொலைகள் மகிழ்ச்சியைத் தரைமட்டமாக்கிவிட்டன. இதே நேரத்தில் கல்கத்தாவில் ஆகஸ்டு 18, ஈத்பெருநாளன்று பிரார்த்தனை புரிய காந்திஜியின் அழைப்பை ஏற்று ஹிந்துக்கள், முஸ்லிம்கள், சீக்கியர்கள் அடங்கிய ஒரு பெரும் கூட்டம் திரண்டிருந்தது. மவுண்ட் பேட்டன் கல்கத்தாவின் சாதனையைப் புகழ்ந்தார். ஸி. ஆருக்கு எழுதிய ஒரு கடிதத்தில் "நீங்களும் காந்திஜியும் கல்கத்தாவில் ஓர் அற்புதத்தைச் சாதித்திருக்கிறீர்கள். நான் என் மனத்தில் சுமக்கும் பாரத்திலிருந்து ஒரு கணிசமான பகுதியை இறக்கிவிட்டீர்கள்" என்று குறிப்பிட்டார்.

கவர்னருக்கு உரிய அரசியல் சாசன ரீதியான பணியை மட்டும் செய்து, அத்துடன் திருப்தி அடைந்து விடுவது என்பதை ஒப்புக் கொள்வது ஸி. ஆருக்குக் கஷ்டமாக இருந்தது. நல்லவேளையாக முதல் மந்திரி கோஷ், நிலைமையை அவருக்கு எளிதாக்கி விட்டார். கோஷும் அவரது சகாக்களும் அரசியல் சட்டத்தை வார்த்தைக்கு வார்த்தை ஸி. ஆர். கடைப் பிடிக்கத் தேவை இல்லை என்றே கருதினர். கோஷ், பிரம்மச்சாரி; நேர்மைக்கும் ஒழுக்கத்துக்கும் பேர் பெற்றவர்; ஒரு வெள்ளி விழாக் காலமாக ஸி. ஆரை வியந்து போற்றி வந்திருப்பவர். அவர் ஆட்சி நன்கு நடக்க ஸி. ஆரையே பெரிதும் நம்பியிருந்தார். சில மந்திரி சபைக் கூட்டங்களுக்குக் கூட ஸி. ஆர். தலைமை தாங்குமாறு கோரப்பட்டார்! அரசின் பிரதமக் காரியதரிசியும் மற்றச் செயலாளர்களும் ஸி. ஆரை அவ்வப்போது ஃபைல்களுடன் காண வந்தார்கள்! இந்தப் பழக்கங்கள் மற்ற மாகாணங்களில் இப்போது கைவிடப்பட்டிருந்தன. "ராஜாஜிக்கு உள்ளது போன்ற அதி

காரங்களை எங்களுக்கும் வழங்குங்கள்'' என்று கூடச் சில மாகாண ஆளுனர்கள் பட்டேலைக் கேட்டார்கள்! ''அது சாத்தியமில்லை'' என்று உறுதியாக மறுத்துவிட்டார் பட்டேல். ''ஸி. ஆர். சில விசேஷ அதிகாரங்களைப் பெற்றிருக்கிறார் என்றால் அதற்குக் காரணம் அந்த மாகாண அமைச்சரவை தானாகவே முன்வந்து அவற்றை அவருக்கு வழங்கியிருப்பதுதான்

கலப்படக் குற்றத்துக்காகச் சிலரை கோஷ் கைது செய்ய நேர்ந்தபோது, கோஷ் விமர்சனத்துக்கும் கண்டனத்துக்கும் உள்ளானார். அப்போது ஸி. ஆர். தமது முதலமைச்சர் சார்பாக வாதாடியது மட்டுமல்ல, கலப்படங்களை ஒழித்துக் கட்ட ஒரு சக்திமிக்க சட்டத்தையும் அவருக்கு உருவாக்கித் தந்தார்! ''கவர்னர் ராஜாஜி எனக்கு அண்ணா மாதிரி இருந்தார்'' என்று கோஷ் 1975ல் நினைவு கூர்ந்தார்.

காந்தியவாதிகள், கவர்னர் மாளிகையை ஒரு மருத்துவமனையாகவோ அல்லது கைத்தொழில் கேந்திரமாகவோ மாற்றிவிட வேண்டும் என்று விரும்பினார்கள். கல்கத்தாவின் தேசிய நூலகத்துக்குப் புதிய கட்டடம் தேவைப்பட்டது. அதன் சார்பில் சிலர் கவர்னர் மாளிகையை ஆசையோடு நோக்கினார்கள். ஆனால் ஸி. ஆர். அசைந்து கொடுக்கவில்லை. ''நீங்கள் எழுப்பும் கேள்வி இந்தக் கல்கத்தா மாளிகையைப் பொறுத்தது மட்டுமல்ல; புது தில்லி வைஸ்ராய் மாளிகையையும் மற்றும் பல்வேறு மாகாணங்களில் உள்ள கவர்னர் மாளிகைகளையும் உள்ளடக்கிய பிரச்னை. இது பற்றி நன்கு யோசிக்க வேண்டும். என்னை எளிமையானவன் என்று காட்டிக் கொள்வதற்காக அவசரப்பட்டு நான் ஒரு முடிவுக்கு வர முடியாது'' என்றார். ஆனால் கவர்னருக்கு மேலும் இரு மாளிகைகள் இருந்தன. ஒன்று டார்ஜிலிங்கில் இருந்தது. அந்த மாளிகையிலிருந்து பார்த்தால் கஞ்சென்சங்கா சிகரமும் எவரெஸ்ட் சிகரமும் தெரியும். கல்கத்தாவுக்கு மேற்கே பர்ரக்பூரில் ஹூக்ளி நதிக் கரையில் மற்றொரு மாளிகை இருந்தது. இது ரொம்ப அதிகம் என்று ஸி. ஆர். நினைத்தார். பர்ரக்பூர் மாளிகையை போலீஸ் துறைக்குக் கொடுத்துவிட்டார்.

கவர்னரின் வாழ்க்கையில் சில அனுகூலங்கள் உண்டு. குழந்தைக் காலக் கனவுகள் சில பலிக்கும்! உதாரணமாக அவர் விரும்பினால் இப்போது ஒரு ரயில் இஞ்சினில் டிரைவரோடு சேர்ந்து பயணப்படலாம்! ரணகட் அகதிகள் முகாமுக்கு விஜயம் செய்துவிட்டுத் திரும்பும்போது அந்த ஆசையைப் பூர்த்தி செய்து கொண்டார் ஸி. ஆர். கரித்துகள்களும், சத்தமும், வெப்பமும் நிறைந்த இஞ்சினில் பயணம் செய்து முடிந்த பிறகு, ''பிடித்திருந்ததா?'' என்று கவர்னரை நிருபர்கள் கேட்டார்கள். ''புதிதாகப் பல விஷயங்களைக் கற்றுக் கொள்ள முடிந்தது'' என்று பதிலளித்தார் ஸி. ஆர்.

''கவர்னர் மாளிகைக்கு வரும் விருந்தினர்களுக்கு அசைவ உணவு அளிப்பதா?' என்பது ஸி. ஆருக்கு ஒரு மனப் போராட்டமாக விளங்கியது. ஆரம்பத்தில், 'முடியவே முடியாது; கூடவே கூடாது!' என்றுதான் எண்ணினார். பிறகு தமது கருத்தை மாற்றிக் கொண்டார். தாம் அருந்தும் அதே மேஜையில் அசைவ உணவும் பரிமாறப்படுவதைச் சகித்துக் கொண்டார். கவர்னர் மாளிகையின் சமையலறை இரண்டாகப் பிரிக்கப்பட்டது. விருந்தினர்கள் அவரவர் விருப்பத்துக்கு ஏற்ப, சைவ, அசைவ உணவுகளை உண்டனர்.

இதேபோல் ஸி. ஆர். தமது விருந்தினருக்கு மதுவும் பரிமாறுவாரா? ''கூடாது'' என்று தீர்மானமாக முடிவெடுத்தார் ஸி. ஆர். அயல் நாட்டினராயினும் சரி, பெரிய மனிதரானாலும் சரி, யாரானாலும் தம்மெதிரே குடிக்க முடியாது! ஆனால் ''அதில்லாவிட்டால் சரிப்படாது'' என்ற அளவுக்குப் பழக்கப் பட்டுப்போன சிலருக்கு அவர்கள் அறையிலேயே அளவாக மது வழங்குமாறு தமது பணியாளருக்கு ஸி. ஆர். கட்டளையிட்ட சில தருணங்களும் உண்டு.

குதிரைப் பந்தயமும் ஒரு பிரச்னையாயிற்று.

(தொடரும்)

தமிழாக்கம்:

கி. ராஜேந்திரன்

நானா தமிழ்த் துரோகி?

''என்னைத் தமிழ்த் துரோகி என்றெல்லாம் திட்டிக் கடிதங்கள் எழுதுகிறார்கள். தாய் மொழி தமிழ் மீது பற்று இல்லாமலா நான் எஸ். எஸ். எல். சி. தமிழ்ப் பரீட்சையில் 93 சதவிகிதம் மார்க் வாங்கினேன்? இத்தனை தமிழ்ப் பேச்சுப் போட்டிகளில் கலந்து கொண்டேன்?'' என்று வருத்தமும் கோபமுமாகக் கேட்டார் கீதா மீனாட்சி.

ஆமாம், சமீபத்தில் ராஜீவ் காந்திக்குக் கடிதம் எழுதி, அவரிடமிருந்து பதில் வரப் பெற்று, செய்தித் தாள்களில் எல்லாம் அடிபட்ட அதே கீதா மீனாட்சிதான்.

பேச்சு, நடிப்பு, தவிர பாட்டு, ஓவியம் வரைதல் போன்ற போட்டிகளிலும் கலந்து கொள்ளும் கீதா மீனாட்சி பரிசு இல்லாமல் வீடு திரும்பியதே இல்லையாம்.

ஆல் ரவுண்டர் கீதா மீனாட்சி வெளிப்படுத்தும் வலிமையான கருத்து: ''தமிழை யாராலும் அழிக்க முடியாது!''

— மௌஷ்மி



கோபியின் மிருதங்க அரங்கேற்றம்


தமிழ்நாடு பிராமணர் சங்கம், சென்னை மாவட்டத்தின் தலைவர் திரு **S. பாலசுப்பிரமணியன்** தலைமையில், சென்னை ஆர்..லட்சுமி நாராயணன் அவர்களின் குமாரன் திரு **கோபி**யின் மிருதங்க அரங்கேற்றம் மயிலை சாஸ்திரி ஹாலில் நடைபெற்றது. இசை நிகழ்ச்சி அளித்து உதவியவர் கல்கத்தா கிருஷ்ணன் அவர்கள். எல். கோபி மிருதங்க வித்வான் கும்பகோணம் நாராயணசுவாமி ஐயரின் சிடர். பதினொன்றும் வகுப்பில் படித்து வரும் கோபி நடந்த நான்கு ஆண்டுகளாக நாராயணசுவாமி ஐயரிடம் மிருதங்கம் பயின்று வருகிறார் கைவாகு நன்றாக இருக்கிறது. கையில் நல்ல நாதமும் தென்படுகிறது. நிரவல் ஸ்வரப் பிரஸ்தாரத்திற்கும் பாட்டிற்கும் நன்கு போஷித்து வாசிக்கும் ஆற்றல் இருக்கிறது. அன்று கோபி வாசித்த ஆதி தாளம் இரண்டு களை சம இடத்திற்கான தனி ஆவர்த்தனமும் அப்போது கையாண்ட ''திச்ர கண்ட மிச்ர'' அமைப்புகளும் நல்ல சுவையுடன் காணப்பட்டன. கோபியின் முன்னேற்றத்தில் அவரது பெற்றோர்கள் மிகுந்த அக்கறை கொண்டிருக்கின்றனர்.





— வி.ம.

தியாகய்யர் வீட்டு வௌவால்கள்!



ராஜீவ் காந்தி விஜயத்தின் போது வெடிகுண்டு வைக்கப்பட்ட குடமுருட்டி ஆற்றுப் பாலத்தைத் தாண்டி, பஸ் ஸ்டாண்டில் இறங்கி, விசாரித்ததும், ''யூனியன் ஆபீஸுக்கு எதுத்த தெருவில ரைட் சைடுல இரண்டு மூணு வீடு தள்ளி, வெளியில போர்டு இருக்கும்'' என்றார்கள்.

போய்ப் பார்த்தால், பூட்டு தொங்கியது. மறுபடி விசாரிக்க, ''மாவாட்டற மிஷின்ல பாருங்க; செகரட்டரி முத்துசாமி ஐயர் இருப்பாரு; சாவி வாங்கிட்டு வாங்க'' என்று பதில்!

அப்படியே செய்தோம். செயலாளர் கூடவே வந்தார். தியாகப்பிரும்மத்தின் வீட்டைத் திறந்து காட்டினார். வாசலில் வராந்தா போல. அடுத்து ரேழி. உள்ளே ஹால். தியாகப்பிரும்மம் படம். அதற்கு சீரியல் செட் அலங்காரம் பலமாய் இருந்தது. பல சங்கீத விற்பன்னர்களின் போட்டோக்கள் வரிசையாய்ச் சுவரில். கூடம் சுத்தமாய் இருந்தது.

''பரவாயில்லையே! ஹால் க்ளீனாய் இருக்கிறதே!'' என்று பாராட்டுத் தெரிவித்த போது, ''முன்னே இங்கேயெல்லாம் வௌவால் பறந்து கொண்டிருக்கும். ஒரு வழியாய் அவற்றை விரட்டி விட்டோம்'' என்றார், செயலாளர்.

கூடத்தைத் தாண்டிப் போனால் ஒரு நடை. பக்கத்தில் ஒரு ரூம். ''திறந்து பார்க்கலாமா?''

''அது கிச்சன். கொஞ்சம் ஜாக்கிரதை!''

விஷயம் புரியாமல் பயத்துடன் கதவின் தாழ்ப்பாளைத் திறந்து உள்ளே நுழைந்தோம்.

'க்கிர்ரீச்...!' — ஏதோ தலையில் படபடவென தட்டிவிட்டுப் பறந்தோடிப் போயிற்று. 'கப்'பென ஒரு நாற்றம்!

''உள்ளே நிறைய வௌவால்கள் இருக்கும் சார்!'' என்றார். அண்ணாந்து பார்த்தால் கறுப்புக் கறுப்பாய் வௌவால்கள் தொங்கிக் கொண்டிருந்தன. கீழே அவை செய்த அசுத்தங்கள்.

ஒரு பக்கமாய்த் தரையில் பள்ளம் தோண்டி நீண்ட அடுப்பு. 'தியாகப்பிரும்மம் வீட்டு அடுப்பு இத்தனை பெரிசா?' என்று வியந்து கொண்டிருந்தபோது, ''சாதாரணமாக இந்த ரூமைத் திறப்பதே இல்லை. விழாவின்போது சமையலுக்குத் திறப்போம்; சுத்தம் பண்ணி உபயோகிப்போம்'' என்றார்.

தோட்டத்துக் கதவைத் திறந்து கொண்டு போனால் கிணற்றடி. அப்புறம் ஒரு கதவு. அதையும் திறந்தால் புதர் மண்டின பகுதி. அதையும் தாண்டினால், அரண்மனைக்குப் போகிற வழியாம்.

தியாகப்பிரும்மத்தை, மகாராஜா தமக்காகப் பாடச் சொன்ன போது மறுத்து விட்டாராம். ராஜாவுக்கோ இவர் சங்கீதத்தின் பால் கொள்ளைப் பிரியம். கேட்காமல் இருக்க முடியவில்லை. தியாகப்பிரும்மத்தின் வீட்டுத் தோட்டத்துப் பக்கம் தினம் வந்து உட்கார்ந்து கொண்டு, இவரது சங்கீதத்தைக் கேட்டு ரசிப்பாராம். இது பல நாள் சென்றுதான் தியாகப்பிரும்மத்துக்கே தெரிய வந்ததாம் — சொன்னார் காரியதரிசி.

தியாகப்பிரும்ம மஹோத்ஸவ சபாவினால் சுமார் 30 வருஷங்களுக்கு முன் ரூ. 7000 க்கு வாங்கப்பட்ட வீடு. தியாகய்யரின் இவ்வீட்டைச் சராசரியில் வாரத்துக்குப் பத்து இருபது பேராவது வந்து பார்த்துவிட்டுப் போகிறார்கள். சமையல் அறை வௌவால்கள், புதர் மண்டின தோட்டம் இவற்றை மறந்து விட்டால் முன் பகுதி நன்றாய்த்தான் பராமரிக்கப்படுகிறது. ஆக, இசைக் கலைஞர்கள், பகுதி நன்றிக் கடனைச் செலுத்தியுள்ளார்கள்; மிகுதியை என்று செலுத்தப் போகிறார்கள்?

— **எஸ். சந்திரமௌலி**

படம்: **சோமு**


விண்ணில் வண்ணம்
காட்டும் வாணம்;
உன்னில் திண்மை
வளர்க்கும் ஆலயம்
எதிர்ப்பக்க வண்ணப்படம்:
டி. தண்டபாணி

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Limited, at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600 032.

Editor: K. Rajendran

Editorial Office: 28, Fifth Street, Lake Area, Nungambakkam, Madras-600 034. (Phone: 473389)

Administrative Office: Race Course Road, Guindy, Madras-600 032 (Phones: 431543, 434157 Press: 434190)



REGISTERED No. M 4392
Registered as a Newspaper in Sri Lanka

